www

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 236 ஆடி 07 ஆம் நாள் | செவ்வாய்க்கிழமை 23 ஜூலை 2019 | வள்ளுவர் ஆண்டு 2050


# கன்னியா விகாரைக்கு இடைக்காலத் தடை

## திருகோணமலை மேல் நீதிமன்றம் உத்தரவு

**கொழும்பு, ஜூலை 23**

**திருகோணமலை, கன்னியாவில் பிள்ளையார் ஆலயம் இருந்த இடத்தில் பௌத்த விகாரை அமைப்பதற்குத் திருகோணமலை மேல்நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.**

**திருகோணமலை கன்னியா வெந்நீரூற்று, பிள்ளையார் ஆலயம் மற்றும் மாரியம்மன் ஆலயம் ஆகியவற்றின் ஆதனங்களின் தர்மகர்த்தா சபையின் நம்பிக்கைப் பொறுப்பாளர் கணேஷ் கோகிலரமணி, அந்தப் பகுதிகளில் அரங்கேற்றப்படும் அடாவடிகள் தொடர்பாக திருகோணமலை மேல்நீதிமன்றத்தில் கடந்த 19ஆம் திகதி எழுத்தாணை மனுத் தாக்கல் செய்திருந்தார்.**

19

## ஹேமசிறி, பூஜித் வழக்கு ஒக். 3க்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 23

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் கட்டாய விடுமுறை வழங்கப் பட்டுள்ள பொலிஸ்மா அதி

19

## 6 லட்சம் கடிதங்கள் தேக்கம்!

கொழும்பு, ஜூலை 23

தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக மத்திய தபால் பரிமாற்றகத்தில் 6 இலட்சத்துக்கும் மேற்பட்ட கடிதங்கள் தேங்கியுள்ளன என்று தபால் திணைக்களம் தெரி

06

## அரசு மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் போலி

*அடித்துக் கூறுகின்றார் மைத்திரி*

கொழும்பு, ஜூலை 23

நாட்டில் பயங்கரவாதத் தாக்குதல் நடந்து 3 மாதங்கள் முடிந்துள்ள நிலையில் அரசுக்கு எதிராக முன்வைக்கப்படும் அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் நிராகரிக்கின்றேன் என்று தெரிவித்துள்ளார் அரச தலைவர் மைத்திரிபால சிறி

06

## கல்முனைச் சர்ச்சைக்கு ஒரு வாரத்துக்குள் தீர்வு!

முஸ்லிம் எம்.பிக்களுக்கும் உறுதியளித்தார் ரணில்!

கொழும்பு, ஜூலை 23

கல்முனை வடக்குப் பிரதேச செயலக விவகாரம் உட்படப் பல விடயங்களில் முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்பட்டு வருகின்றது. எனவே, முஸ்லிம்களின் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும்வரை அமைச்சுக்களைப் பொறுப்பேற்கமாட்

19

## 3 இளைஞர்கள் பொலிஸரால் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 23

குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் நேற்று 3 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மானிப்பாய் பொலிஸார்

19



## தொடருந்து விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

வவுனியா, ஜூலை 23

வவுனியா, மூன்றுமுறிப்புப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற தொடருந்து விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மதுசன் தலிந்த ஜெயவீர (வயது-25) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார். இவர் வவுனியாவில் உள்ள பேருந்துத் தரிப்பிடம் ஒன்றில் பேருந்துகளைச் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டு வந்தவர் என்றும், கல்கமுவவைச் சேர்ந்தவர் என்றும் கூறப்படுகின்றது.

07

## தமிழ் - முஸ்லிம்கள் முட்டிமோதக்கூடாது

*ரணில் அறிவுரை*

கொழும்பு, ஜூலை 23

கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்தால் தமிழ், முஸ்லிம் சமூகத்தினர் முட்டிமோதக்கூடாது. நிர்வாக ரீதியிலான இந்தப் பிரச்சினைக்கு ஒரு வாரத்துக்குள் தீர்வு பெற்றுக்கொ

07

## உரிய காலத்தில் தேர்தல் நடக்கும்

*தேர்தல்கள் ஆணையாளர் திட்டவட்டம்*

கொழும்பு, ஜூலை 23

அரச தலைவர் தேர்தலைப் பிற்போடுவதற்கான அதிகாரம் அரச தலைவருக்குக் கிடையாது. நாட்டின் சட்டத்தை மீற முற்படாது தேர்தலை நடத்த உடன் நடவ

19

## மைத்திரி வாக்குப் பொய்த்தது நீடிக்கிறது அவசர கால சட்டம்!

கொழும்பு, ஜூலை 23

அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் அரசிதழ் அறிவிப்பு நேற்று அரச தலைவரால் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நாட்டில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலின் பின்னர் அவசர காலச் சட்டம் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

19

## புளியங்குளத்தில் வெடிபொருள்கள்

வவுனியா, ஜூலை 23

வவுனியா, புளியங்குளத்தில் நேற்றுக் காலை வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. இராணுவத்துக்குக் கிடைத்த தகவல் ஒன்றை

07


யாழில் பிரமாண்டமான வளாகத்தில்

One year Top Up Degree

UGC Recognized International Degree

www.blccampus.edu.lk

- Bachelor of Information Technology
- Bachelor of Business Administration
- BSc in Psychology
- Bachelor of Business in Banking & Finance
- B.Ed (Teaching of English as Second Language-TESL)

✔ தனித்துவமான உயர்கல்விச் சேவை.
✔ தேர்ச்சியும் அனுபவமும் மிக்க சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்

For more information: 0777 174 443

Entry requirement
HND / any Equal Qualification in the similar study



BLC CAMPUS

4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443 E - info@blccampus.edu.lk

# ஒவ்வொரு ராசிகளும் பணச்சேமிப்பும்



பணத்தைச் சம்பாதிப்பதை விட அதைச் சேர்த்து வைப்பது என்பது மிகவும் கடினமான ஒன்று. அதுமட்டுமல்லாமல் எமது அன்றாட தேவைக்குப் பணம் மிகவும் முக்கியம். அதன் தேவை யாருக்கும் போதுமானதாக இருப்பதில்லை. ஒவ்வொருவரும் தாங்கள் சம்பாதிக்கும் பணத்தை வித்தியாசமான வழிகளில் செலவழிக்க முயலுகின்றனர்.
சிலர் ஆடம்பர செலவுகளையும், சிலர் குடும்பத்துக்காகவும், சிலர் சொத்துக்கள் வாங்கவும் பணத்தை பயன்படுத்துகின்றனர்.
நாம் சம்பாதிக்கும் பணத்துக்கும் செலவழிப்பதற்கும் ராசிக்குமே நிறைய தொடர்பு உள்ளது என்கிறார்கள் ஜோதிடர்கள்.

**மேடம்:**
மேட ரர்சிக்காரர்கள் பணத்தை கையாளத் தெரியாதவர்கள். இவர்கள் மனக்கிளர்ச்சியுடன் செயற்படுவார்கள். புதிய ஆடை, புதிய கார் வாங்க வேண்டும் என்றால் போதும் பணத்தைத் தண்ணியாகச் செலவழிக்கக் கூடிய பேர்வழிகள். இருப்பினும் சொந்தமாக சம்பாதிக்கும் திறனைக் கொண்டு செயற்படுவார்கள். பணத்தை மிச்சப்படுத்த இலக்குகளை நிர்ணயித்து கொள்வார்கள். இலக்குகளை அடைந்து அதற்கான வெகுமதியையும் தட்டிச் செல்ல தவறமாட்டார்கள். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் எதிர்காலத்துக்கு இவர்களது மனக்கிளர்ச்சியை ஓரளவுக்கு கட்டுப்படுத்தினாலே போதும்.

**ரிஷபம்:**
ரிஷப ராசிக்காரர்கள் பிறக்கும் போதே பண மேலாளராக இருப்பார்கள். வாழ்க்கையின் மிகச் சிறந்த விடயங்களையும் அனுபவிப்பதில் வல்லவர்கள். புதிய ஆடை, நகைகள் என்றால் போதும் இவர்களை கையில் பிடிக்க முடியாது. ஆனால் மிகவும் பொறுப்பானவர்கள், நம்பிக்கையானவர்கள். எனவே எதிர்காலத்துக்குப் பணத்தைச் சேமித்து வைப்பதில் வல்லவர்கள்.

**மிதுனம்:**
மிதுன ராசிக்காரர்களின் சிக்கலான மனப்பான்மை அவர்களை எளிதில் கணிக்க முடியாமல் செய்து விடும். இவர்களுக்கு பணத்தை நிர்வகிக்க தெரியாது. ஆனால் இவர்களுடைய பேச்சுத் திறன் ஒன்றே போதும் எளிதில் மக்களை கவர்ந்து பணம் சம்பாதித்து விடுவார்கள். இருப்பினும் சேமிப்பு, தங்களுடைய ஓய்வூதியம் போன்றவற்றை தாராளமாக செலவழிக்காமல் சேமிப்பது நல்லது.

**கடகம்:**
கடக ராசிக்காரர்களுக்குப் பணத்தைச் சேமிக்க யாரும் தேவையில்லை. இவர்கள் ஒரு கடின உழைப்பாளிகள். பணத்தை எதிர்காலத்தில் சேமிப்பது, முதலீடு செய்து தொழிலை வளர்ப்பது போன்றவற்றில் ஆர்வம் உடையவர்கள். அதே நேரத்தில் வீடு, குடும்பத்துக்கான செலவுகளையும் நன்றாகப் பார்த்துக் கொள்வார்கள். கடன்களை அடைக்க அதற்கென்று தனி நிதி ஒதுக்கி விடுவார்கள்.

**சிம்மம்:**
சிம்ம ராசிக்காரர்கள் பணத்தை தேடி கண்டுபிடிப்பவர்கள். அவர்கள் பணம் சம்பாதிப்பதில் லட்சியவாதிகள் மட்டுமல்ல ஆக்கப்பூர்வமானவர்களும் கூட. அவர்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு விஷயங்களையும் அனுபவிக்க கூடியவர்கள். இவர்கள் மலிவான பொருட்களை வாங்குவதை விட விலையுயர்ந்த பொருள்களையே விரும்புவார்கள்.

**கன்னி:**
கன்னி ராசிக்காரர்கள் இயற்கையாகவே கடின உழைப்பாளிகள். எனவே இவர்களுக்கு நிதி நிலைமை சமாளிப்பது எளிதான ஒன்று. பணத்தை எவ்வாறு சேமிக்க வேண்டும் என்று இவர்களுக்கு யாரும் சொல்லத் தேவையில்லை. இவர்களின் உந்து சக்தியே போதும் பணத்தைச் சிக்கனமாகச் செலவழிப்பார்கள்.

**துலாம்:**
துலாம் ராசிக்காரர்கள் செலவழிப்புச் சேமிப்பு என்ற இரண்டிலும் கெட்டிக்காரர்கள். இரண்டையும் சமமாக வைத்து செயற்படுபவர்கள். சமூகத்தில் உள்ள தங்களது காப்பாற்ற மட்டுமே இவர்கள் செலவிடுவார்கள். ஆனால் கடின உழைப்பால் சம்பாதித்த பணத்தை செலவழிக்க நிறையவே யோசிப்பார்கள்.

**விருச்சிகம்:**
பணப்பராமரிப்பு என்று வந்தாலே விருச்சிக ராசிக்காரர்கள் கட்டுப்பாட்டில் இருப்பவர்கள். கொள்முதல் செய்வதற்கு அல்லது முதலீட்டுக்குச் செல்வதற்கு முன்பு அவர்கள் நிறைய ஆராய்ச்சிகளில் ஈடுபடுவார்கள். . அது அவர்களுக்கு சரி என்று பட்டால் மட்டுமே வாங்குவார்கள். பெரும்பாலான நேரங்களில் அவர்களின் உள்ளுணர்வும் சரியாகத்தான் இருக்கும். இதுவே அவர்கள் சரியான முதலீட்டை நோக்கிச் செல்ல காரணமாக அமைகிறது.

**தனுசு:**
தனுசு ராசிக்காரர்கள் வியாழன் கோளால் ஆளப்படுவதால் இவர்களுக்குப் பணம் வருவதில் எந்த பிரச்சினையும் இல்லை. இருப்பினும் இவர்களின் பொறுமையற்ற குணம் செலவுகளுக்கு வழிவகுக்கும், சிறந்த முடிவுகளையும் எடுக்க தெரியாது.
எனவே இவர்கள் எதையும் செய்வதற்கு முன் ஆராய்ந்து கொள்வது நல்லது.

**மகரம்:**
இவர்கள் பிறக்கும் போதே பணத்த்தக் கையாளத் தெரிந்தவர்கள். இதற்கு காரணம் இவர்களின் ஒழுக்கமும், ஒழுங்கான நடவடிக்கையுமே ஆகும். ஆனால் இவர்களின் எண்ணமே எல்லாத்தையும் கெடுத்து விடும். மற்றவர்களுக்கு முன் மாதிரியாக திகழ வேண்டும் என்ற எண்ணமே இவர்களைச் சிரமத்தில் ஆழ்த்தி விடும்.

**கும்பம்:**
இருக்கின்ற ராசிகளிலே இவர்கள் மிகவும் ஆக்கப்பூர்வமானவர்கள். பணம் செலவழிப்பதில் இவர்கள் தாராள வள்ளர்கள். இதுவே இவர்களைச் சிக்கலில் ஆழ்த்தி விடுகிறது. தொண்டு மற்றும் நன்கொடை என வருவதற்குள் தங்களுடைய நிதிநிலையைச் சீர்படுத்திக் கொள்ள வேண்டும்.

**மீனம்:**
இந்த ராசிக்காரர்களுக்குப் பணத்தைச் சேமிப்பது என்பது மிகவும் கடினமான விஷயம். இவர்கள் கனிவானவர்கள், பணத்தை விட வாழ்க்கைக்கு அர்த்தம் சேர்ப்பவர்கள்.
எனவே நிதிநிலையைப் பற்றி புரிந்து கொண்டு செயல்படுவதன் மூலம் நல்ல மாற்றத்தைக் காணலாம்.

# சுக்ரன் பெயர்ச்சிப் பலன்கள்





சுக்ரன் என்றால் இன்பம். மனித வாழ்க்கையில் அன்பு, பாசம், காதல் ஆகிய மூன்று இன்பங்களை அளிக்கக் கூடியவர். சுக்கிரன் சுக போகங்களின் அதிபதி. களத்திரகாரகன் சுக்கிரன் வாழ்க்கைத் துணையை அமைத்துக் கொடுப்பவர். ஆகையால் சுக்கிரன் நமது ஜாதக கட்டத்தில் நல்ல யோக அம்சத்துடன் இருப்பது அவசியம். இவருடைய தசா காலமான 20 வருடங்களில் மிகப்பெரிய ராஜ யோக பலன்கள் உண்டாகும்.
பூவுலகில் நாம் அனுபவிக்கின்ற அனைத்து வகையான இன்பங்களுக்கும் காரகன் "சுக்கிர பகவான்" ஆவார். இந்த சுக்கிர பகவான் ஜூன் மாதம் 29 ஆம் திகதி நள்ளிரவு 01.47 மணியளவில் "ரிஷப" ராசியிலிருந்து "மிதுன" ராசிக்கு பெயர்ச்சியாகியுள்ளார். இந்த பெயர்ச்சியால் 12 ராசியினருக்கும் ஏற்படக்கூடிய பலன்களை இங்கு தெரிந்து கொள்ளலாம்.

(நேற்றைய தொடர்ச்சி)

**விருச்சிகம்:**
விருச்சிகம் ராசிக்கு 8ஆம் இடமாகிய மிதுனத்திற்கு சுக்கிரன் பெயர்ச்சியாகியிருப்பதால் மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். உறவினர்கள் மற்றும் வெளியாட்களிடம் மதிப்பும் மரியாதையும் மிகும். பிரிந்த தம்பதிகள் ஒன்று சேர்வார்கள். புதிய ஆடை மற்றும் ஆபரண சேர்க்கை உண்டாகும். தொழில்களில் நல்ல இலாபம் ஏற்படும். கலைஞர்களுக்கு வெளிநாடுகள் செல்லும் யோகம் உண்டாகும். விவசாயம் செய்பவர்களுக்கு இலாபம் கிடைக்கும்.

**தனுசு:**
தனுசு ராசிக்கு 7ஆம் இடமாகிய மிதுன ராசிக்கு சுக்கிரன் பெயர்ச்சியாகியிருப்பதால் அரசிலியலிலிருப்பவர்கள் எதிலும் சற்று பொறுமையோடு இருக்க வேண்டும். எல்லாவற்றிலும் தடைகளும், தாமதங்களும் ஏற்படும். உங்களுக்கு வரவேண்டிய பணவரவுகளில் தாமதங்கள் ஏற்படும். ஒரு உடல்நலத்தில் அடிக்கடி பாதிப்புகள் ஏற்படலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு, பணியிட மாற்றங்கள் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் கடின முயற்சி செய்ய வேண்டும்.

**மகரம்:**
மகர ராசிக்கு 6ஆம் இடமான மிதுன ராசியில் சுக்கிரன் பெயர்ச்சியாகியிருப்பதால் குடும்பத்தில் கணவன் மனைவியிடையே ஒற்றுமை அதிகரிக்கும். திருமணம் போன்ற சுப காரியங்கள் தாமதம் ஆகும். உடலாரோக்கியம் சிறப்பாக இருக்கும். பிறருடன் பேசும் போது வார்த்தைகளில் கவனம் தேவை. தன வரவுகள் சராசரியாக இருக்கும். உத்தியோகத்திலிருப்பவர்களுக்கு பதவி உயர்வுகள் கிடைக்க வாய்ப்புண்டு.

**கும்பம்:**
கும்ப ராசிக்கு 5ஆம் இடமாகிய மிதுன ராசிக்கு சுக்கிரன் பெயர்ச்சியாகியிருப்பதால் உடல் ஆரோக்கியத்தில் சிறிது குறைபாடுகள் ஏற்பட்டு நீங்கும். சகோதர உறவுகளால் உங்களுக்கு நன்மைகள் உண்டாகும். தொழில் வியாபாரங்களில் சராசரியான லாபங்கள் கிடைக்கும். பிரிந்து சென்ற உறவினர்கள் நண்பர்கள் மீண்டும் ஒன்று சேர்வார்கள். ஒரு புதிய நபர்களிடம் பணம் சம்பந்தமான விடயங்களில் எச்சரிக்கை அவசியம்.

**மீனம்:**
மீனம் ராசிக்கு 4ஆம் இடமாகிய மிதுன ராசிக்கு சுக்கிரன் பெயர்ச்சியாகியிருப்பதால் உடல் ஆரோக்கியம் சிறக்கும். சிலருக்கு புதிய வாகனங்கள் வாங்கும் யோகம் ஏற்படும். தொழில், வியாபாரங்களில் நல்ல லாபங்கள் கிடைக்கும். சிலருக்கு பெண்களின் உதவிகளால் அதிக தனலாபங்கள் உண்டாகும். குழந்தைகளால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். உறவினர்கள் மத்தியில் உங்களுக்கு மதிப்பு உண்டாகும். புதிய வீடு, வாகனங்கள் வாங்கும் யோகம் ஏற்படும்

## துயர் பகிர்வு



தோற்றம் 25.07.1931 மறைவு 20.07.2019

அல்லைப்பிட்டி. வெண்புரவிநகர் குடியிருப்பு நிறுவுநர் - இயக்குநர் அருட்பணி அமிர்த ஜெயசேகரம் அவர்களின் சகோதரி

**யோசேப்பின் சௌந்தரி யேசுதாசன்**

அவர்களின் மறைவறிந்து எமது நெஞ்சம் நெகிழ்ந்த துயர்தனை பகிர்ந்து கொள்கிறோம்.

**வெண்புரவிநகர் மக்கள்.**

(CS 26865) (04.07)

## வீடு வளவு விற்பனை

அச்சுவேலி தெற்கு பயித்தோலை வீதிச் சந்திக்கு அண்மையில் உள்ள வீடு வளவு விற்பனைக்குள்ளது.

- **மூன்று பரப்புக் காணி சுற்றுமதில்**
- **அண்மைக் காலத்தில் கட்டப்பட்ட பெரிய வீடு**

(CS/26856)(11.17)

**076 387 1990**

## தேவை

**காத்தோட்டிக்காய்**

**தொகையாகத் தேவை.**

**நல்லவிலைக்கு வாங்கப்படும்.**

**070 148 5637**

## வேலைக்கு ஆட்கள் தேவை

- சப்ளையர்ஸ்
- ஓடர் ரூமில் வேலை செய்பவர்
- கிளினிங் வேலை செய்பவர்
- றோல் சுற்றுபவர்

**077 267 2888**

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 23.06.2019 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர்**

## வைத்தீஸ்வரன் குணாளன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (23.07.2019) செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும். **வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை மறுதினம் (25.07.2019) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் பன்னாலை, வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.** அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி வழிபாட்டிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன்அழைக்கின்றோம்.

அன்னார் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதிலிருந்து உரிய கவனிப்பை மேற்கொண்ட மருத்துவர்கள். தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்களுக்கும் பிரிவுச் செய்தி கேட்டு எமக்குப் பல வழிகளிலும் உதவி செய்த. ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும் இந்தத் தருணத்தில் நன்றி கூறுகின்றோம்.

தயவு செய்து இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக மனம் உவந்து ஏற்றுக் கொண்டு அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு அன்புரிமையுடன் கேட்டுநிற்கின்றோம்.

**வன்னியசிங்கம் வீதி,**
**தெல்லிப்பழை மேற்கு.**

**குடும்பத்தினர்.**
**077 749 9697**

# மரண அறிவித்தல்

## கந்தையா நடராசா



**தோற்றம்** 30.04.1937 **மறைவு** 21.07.2019

சரசால்ல வடக்கை பிறப்பிடமாகவும். இல. 15/16. சங்கிலியன் வீதி நல்லூரை தற்போதய வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா 21.07.2019 ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை தங்கம்மா தம்பதியினரின் மருமகனும் கனகம்மாவின்அன்புக்கணவரும்சுப்பிரமணியம்.மகேஸ்வரி.காலஞ்சென்றவர்களான தங்கம்மா. மார்க்கண்டு. இராசையா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அமுதினி. அன்பரசன் (சுவிஸ்). அகலினி (ஜேர்மனி). அருந்தினி (ஆசிரியர். யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம்). அகிலரசன். அஜந்தினி (லண்டன்) அருளரசன் (லண்டன்) ஆகியோரின்அன்புத்தந்தையும்இரவீந்திரன் (Ravee Enterprises). பாமினி (சுவிஸ்). பாலச்சந்திரன் (ஜேர்மனி). குருபரன் (Ambika Dispensary) , சிவதாசன் (லண்டன்). சிவதர்சினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நிசாந்தன் (R.N Builders). சங்கீதா (ஆசிரியர். யாழ்/இந்துக்கல்லூரி). வைஸ்ணவி (NTB Jaffna). அபிநயன். ஆதவன். அக் ஷயா (சுவிஸ்). நிகேஷ் . நியூரிசா (ஜேர்மனி). பிறையொளி. தாரகி (மாணவிகள். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).ஷாண். ஷைலி. திவ்யா. கிருத்விக் (லண்டன்) ஆகியோரின் அன்புப்பேரனும் தமன்யா.மிதுன்யா ஆகியோரின் பாசமிகு பூட்டனும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2019) செவ்வாய்க்கிழமை மு.ப 10.30 மணியளவில் இல.15/16 சங்கிலியன் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுபிற்பகல்1.00மணியளவில்பூதவுடல் சரசாலைவடக்குகொம்பிக்குளம்இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அன்னவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**15/16, சங்கிலியன் வீதி,**
**நல்லூர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 291 5318, 077 544 6476**


Yarl Smart Water Solution (Pvt) Ltd
உங்கள் வீடுகளில் உள்ள கிணற்று
நீர் பிரச்சினைகளில் இருந்து
விடுபட வேண்டுமா?
LIFE TIME
Service Warranty
30 Liters Per Hour
60 Liters Per Hour
SPECIAL OFFER
250 LPH Water Purification Plant.
யாழ் மக்களின் நீர்ப்பிரச்சினைகளுக்கு
ஏற்ற முறையில் 5000/- இல் இருந்து
நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்.
நீரில் உள்ள பிரச்சினைகளின்
தீர்வாக நாங்கள்...,
Hotline:-
077 057 3684
077 473 9802
077 112 6410
Head Office:- No.341,K.K.S Road,
Jaffna.
021 430 0044
Branch:-Karadippokku Junction,
Kilinochchi.
021 430 0045


திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்
இந்தியன் செலக்‌ஷனின்
ஆடி மாத
ஆடைத்
திருவிழா
புத்தம் புதிய
ஆடைத்
தெரிவுகள்
காஞ்சிபுரம் பட்டுப் புடைவைகள்
திருமணப் பட்டுப் புடைவைகள்
சல்வார்கள்
சல்வார் துணிகள்
மொடர்ன் டொப்
டெனிம் டொப்
மொடர்ன் சூட்
பார்ட்டி புரொக்
சேட், T-சேட், ரவுசர்
இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்
காலம்: 13.07.2019 - 28.07.2019
ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்
இந்தியன் செலக்‌ஷன்
அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்

## கண்ணீர் அஞ்சலி

**மன்ற உறுப்பினர் க.இராஜகுலசிங்கம்**
**( உரிமையாளர் - அருள் விநாயகர் மோட்டேர்ஸ்,**
**சாவகச்சேரி)** அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி சரஸ்வதி கணபதிப்பிள்ளை**
அவர்கள் 21.07.2019 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கிறது.

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com
450/=

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்




**அமரர் திருமதி**
### சுலோசனாராணி யோகேஸ்வரன்
**(ஓய்வுபெற்ற சுருக்கெழுத்தாளர், நகர அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்பு)**

23.06.2019 இல் இந்தியாவில் காலமான 3ஆம் கட்டை, கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும் கொழும்பு, நாரகென்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திருமதி சுலோசனாராணி யோகேஸ்வரனின் (ஓய்வு பெற்ற சுருக்கெழுத்தாளர், நகர அபிவிருத்தி அதிகார சபை, கொழும்பு) இழப்பிற்கு நேரில் வந்தும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் வழங்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (23.07.2019) செவ்வாய்க்கிழமை கீரிமலையில் இடம்பெறும். அதே தினத்தில் இணுவில் மஞ்சத்தடியில் உறவினர் இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெறும்.

**மஞ்சத்தடி,**
**இணுவில்.**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25 . 07 . 1931 | 20 . 07 . 2019 |

### திருமதி யோசப்பின் சௌந்தரி யேசுதாசன்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும். கச்சேரி நல்லூர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோசப்பின் சௌந்தரி யேசுதாசன் 20.07.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான தம்பு கந்தையா அமிர்தநாதர் - ஆன்பொன்றோஸ் தம்பதிகளின் அன்பு மகளும். அமரர்களான வஸ்தியாம்பிள்ளை சாமிநாதர் - அன்னம்மா தம்பதிகளின் மருமகளும். அமரர் வின்சன் யேசுதாசனின் அன்பு மனைவியும். அமரர் லோறன் சியா. கமலம் மற்றும் றீற்ரா (கனடா). அமரர் அன்ரன் குணசேகரம் மற்றும் அரியமலர் (கனடா). அருட்தந்தை பிரான்சிஸ் யெயசேகரம் அவர்களின் சகோதரியும். மொறின் - றூபா (கனடா). பிராங் (லண்டன்). நிரஞ்சன் (கனடா). டொறின் - மீரா (லண்டன்) அவர்களின் பாசமிகு தாயாரும். செல்வமோகன். ஆன். செல்வராணி. இராசசூரியர் ஆகியோரின் மாமியாரும். அமரர் வரப்பிரகாசம். சந்திரா குணசேகரம். இராமநாதன் சீவரத்தினம். அமரர் சாமிநாதர் விகோரி. செலஸ்ரீன் சாமிநாதர் (சின்னக்கா) அவர்களின் மைத்துனியும். யூடி. மரியோ. விவியன். நத்தானியல். துவாரகா. டீப்திகா. ரைரோன். றமோன். யோவானா. கரீம் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அவர்களின் இறுதிப்பயண இரங்கல் திருப்பலி புதன்கிழமை (24.07.2019) பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். தூய திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு அவர்களின் உடலம் மரியன்னை கல்லறைத் தோட்டத்தில் மண்ணோடு சங்கமமாகும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**17/3, கச்சேரி நல்லூர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: அருட்பணி அமிர்த யெயசேகரம் (சகோதரன்), பிள்ளைகள்**

## மரண அறிவித்தல்

# இராசதுரை விஜயரத்தினம்(SVM கிளாக்கர்)

இணுவில் கிழக்கு தியேட்டர் வீதியைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் வடக்கு கற்பகப்பிள்ளையார் வீதியை வதிவிடமாகவும் கொண்ட இராசதுரை விஜயரத்தினம் 19.07.2019 வெள்ளியன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சத்தியதேவியின் அன்புக் கணவரும், ஜெயந்தன் (சுவிஸ்), அகிலன் (ஜேர்மனி), தீபா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகிர்தா (சுவிஸ்), துமிரா (ஜேர்மனி), ஞானேஸ்வரன் (கனடா) ஆகியோரின் மாமாவும், காலஞ்சென்றவர்களான இணுவில் கிழக்கு இராசதுரை அன்னரத்தினம் தம்பதியரின் மூத்த புத்திரனும், காலஞ்சென்றவர்களான உரும்பிராய் வடக்கு தம்பிப்பிள்ளை மகிழ்மணி தம்பதியரின் மூத்த மருமகனும், காலஞ்சென்றவர்களான செல்வராசா (வேவி), அரியரத்தினம் (ஹட்டன்) மற்றும் யோகேஸ்வரன் (சுவிஸ்), ஜெயமலர், இந்திராதேவி, ஸ்ரீகாந்தன், ஸ்ரீசிவசண்முகராசா ஆகியோரின் சகோதரரும், மகாலக்சுமி, கலாமதி, ரஞ்சனேஸ்வரி, காலஞ்சென்ற கணேஷ் மற்றும் சிவராசலிங்கம் ஜெகதீஸ்வரி, சர்வானந்தம் காலஞ்சென்ற சாரதாதேவி மற்றும் சந்திராதேவி ஆகியோரின் மைத்துனரும், சோதிலிங்கத்தின் சகலனும் அபிசன் (சுவிஸ்), அக்சயா (சுவிஸ்), கர்ஷிவிகா (ஜேர்மனி), திஷகா (ஜேர்மனி), குஷகா (ஜேர்மனி), மதுமிலன் (கனடா), கஷ்வினி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2019) செவ்வாய்க்கிழமை உரும்பிராய் வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் மு.ப 9 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் எருளன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21.07.1946 | 19.07.2019 |

# கழுதையின் சாவு



காட்டூர் கிராமத்தில், தேவராஜ் என்ற வணிகர் இருந்தார். வியாபார நிமித்தமாக, அடிக்கடி வெளியூருக்குச் செல்வார். மூடைகளை சுமக்க, ஒரு கழுதை வைத்திருந்தார். அழகிய நாய் ஒன்றையும், அன்புடன் வளர்த்து வந்தார்.

ஒரு நாள் மூடை முடிச்சுகளை கழுதையில் ஏற்றி, வெளியூருக்குப் புறப்பட்டார். நாயும் உடன் சென்றது.

பகல் நேரம், கொளுத்தும் வெயில். வணிகருக்கு தாகம் எடுத்தது கழுதையை நிறுத்தி, ஒரு சிறு மூட்டையைப் பிரித்து, தண்ணீரை குடித்தார். அந்த பகுதியில், பசுமை அடர்ந்திருந்ததைக் கண்டு இளைப்பாற எண்ணி, ஒரு மரத்தடியில் படுத்தார்.

பெரும் சுமையால் அவதிப்பட்ட கழுதை, பசும் புல்வெளியைக் கண்டதும் மகிழ்ச்சியாக மேயத் தொடங்கியது.

கழுதையின் அருகே சென்ற நாய், "எனக்கு மிகவும் பசிக்கிறது; மயக்கம் வரும் போல் இருக்கிறது. தயவுசெய்து, சிறிது நேரம் தரையில் படுத்துக் கொள். உன் முதுகில் உள்ள, மூடையில், எனக்கு தேவையான உணவு உள்ளது. அதை தின்று, பசியை போக்கி கொள்கிறேன்; இந்த உதவியை செய்வாயா?" என்றது.

அந்த வேண்டுகோளை பொருட்டாக மதிக்கவில்லை கழுதை. அதன் மனதில், "நாய்க்குப் பசித்தால் எனக்கு என்ன?" என்ற எண்ணமே இருந்தது.

கெஞ்சிக் கதறிய நாய்க்கு, இரக்கம் காட்டாமல், புல் மேய்வதில் கவனம் செலுத்தியது. நாய் கதறியதால் எரிச்சல் அடைந்த கழுதை, "நச்சரித்து என்னை மேய விடாமல் தடுக்கிறாய்; இதை தொடர்ந்தால், எட்டி உதைத்துக் கொன்று விடுவேன். உனக்கு உணவு தேவை என்றால் எஜமானை எழுப்பி கேள்" என்றது.

பசியால் வாடிய நாய், பரிதாபமாக, எஜமான் அருகே சுருண்டு படுத்துக்கொண்டது.

அப்போது, அந்த வழியாக ஓநாய் ஒன்று, வேகமாக வந்து கொண்டிருந்தது. உணவு தேடிய ஓநாயின் கண்ணில், கழுதை தென்பட்டது.

ஓநாயைக் கண்ட கழுதைக்கு, உதறல் எடுத்தது. அது நாயிடம் மிகப் பணிவாக, "ஒரு ஓநாய் வருகிறது அதனிடமிருந்து என்னைக் காப்பாற்று" என்று கெஞ்சியது.

"கழுதையே உன் உயிர், ஓநாயின் கையில் உள்ளது; உன்னைக் காப்பாற்ற வேண்டிய எஜமான் தூங்கிக் கொண்டிருக்கிறார்; அவர் எழுந்ததும், உன் கோரிக்கையை சொல்; நிறைவேற்றுவார்" என்றது நாய்.

"நீ நன்றி உள்ள பிராணி; இப்படிச் சொல்லலாமா... எப்படியாவது என்னைக் காப்பாற்று" என்று கெஞ்சிய கழுதை மீது, ஓநாய் வேகமாக பாய்ந்து தாக்கியது.

அடுத்த கணம், சுருண்டு விழுந்து இறந்தது கழுதை. அதன் முதுகில் இருந்த மூட்டைகள் சிதறின.

**உதவி செய்து வாழ வேண்டும் என்பதை மனதில் பதியுங்கள்.**

# "என்றும் மூழ்காத கப்பல்"

'20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கட்டப்பட்ட பயணக் கப்பல்களுக்குள் மிகப்பெரியது. ரைட்டானிக் கப்பல் இது. ஒரு சொகுசுக்கப்பல். 46,000 தொன் நிறையுடைய இதன் கீழ் தளத்தில் சாதாரண பயணிகளும் மேல் தளத்தில் கோடீஸ்வரர்களும் பயணம் செய்யக் கூடிய வசதிகளைக் கொண்டது. இதன் நீளம் 269மீற்றர். இதன் அகலத்தை இரு உதைப்பந்தாட்ட மைதானங்களுக்கு ஒப்பிடலாம். இந்தக் கப்பலில் பல நீச்சல் தடாகங்குகள், விளையாட்டு பயிற்சி மைதானங்கள், திரைப்பட திரையரங்கள் இசை நிகழ்ச்சிகளுக்கான அரங்குகள் என்பவை அமைக்கப்பட்டிருந்தன. ஆங்கிலேயரால் கட்டப்பட்ட ரைட்டானிக் இங்கிலாந்தின் ஸதம்ரன் துறைமுகத்தில் இருந்து அமெரிக்காவின் நியூயோர்க் துறைமுகத்தை நோக்கி அத்திலாந்திக் சமுத்திரத்தினூடாக ஆயிரத்து361பயணிகள் 891 பணியாளர்கள் ஆகியோருடன் 10.04.1912இல் புறப்பட்டது. முதன் 4 நாள்கள் கப்பல் களியாட்டம் உல்லாசங்களில் மூழ்கிக் கிடந்தது. நான்காவது நாள் இரவு 14.04.1912 அன்று பெரிய பனிப் பாறையுடன் மோதி 2அரை மணி நேரத்துள் வட அத்திலாந்திக் கடலில் 3800மீற்றர் ஆழத்தில் நீரில் மூழ்கிப் போனது.

இந்தக் கப்பல் வெள்ளோட்டத்தின் போது 'ஆண்டவன் விரும்பினாலும் இந்தக் கப்பலை மூழ்கடிக்க முடியாது"என்று கப்பல் கப்டன் கூறிய வார்த்தைகள் பொய்த்துப் போயின. இவரது இந்த பெருமிதமான கூற்றுக்குக் காரணம் ரைட்டானிக் அடித்தளம் நீர் உட்புகாத 16 பல்வேறு பிரிவுகளாக அமைக்கப்பட்டிருந்தோடு ஏ்தாவது அசம்பாவிதத்தால் ஓரிரு பிரிவுகளுக்குள் நீர் சென்றாலும் ஏனைய பிரிவுகள் கப்பலை மிதக்க வைக்கும் என் பதாகும். இதனால் இந்தக் கப்பலை ஒருபோதும் மூழ்காத கப்பல் என சகலரும் நம்பினர். கப்பல் உறுதியான உருக்கு இரும்பினால் ஆக்கப்பட்டிருந்த போதிலும் வடக்கு அத்திலாந்திக் சமுத்திரத்தில் திரளும் கடும் குளிர் கொண்ட நீர் கப்பலின் இரும்பை இலகுவாக தெறிக்கும் நிலைக்கு மாற்றியிருந்ததால் சிறு மோதலையும் தாங்கிக் கொள்ள இயலாது போயிருக்கலாம் என்பது கப்பல் மூழ்கியதற்கான யுகங்களில் ஒன்றாகும்.

கப்பல் பனிப்பாறையுடன் நேரடியாக மோதாமல் தவிர்க்கப்பட்ட போதிலும் பக்கவாட்டில் பனிப்பாறையின் உராய்வினால் ஏற்பட்ட 300 அடி நீளமான வெடிப்பினூடாகவே நீர் கப்பலுள் புகுந்தது. கப்பல் இரண்டாகப் பிளந்து மூழ்குவதற்கு முன்னர் கப்டன் 05 பெண்களையும் சிறுவர்களையும் உயிர்காக்கும் படகுகளில் பத்திரமாக இறங்கிவிட்டு கப்டனுக்குரிய பாரம்பரிய சீருடையணிந்து கப்பலில் இருந்தவர்களுடன் தானும் மூழ்கி கப்டனுக்குரிய கடமையை நிறைவேற்றினார். உயிர்காக்கும் படகுகளில் சென்றவர்கள் மறுநாள் அங்கு வந்த 'காப்பாத்தியா' என்ற கப்பல் மூலம் காப்பாற்றப்பட்டனர்.


## அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் கனகரட்ணம் நவரட்ணராஜா

(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்)

கடந்த 23.06.2019 சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் 21.07.2019 ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன.

இன்று (23.07.2019) செவ்வாய்க்கிழமை வீட்டுக்கிருத்தியம் மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும், இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**மானிப்பாய் வீதி,**
**ஆறுகால்மடம்.**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

***ஆசிமட அரசடி விநாயக ஆலய ஆதீனபரம்பரையைச் சேர்ந்த***

### திருமதி தவமணி பஞ்சாட்சரம்ஐயா (தவம்)



மீசாலையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி பஞ்சாட்சரம் ஐயா 22.07.2019 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பஞ்சாட்சரம் ஐயாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னையா - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் இரத்தினசாமிஐயா - சின்னம்மா தம்பதிகளின் மருமகளும் பசாங்குசன் குருக்களின் அன்புத் தாயாரும் கவிதாவின் மாமியாரும் குலராசசிங்கம், காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் அருள்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தனுசிகா, கௌசல்யன், நர்க்ககி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி சமாதிக் கிரியைகள் இன்று (23.07.2019) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் ஆலடி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அரசடிப் பிள்ளையார் கோயிலடி,**
**கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.**

**தகவல்:**
**ப.பசாங்குசன் (மகன்)**

**077 659 2368**


### 6 லட்சம்...

வித்துள்ளது.

அவற்றில் மூன்றரை இலட்சம் கடிதங்கள் வர்த்தக ரீதியானவை எனவும், இரண்டரை இலட்சம் கடிதங்கள் சாதாரணத் தபால்கள் எனவும் தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன குறிப்பிட்டுள்ளார்.

எனினும் நாட்டிலுள்ள அனைத்துக் கட்டுப்பாட்டு நிலையங்களிலும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும், பெரும்பாலான உப மற்றும் மத்திய தபால் நிலையங்களில் மட்டும் சேவைகள் இடம்பெறவில்லை என்றும் தபால்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

சேவையில் இணைத்துக் கொள்ளும் நடைமுறையில் காணப்படும் சிக்கல்கள் தொடர்பில் ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்வுகளை இதுவரை நடைமுறைப்படுத்தாமை உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து தபால் ஊழியர்கள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

இந்தத் தொழிற்சங்க நடவடிக்கைக்கு நாடளாவிய ரீதியிலுள்ள தபால் ஊழியர்கள் ஆதரவு வழங்கியுள்ளனர் என்று ஒன்றிணைந்ததபால்தொழிற்சங்க கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.(ஏ)

### அரசு...

சேன.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற "சத்விரு அபிமன் 2019" இராணுவத்தினருக்கு நலன்புரி நன்மைகளை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னரான காலத்தில் அரசு தனது அனைத்து கடமைகளையும் நிறைவேற்றியுள்ளது. அந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய பயங்கரவாத அமைப்பை இலங்கையிலிருந்து ஒழித்தது மாத்திரமன்றி, அந்தத் தாக்குதல் நடப்பதற்கு ஏதுவாக அமைந்த சகல விடயங்கள் தொடர்பாகவும் தற்போது பக்கச்சார்பற்ற சுயாதீனமான விசாரணைகள் இடம்பெறுகின்றன.

தமது தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கமைய ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் கருத்துக்களை முன்வைக்க வேண்டாம் என்று சகல தரப்பினரிடமும் கேட்டுக்கொள்கின்றேன். தன்னை முதுகெலும்பற்ற தலைவராகக் காட்டுவதற்குச் சிலர் முயற்சிக்கின்றனர். எனினும் நேரடியாகத் தீர்மானங்களை எடுக்கக் கூடிய முதுகெலும்புடைய ஒரு தலைவர் என்பதை 2015ஆம் ஆண்டுத் தேர்தலின் போதும், அதன் பின்னர் பல தடவைகளும் வெளிப்படுத்தியுள்ளேன். கடந்த அரசைப் போன்றே தற்போதுள்ள அரசிலும் இடம்பெறும் ஊழல், மோசடிகளை கண்டறிவதற்கு முதுகெலும்புடைய ஒரு தலைவர் என்பதனாலேயே ஆணைக்குழுக்களை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளேன். கடத்தல்காரர்கள், பாதாள உலகத்தினர், குற்றவாளிகள் மற்றும் ஊழல்வாதிகளுடன் போராடுவதற்கும் அதுவே காரணமாகும்- என்றார்.

(எ)

## தொடருந்து...

நேற்று அதிகாலை 3.30 மணியளவில் வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தொடருந்துடன் மோதி அவர் உயிரிழந்திருக்கலாம் அல்லது தொடருந்துத் தடத்துக்கு அருகே உறங்கியபோது விபத்து நடந்திருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது. தொடருந்துக் கடவைக்கு அருகே சடலம் காணப்பட்ட நிலையில், அருகே சில்லறை நாணங்கள், தீப்பெட்டி என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(எ)

## தமிழ்...

டுக்கப்படும். அதற்கு முன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இது தொடர்பில் பேச்சு நடத்தவுள்ளேன்.

இவ்வாறு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நேற்றுத் தெரிவித்தார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.

கல்முனை வடக்கு பிரதேச சபை தொடர்பான பிரச்சினைக்கு தமிழ் முஸ்லிம் சமூகத்தினரைப் பாதிக்காத வகையில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் வஜிர அபேவர்தனவும் இதில் உறுதியாக இருக்கின்றார். எனவே, அவரை நீங்கள் (முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள்) நேரில் சந்தித்து உரையாடுங்கள். என்றார்.

(எ-22)

## புளியங்குளத்தில்...

அடுத்து வீடு ஒன்றின் கிணற்றில் இருந்து இந்த வெடிபொருள்கள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

81 மில்லிமீற்றர் குண்டுகள் 11, ரி-56 ரகத் துப்பாக்கி, மிதிவெடி உட்படச் சில ஆயுதங்கள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. புளியங்குளம் சிறப்பு அதிரடிப் படையினர், இராணுவத்தினர், பொலிஸார் இணைந்து இந்த ஆயுதங்களை மீட்டுள்ளனர். ஓமந்தையின் 563 ஆவது பிரிகேட்டின் கேர்ணல் பண்டுக்கபெரேரா மற்றும் புளியங்குளம் விசேட அதிரடிப்படையின் பொறுப்பதிகாரி நிசந்த ஆகியோரின் தலைமையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. இவை விடுதலைப் புலிகளால் மறைத்து வைத்திருக்கப்பட்டிருக்கலாம் என்றும், அந்தப் பகுதியில் முன்னர் விடுதலைப் புலிகளின் அலுவலகம் இருந்தது என்றும் கூறப்படுகின்றது.

(எ)

## 8ஆம் ஆண்டு நினைவுநாள்



தோற்றம் 18.02.1948 — மறைவு 23.07.2011

### அருளப்பு அமலதாஸ்

"ஆண்டவரே உமது இரக்கத்தையும் உமது பேரன்பையும் நினைவு கூர்ந்தருளும்" - (சங்கீதம் 25:06)



குடும்பத்தின் ஒளி விளக்காய்
மிளிர்ந்த எம் தகப்பனே!
அறிவூட்டி சீராட்டி
வளர்த்த தந்தையே!
அன்பான அறிவுதந்து
அரவணைத்து மகிழ்ந்தவரே!
நேசமுடன் வாழ்ந்து
எம்மை விட்டு பிரிந்த
எங்கள் அப்பாவே!
எட்டு ஆண்டுகள் கடந்தாலும்
மறப்போமா! உங்களை எம் வாழ்வில்...

சுன்னாகம். குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜணனன் சுமங்கலி



முதலாம் வட்டாரம், முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் முதலாம் ஒழுங்கை, குட்செட் றோட் வவுனியாவை தற்காலிக முகவரியாகவும் கொண்ட திருமதி ஜணனன் சுமங்கலி (21.07.2019) அன்று அகால மரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கோவிந்தராஜன் மற்றும் புனிதவதி தம்பதியினரின் பாசமிகு புதல்வியும் ஜணனனின் அன்பு மனைவியும் சரண்ஜா, நிஷாந்தி, கஸ்தூரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கலைமாணி றோட், கட்டப்பிராயைச் சேர்ந்த பரமராசா மல்லிகாதேவி தம்பதியினரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது முள்ளியவளை இல்லத்தில் இன்று (23.07.2019) செவ்வாய்க்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் நாவற்காடு இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :- குடும்பத்தினர்
077 857 6289

### செல்லையா துரைராஜா



நுவரெலியாவைப் பிறப்பிடமாகவும் அராலி வீதி, ஒட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா துரைராஜா 22.07.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.07.2019) செவ்வாய்க்கிழமை மு.ப 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்
077 610 3563

## இராஜகோபுரம் அமைப்பதற்கு ஒப்பந்தகாரரைத் தெரிவு செய்தல்

கோண்டாவில் வடக்கு அருள்மிகு மனோன்மணி அம்பிகா சமேத ஸ்ரீ சிவபூதவராயர் தேவஸ்தானத்திற்கு ஏழுதள இராஜகோபுரம் அமைய திருவருள் கைகூடியுள்ளது. இராஜகோபுரம் அமைப்பதற்கு துறைசார் நிபுணர்களை கூறு விலையின் அடிப்படையில் தெரிவு செய்வதற்கு ஆலய நிர்வாகம் தீர்மானித்துள்ளது. விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு :**
077 595 4189 - தலைவர்
071 745 7484 - பொருளாளர்

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமக

## மரண அறிவித்தல்



### திருமதி கருணைநாயகி முத்துராசா

சரவணையைப் பிறப்பிடமாகவும் நாரந்தனை மற்றும் வண்ணார்பண்ணையைவசிப்பிடமாகவும்கொண்டகருணைநாயகிமுத்துராசா நேற்று (22.07.2019) திங்கட்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

78, பத்திரகாளி கோவிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தகவல்: குடும்பத்தினர். 077 610 2945, 021 222 0315

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் ஜெயக்குமார் சறோஜினி

தோற்றம் 13.06.1967 — மறைவு 02.08.2018

திதி: சஷ்டி (23.07.2019)

குடும்பத்தின் ஜீவனாகி
குலவிளக்காய் நீரிருந்தீர்
கொடுங்காலம் வந்ததுவோ
ஆண்டொன்று போனாலும்
ஆறாது உமது பிரிவு
மீண்டுந்தான் காண்பதற்கு
மீளாதோ உங்கள் வாழ்வு
கண்ணீரால் தான்நனைந்து
கரைக்கின்றோம் எம் வாழ்வை
மண் மீது உமை எண்ணும்
மனதோடு வாழ்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"கதிர்காம கோயிலடி" நீர்வேலி வடக்கு.
என்றும் நினைவுகளுடன் கணவர், குடும்பத்தினர்.

## தேவை

தொழில்நுட்ப கல்வி நிறுவனம் ஒன்றிற்கு **பெண் அலுவலக உதவியாளர் தேவை.**
(சம்பளம் 26000 + மதிய உணவு)
தொடர்பு:- 077 368 9517

## வேலையாள் தேவை

194, யாழ் வீதி, மானிப்பாயில் அமைந்துள்ள மிக்ஷர் உற்பத்தி செய்யும் எமது நிறுவனத்திற்கு பொதி செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை.
தொடர்பு - 076 640 3388

## வீடு வாடகைக்கு

நல்லூர் நாயன்மார்கட்டு பாரதி வீதியில் பெரிய விசாலமான மூன்று அறைகளும் வீட்டுடன் இணைந்த குளியலறையும் மற்றும் தனியான குளியலறையுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
❁ தரகர் தேவையில்லை
தொடர்புக்கு:- 076 714 0798, 077 672 1687

## மேசன் தேவை

யாழ் நகர், தொண்டைமனாறு பகுதியில் கட்டட வேலை செய்வதற்கு மேசன் தொழிலாளி தேவை.
(CS 00649)(4.17)
தொடர்பு: 076 136 6437, 076 136 6436

## பணியாளர் தேவை

கிளிநொச்சியில் இயங்கிக் கொண்டிருக்கும் உணவகம் ஒன்றிற்கு
❁ சமையலாளர்
❁ சப்ளையர் (வெயிற்றர்)
தேவை.
தொடர்புகட்கு:- 077 545 6420

## பணிப்பெண் தேவை

யாழ் நகரினை அண்மித்த பகுதியில் சிறிய குடும்பம் ஒன்றினை பராமரிப்பதற்கு வீட்டில் தங்கிநின்று வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.
**வேதனம் பேசித்தீர்மானிக்கப்படும்.**
(வயது 40-50)
தொடர்பு:- 076 715 0174

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# ஜூலைக் கலவரத்தில் 36ஆவது நினைவு தினம்

தமிழ் இனத்தின்வரலாற்றில்குருதிக்கறைகளால்பொறிக்கப்பட்ட ஒரு சம்பவம் 36 ஆண்டுகளுக்கு முன்னர் இதேபோன்றதொரு நாளில்தான் தொடங்கியது. கறுப்பு ஜூலை என்று வரலாற்றில் மறக்க முடியாதவடுவாகப்பதிந்துபோன அந்தச்சம்பவம் இலங்கைஎன்கிற ஒன்றிணைக்கப்பட்ட நாட்டைத் துண்டாடியது. அதன் பின்னர் நிகழ்ந்த 30 வருடகால வன்முறைகள் இலங்கையின் தனி அத்தியாயம்.

யாழ். மாவட்டம், திருநெல்வேலியில்தபால்கட்டைச்சந்திக்கருகில் இலங்கையின் தரைப் படையினர் பயணித்த வாகனத்தின் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நடத்திய தாக்குதலில் 23 படையினர்கொல்லப்பட்டதற்குப்பழிவாங்கும்வகையில்தமிழர்கள்மீது ஆட்சியாளர்களின்ஆசீர்வாதத்துடனும்அனுரசணையுடனும்இந்தத் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. நன்கு திட்டமிட்டு ஒவ்வொரு தெருவிலும் இருந்த தமிழர்களின் வீடுகள் தெரிந்தெடுக்கப்பட்டு தாக்கப்பட்டன, எரியூட்டப்பட்டன, வர்த்தக நிலையங்கள் சூறையாடப்பட்டன, நூழிலையில் உயிர்தப்பிய தமிழர்கள் பாடசாலைக்கட்டங்களிலும்பொதுக்கட்டடங்களிலும்தங்கவைக்கப்பட்ட பின்னர்யாழ்ப்பாணத்திற்குக்கப்பலில் ஏற்றி அனுப்பி வைக்கப்பட்டார்க்ள்.

கொழும்பில் தொடங்கினாலும் இந்தக் கலவரங்கள் பின்னர் நாடு முழுவதும் பரவின. மலையகம் உள்ளிட்ட நாட்டின் இதர பகுதிகளுக்கும் கலவரம் எடுத்துச் செல்லப்பட்டது. உத்தியோகபூர்வமான சேத விவரம் இல்லை என்றாலும் 3 ஆயிரம் வரையிலானதமிழர்கள் இந்தக் கலவரத்தில் உயிரிழந்திருக்கலாம் என்று கணிக்கப்படுகின்றது. 10 ஆயிரம் வீடுகள் கடைகள் எரியூட்டப்பட்டு நாசமாக்கப்பட்டன.பலகோடிரூபாபெறுமதியானசொத்துக்கள்சூறையாடப்பட்டன.

கிட்டத்தட்ட ஒரு வாரத்திற்குத் தொடர்ந்து நிகழ்ந்த வன்முறைகளின்போது வெலிக் கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபிரிவினைக்கோரிக்கையாளர்களானகுட்டிமணி,தங்கத்துரை உள்ளிட்ட அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களின் கண்களைப் பிடுங்கி வீசுமளவிற்குக் கொடூரங்கள் நிகழ்த்தப்பட்டன.

இவை அனைத்தும் பொலிஸார் பார்த்திருக்க அவர்களின் கண் முன்னேயே நிகழ்ந்தன. வன்முறையை நிகழ்த்தியவர்கள் ஆட்சியாளர்களின் ஆசிகளைப் பெற்றவர்கள் என்பதால் சட்டம் அவர்கள் மீது பாயாமல் வேடிக்கை பார்த்தது. சுற்றுலாவிகளாக இலங்கை வந்திருந்த மேற்குநாட்டவர்கள்சிலரின்கமெராக்களில்சிக்கிய காட்சிகள் மற்றும் அவர்களின் சாட்சிகளின் மூலமே இந்தக் கொடூரம் வெளி உலகுக்குத் தெரியவந்தது.

வன்முறைகளில்பல ஆயிரக்கணக்கானதமிழர்களின்உயிர்கள்குடிக்கப்பட்டாலும் நாடு முழுவதும் தமிழர்களின் ஆதிக்கத்தில் இருந்த பொருளாதாரமே இந்தக் கலவரத்தின் குறியாக இருந்தது. மீண்டும் ஒரு தடவை மீளவே முடியாத வகையில் தமிழர்களின் அந்த வியாபாரப் பேரரசு வீழ்த்தப்பட்டது. அந்த வியாபாரங்கள் அனைத்தும் பின்னாள்களில் சிங்களவர்களின் கைகளைச் சென்றடைந்தன.

இந்தக் கொடூரம் நிகழ்த்தப்பட்டபோதும் ஐக்கிய தேசியக் கட்சியே ஆட்சியில்இருந்தது. போர்என்றால்போர், அமைதிஎன்றால்அமைதி என்றுதமிழர்களைப்பார்த்து முழக்கமிட்டுவன்முறையாளர்களுக்கு இன்னும் தூபமிட்டார் அன்றைய அரச தலைவர் ஜே.ஆர்.ஜெவர்த்தன.

இந்த நாடு சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தமானது என்கிற பௌத்த, சிங்களப் பேரினவாத நிகழ்ச்சி நிரலின் கீழே திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட இந்தக்கலவரம் இலங்கைஎன்கிறநாட்டைப்பிளவு படுத்தியது மட்டுமல்ல, மீளமுடியாத கொடுந் துயரத்துக்குள்ளும் தள்ளிவிட்டது. 30 ஆண்டுகள்குருதிச்சகதியையும்விட்டுச்சென்றது.

36 ஆண்டுகள் கழித்து ஜூலைக் கலவரத்தை நினைவு கூரும் இந்தச் சமயத்திலும், 30 ஆண்டுகாலம் நீடித்த போர் முடிவுக்கு வந்த நிலையிலும் இலங்கைச் சிங்களவர்களின் நாடு என்கிற பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் குரல் மீண்டும் ஓங்கி ஒலிக்கின்றது. சிறுபான்மை இனங்களின் உரிமைகளை வழங்குவதற்கு மறுத்து நிற்கின்றது அந்தப் பேரினவாதச் சிந்தனை.

வரலாற்றில் இருந்து பாடங்களைக்கற்றுக்கொள்ள மறுத்து மீண்டும் மீண்டும் ஒரே சேற்றிலேயே உழன்று கொண்டிருக்கின்றது. நாட்டின் விடியலையும் தடுத்து நிற்கின்றது.

தற்போதும் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஆட்சியே நடக்கின்றது. ஜே.ஆர்.ஜெவர்த்தனவின் மருமகனே நாட்டை ஆள்கிறார். ஜூலைக்கலவரங்களுக்குநிகரானவன்முறைகள்சிறுபான்மைமுஸ்லிம்களுக்கு எதிராகக் கட்டவிழ்க்கப்படுகின்றன.

# தமிழர்களாக நாம் ஒன்றிணைவோம்!

சேரலாதன்



யாழ். ஆயரின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டியதன் அவசியத்தைத் தமிழர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இன்றைய சூழ்நிலையில் தமிழர்கள் மத ரீதியான பகையுணர்வை விடுத்து ஒற்றுமையாக வாழ வேண்டியதன் அவசியத்தை அவர் எடுத்துரைத்துள்ளார்.

சிங்கள, பௌத்த பேரினவாதிகள் தமிழர்களின் பரம்பரையான சொந்த நிலங்களை மட்டுமல்லாது அவர்களின் வழிபாட்டுக்குத் தலங்களையும் அபகரித்துக் கபளீகரம் செய்யும் நோக்குடன் செயற்படுகின்றனர். குறிப்பாக இந்து ஆலயங்களை இல்லாமல் செய்து அங்கு பௌத்த விகாரைகளை அமைப்பதே அவர்களின் நோக்கமாகவுள்ளது. இந்த நிலையில் அற்ப விடயத்துக்காக தமிழர்களான கத்தோலிக்கர்களும், இந்துக்களும் மோதிக்கொள்வதை ஏற்க முடியவில்லை. பேசித் தீர்க்க வேண்டிய விடயத்தை வன்செயல்கள் மூலமாகத் தீர்க்க முயல்வதும் புத்திசாலித்தனமாகத் தெரியவில்லை.

### அந்நியரின் வருகைக்குப் பின்னரே மதப் பிளவுகள் அதிகரித்துள்ளன

அந்நியரின் வருகைக்கு முன்னர் தமிழர்களிடத்தில் மத ரீதியான பிளவுகள் காணப்படவில்லை. சகலரும் மத அடிப்படையில் ஒன்றுபட்டுக் காணப்பட்டனர். போர்த்துக்கேயர் 1505ஆம் ஆண்டு இந்த நாட்டில் காலடி எடுத்து வைத்தனர். அவர்கள் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதில் தீவிரமாக ஈடுபட்டனர். இவர்களால் இந்து ஆலயங்கள் இடித்து அழிக்கப்பட்டு கிறிஸ்தவ தேவாலயங்கள் அமைக்கப்பட்டன. இந்து மக்கள் தமது வழிபாட்டு உரிமைகளையும் மதச் சடங்குகள் கடைப்பிடிப்பதையும் கைவிடுமாறு அந்நியரால் நிர்ப்பந்திக்கப்பட்டனர். வாழை இலையில் உணவுபடைத்து உண்பதற்குக் கூட அந்த மக்கள் அனுமதிக்கப்படவில்லை. இதனால் விரதங்களை கடைப்பிடிக்கும் வேளைகளில் உணவுகளை உட்கொண்ட பின்னர் எச்சில் வாழை இலைகளை வீட்டுக் கூரைக்குள் ஒளித்து வைக்க வேண்டிய அவலநிலையும் அவர்களுக்கு ஏற்பட்டது. இந்துக்களில் பலர் வலுக் கட்டாயமாக மதம் மாற்றப்பட்டனர். ஏரளமானவர்கள் உதவிகள் மற்றும் சலுகைகள் வழங்கப்பட்டு மத மாற்றம்செய்யப்பட்டனர். இந்து ஒருவர் அரச வேலை வாய்ப்பைப்பெற வேண்டுமானால் கிறிஸ்தவ மதத்துக்குத் தன்னை மாற்றிக்கொள்ள வேண்டிய அவல நிலையும் காணப்பட்டது. போர்த்துக்கேயரைத் தொடர்ந்து 1648ஆம் ஆண்டு ஒல்லாந்தர் இந்த நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். அவர்களும் போர்த்துக்கேயர் வழியில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதில் தீவிரமாக ஈடுபட்டனர். பின்னர் ஆங்கிலேயரின் ஆட்சி ஆரம்பமானது. ஆங்கிலேயரும் தமது பங்குக்கு கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதில் ஈடுபட்டனர். இவ்வாறு அந்நியர்கள் இந்த நாட்டில் தங்கியிருந்த 443 ஆண்டுகளில் பெருமளவு மக்கள் மத மாற்றத்துக்கு உள்ளாகினர். சிங்கள பௌத்த மக்களில் அநேகமானவர்கள் கிறிஸ்தவத்தின் பக்கம் சாய்ந்தனர்.

### தமிழரின் அடையாளங்களை அழிக்கின்றனர் பேரினவாதிகள்

தற்போதைய சந்ததியினர் இவற்றையெல்லாம் ஆறுதலாகவிருந்து அலசிப் பார்ப்பதில்லை. ஆனால் உண்மை ஒருபோதுமே மறைவதில்லை. அதை மறைக்கவும் முடியாது. பௌத்த மதத்தைத் தோற்றுவித்த கௌதம புத்தரும், கிறிஸ்தவ மதத்தை நிறுவிய இயேசுக் கிறிஸ்துவும் கருணையும், அன்பும் மிக்கவர்கள். மக்களுக்கு நல்லதையே அவர்கள் போதித்தார்கள். கௌதம புத்தர் ஒரு இந்துக் குடும்பத்திலேயே அவதரித்தார். இயேசு பிரான் யூத இனத்தைச் சேர்ந்தவர். அவர் மக்களுக்கு உண்மைகளைப் போதித்ததால் கொடியவர்களால் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார்.

மதங்கள் நல்நோக்குடனேயே ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் இடையில் புகுந்த சிலர் மதக் காழ்ப்புணர்வை வளர்த்து பிளவுகளை ஏற்படுத்தி வருகின்றனர். தமிழர்கள் அனைவரும் ஒன்று திரண்டு தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்காகப் போராட வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். சிங்கள பௌத்த பேரினவாதிகள் தமிழர்களின் அடையாளங்களை அழித்துவிடுவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

தமிழர் தாயகமெங்கும் வகைதொகையின்றி பௌத்த விகாரைகளை அமைத்தும் சிங்கள வர்களைக் குடியேற்றியும் தமிழர்களின் இருப்பைக் கேள்விக்குறியாக நிற்கவைத்துள்ள னர். இந்த நிலையில் தமிழ் மக்கள் மத ரீதியாக மோதிக் கொள்வது அவர்களுக்குப் பெரும் வாய்ப்பாகவே அமைந்துவிடும்.

ஆகவே தமிழ் ஆயர்களும் இந்து மதப் பிரதிநிதிகளும் ஒன்றாகப் பேசி பிரச்சினைகள் மேலும் வளராது ஒரு முடிவைக் காண வேண்டும். திருக்கேதீஸ்வரத்தில் வளைவு அமைப்பது தொடர்பாக விரைவிலேயே ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்த வேண்டும். நாம் அனைவருமே தமிழர்கள் என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது.




## தீக்காயத்துடன் மீட்கப்பட்ட பெண் உயிரிழப்பு

வவுனியா, ஜூலை 23
தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவந்த பெண் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார். முல்லைத்தீவுமுள்ளியவளையைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கடந்த 12ஆம் வவுனியா, பொதுமண்டப வீதியில் உள்ள அவர்களது வீட்டில் அலறல் சத்தம் கேட்டு அயலவர்கள் சென்று பார்த்தனர் என்றும், வீடு முழுவதும் மண்ணெண்ணை ஊற்றப்பட்டிருந்த நிலையில் வீட்டில் இருந்த கணவனும், மனைவியும் தீப்பற்றிய நிலையில் காணப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
அவர்கள் இருவரும் அயலவர்களால் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில், சிகிச்சை பயனின்றி மனைவி நேற்று உயிரிழந்துள்ளார். (எ)

## மூன்று தரப்பும் இணைந்தாலே பயங்கரவாதம் அழிக்கப்படும்

### அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 23
**நாட்டில் அரசியல்வாதிகள், புலனாய்வுப் பிரிவினர் மற்றும் பாதுகாப்புத் துறையினர் ஆகியோர் ஒன்றிணைந்து செயற்பட்டாலே பயங்கரவாதத்தை முற்றாக ஒழிக்க முடியும். ஆனால் இந்த மூன்று துறைகளிடையே தற்போது பெரும் விரிசல் காணப்படுகின்றது.**

இவ்வாறு அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
சிலாபத்தில் நடைபெற்ற 'தேசிய வழி' நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்று மூன்று மாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் அதனுடன் தொடர்புடைய குழுவில் ஒரு பகுதியினர் கைது செய்யப்பட்டுள்ளனர். இன்னொரு பகுதியினர் அழிக்கப்பட்டுள்ளனர். ஆனால் அவர்கள் நாட்டில் ஏற்படுத்திச் சென்ற அழிவை மறந்துவிட முடியாது. இதில் ஆயிரக்கணக்கானவர்கள் தொடர்புபட்டுள்ளனர். அவர்களில் பலர் இன்று சுதந்திரமாக வெளியில் உலாவிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் மறக்கவில்லை.
இந்த பயங்கரவாதத் தாக்குதல்களை மேற்கொண்டவர்களால் உள்நாட்டு முஸ்லிம்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டன. ஆனால் இவர்களுக்கு ஆதரவளிப்பதற்கும் இந்த பயங்கரவாதவாதிகள் முன்வரப்போவதில்லை.
சிரியா, லிபியா, ஈராக் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளில் முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளுக்கும் இலங்கையில் உள்ள கிறிஸ்தவர்களுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்று எமக்குப் புரியவில்லை. அவற்றைக் காரணம் காட்டி எம் நாட்டு கிறிஸ்தவர்களை பழிவாங்கியதையும் ஏற்றுக்கொள்ள முடியாது.
இஸ்லாமியக் கடவுளைத் தவிர வேறு எந்த கடவுளும் உண்மையானவர் அல்ல என்பதும் இஸ்லாத்தைத் தவிர வேறு மதங்களை பின்பற்றுபவர்கள் வாழக்கூடாது என்பதுமே இஸ்லாம் அடிப்படைவாதிகளின் எண்ணமாகும்.
இப்போது அரசியல்வாதிகள், புலனாய்வுப்பிரிவு மற்றும் பாதுகாப்புப் பிரிவு ஆகியவற்றுக்கிடையில் பாரிய இடைவெளி கரணப்படுகின்றது. இந்த பயங்கரவாதத்தை முற்றாக ஒழிப்பதற்கு குறித்த மூன்று துறைகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இதுவே காலத்தின் தேவை - என்றார். (எ)

## 21/4 தாக்குதல் அறிக்கை: கோருகிறார் சட்டமா அதிபர்

கொழும்பு, ஜூலை 23
கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நாட்டில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலின் பின்னர் இதுவரை கைது செய்யப்பட்டுத் தடுத்து வைத்து விசாரணை செய்யப்படுவோரின் விவரங்களைச் சட்டமா அதிபர் கோரியுள்ளார்.
பதில் பொலிஸ் மா அதிபரிடம் இந்த விவரங்களைக் கோரியுள்ளதுடன், உடனடியாக அது தொடர்பான அறிக்கையைத் தம்மிடம் கையளிக்க வேண்டும் என்றும் அவர் பணித்துள்ளார். அத்துடன், இது தொடர்பாகக் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுவர்கள் தொடர்பான விசாரணைகளின் தற்போதையமுன்னேற்றம் தொடர்பாகவும் அந்த அறிக்கையில் உள்ளக்கட வேண்டும் என்றும் அவர் பணித்துள்ளார். (எ)

## சைட்டம் தொடர்பில் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 23
நெவில் பெர்ணான்டோ தனியார் மருத்துவமனையை அரசு பொறுப்பேற்பதற்காக 3.5 பில்லின் ரூபாவைச் செலுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
இத தொடர்பில் அரச தலைவர் விசாரணை ஆணைக்குழு உள்ளிட்ட பொறுப்புக்குரிய தரப்பினர் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

## வெலிக்கடை சிறைச்சாலை போதை வர்த்தக நிலையம்!

### அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 23
நாட்டில் சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு முக்கிய சவாலாக வெலிக்கடைச் சிறைச்சாலை மாறியுள்ளது. அங்கிருந்து போதைப் பொருள் வர்த்தகம் நெறிப்படுத்தப்படுகின்றது.
இவ்வாறு தெரிவித்துள்ளார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. மினுவாங்கொடை ரெஜீ ரணதுங்க விஞ்ஞான கல்லூரியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
அண்மையில் கடற்படையால் கடலில் 270 கிலோகிராம் போதைப்பொருள்களுடன் கைது செய்யப்பட்டவர்களின் கையடக்கத் தொலைபேசிகளை பரிசோதனை செய்தபோது அந்த நடவடிக்கை வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து நெறிப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது. அது தொடர்பான விசேட விசாரணை குற்றப்புலனாய்வு திணைக்களத்தால் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது.
சிறந்ததோர் சமூகத்தை கட்டியெழுப்புவதில் முன்னுரிமைப்படுத்த வேண்டிய விடயம் கல்வியாகும். இலவச கல்வியின் காரணமாக இன்று நாட்டில் அனைத்து பிள்ளைகளதும் கல்வி உரிமை பாதுகாக்கப்பட்டுள்ளது. கடந்த நான்கு வருட காலப்பகுதியில் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் இலவசக் கல்வியை பலப்படுத்துவதற்கு சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது அரசியல் துறையிலும், சமூகத்திலும் குற்றமிழைத்து வருகின்றவர்கள் எனக்கு எதிராக திரும்பியிருப்பது குற்றங்களுக்கு எதிராக நான் இருப்பதன் காரணத்தாலாகும்.
ஊழல், மோசடி, திருட்டு மற்றும் நாட்டினதும் பிள்ளைகளினதும் எதிர்காலத்தை சீரழிக்கும் அனைத்து வகையான கடத்தல் நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்துவதற்கு கடுமையான திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எனக்கெதிராக எத்தகைய குற்றச்சாட்டுக்கள், விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டபோதும் நாட்டின் எதிர்கால தலைமுறையினருக்காக சிறந்ததோர் சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான அர்ப்பணிப்பை கைவிடப்போவதில்லை - என்றார். (எ)

## ஆட்சியாளர்களாலேயே ஆயுதம் தூக்க நேரிட்டது

### அமைச்சர் மனோ சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூலை 23
இலங்கையில் பௌத்த கொள்கை முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது என்று அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். மட்டக்களப்பில் நேற்று நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
இன்று ஜனநாயக வேடம் போடும் அனைவரும் குற்றவாளிகளே. இந்த நாட்டில் கௌதம புத்தரின் பெயரைச் சொல்லி அப்போது ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்தன உண்மையான பௌத்தராக, பௌத்த மதக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தி இருந்தால், அன்று தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தூக்கியிருக்க மாட்டார்கள்.
கௌதமராக அவரது பெயரைக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், வந்ததன் பின்னர் கசாப்புக் கடைக்காரர்கள் போல நடந்து கொண்டதன் விளைவாகவே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தூக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அதனால் ஏற்பட்ட போர் காரணமாக ஏற்பட்ட இழப்புக்கள், துன்பங்கள் அனைத்திற்கும் இந்த நாட்டின் ஆட்சியாளர்களே முதல் காரணம். இவ்வாறு தற்போதைய ஆட்சியாளர்கள் நடந்து விடக்கூடாது என்பதில் நாம் கவனமாக இருக்கின்றோம்.
இன்று ஜனநாயக முகமூடி போட்டவர்கள் எல்லோரும் அதற்குப் பின்னால் கொலைகாரர்களாகவே இருக்கின்றார்கள். இந்த நிலையில் தாங்கள் எல்லோரும் கௌதம புத்தர் என்று நினைத்துக்கொண்டு எம்மை கொள்ளைக்காரர்கள் என்றால் அதில் ஞாயமில்லை - என்றார். (எ)

## மா விலையேற்றம் தொடர்பாக கலந்துரையாடல்

கொழும்பு, ஜூலை 23
கோதுமை மாவின் விலையை 8.50 ரூபாவால் அதிகரிப்பது தொடர்பாக வாழ்க்கைச் செலவு குழு தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவுடன் இன்று கலந்துரையாடல் நடத்தவுள்ளது.
கடந்த 16 ஆம் திகதி கோதுமை மாவினை இறக்குமதி செய்யும் பிரீமா மற்றும் செரண்டிப் நிறுவனங்களானது நுவர்வோர் அதிகார சபையின் அனுமதியை பெறாது கோதுமை மாவின் விலையினை 8 ரூபாவால் அதிகரித்திருந்தன. அதனால் பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் 450 கிரேம் நிறையுடைய பாண் ஒன்றின் விலையை 5 ரூபாவால் அதிகரிக்க தீர்மானம் மேற்கொண்டிருந்தது. எனினும் பின்னர் அந்தத் தீர்மானம் தற்காலிகமாக கைவிட்டிருந்தது. இந்நிலையிலேயே இது தொடர்பான கலந்துரையாடல் இன்று நடக்கவுள்ளது. (எ)

# 3 மாவட்டங்களைச் சேர்ந்தவர்களின் அரச நியமனப் பட்டியல் வந்து சேர்ந்தது

*யாழ்ப்பாணம், ஜூலை 23*

இரண்டாம் கட்டமாக அரச வேலைதேடும் பட்டதாரிகளுக்கு நேற்று முன்தினம் நாடு முழுவதும் வழங்கப்பட்ட 16 ஆயிரத்து 800 பேருக்கான நியமனத்தில், வடக்கு மாகாணத்தின் 3 மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரத்து 570 பேரின் பெயர் விவரங்கள் மாவட்டச் செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அரச வேலைதேடும் பட்டதாரிகளின் விவரங்கள் மாவட்ட ரீதியில் சேகரிக்கப்பட்டு அவர்களுக்கான நேர்முகத் தேர்வுகளும் இடம்பெற்றிருந்தன.
முதற்கட்டமாக 4 ஆயிரம் பேருக்கு அரச நியமனம் வழங்கப்பட்டிருந்தது.
இரண்டாம் கட்டமாகவே 16 ஆயிரத்து 800 பேருக்கு நியமனம் வழங்குவதற்கான பெயர்ப் பட்டியல் சகல மாவட்டச் செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆயிரத்து 281 பேரின் பட்டியலும், மன்னார் மாவட்டத்தில் 140 பேரின் பட்டியலும், கிளிநொச்சி மாவட்டத்தில் 149 பேரின் பட்டிலும் கிடைக்கப்பெற்றுள்ளது.
இதேநேரம், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுற்கான பெயர்ப் பட்டியல் இதுவரை கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-105)





# ஆக்கப்பொருள்கள் கண்காட்சி நிகழ்வு

சாவகச்சேரி, ஜூலை 23

சாவகச்சேரி, கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் 25ஆவது ஆண்டு வெள்ளி விழாவை முன்னிட்டு ஆக்கப்பொருள்கள் கண்காட்சி நிகழ்வு நேற்றுமுன்தினம் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. நிலைய சிறார்கள், பழைய மாணவர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரால் உருவாக்கப்பட்ட ஆக்கப்பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டன.
நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஹற்றன் நஷனல் வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் திருமதி அகல்யா பாபுஜி, சிறப்பு விருந்தினர்களாகச் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்ட சிங்கக் குகை, மண்வீடு, காடும் குளமும் ஆக்கப்பொருள்கள் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தன. (ஐ-9)



# குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம்,ஜூலை 23

யாழ்ப்பாணம் கோண்டாவில் ஞான வீர சனசமூக நிலையத்தின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குருதிக்கொடை முகாம் நடைபெற்றது.
நேற்றுமுன்தினம்ஞாயிற்றுக் கிழமை ஞான வீர சனசமூக நிலைய கீழ் மண்டபத்தில் காலை 8.30 மணியளவில் நடைபெற்றது.
ஆண்டுநிறைவை முன்னிட்டு பல்வேறு கலை,கலாசார நிகழ்வுகளும் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)



கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்துக்கு பல லட்சம் ரூபா செலவில் புதிதாக வில்லு மண்டபம் ஒன்று அமைத்து வழங்கப்பட்டுள்ளது. இதற்கான நிதியை அன்பளிப்புச் செய்த ப.வசந்தகுமார் ஆலய பரிபாலன சபையினரால் அண்மையில் மதிப்பளிக்கப்பட்டார்.(ஐ-17)

# தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்க 97ஆவது பன்னாட்டுக் கூட்டுறவுதினம்

கொடிகாமம், ஜூலை 23

'கண்ணியமான சேவைக்குக் கூட்டுறவு' எனும் தொனிப்பொருளில்தென்மராட்சி கிழக்கு ப.நோ. கூட்டுறவுச் சங்கத்தின் 97ஆவது பன்னாட்டுக் கூட்டுறவு தினம் கொடிகாமம் -பருத்தித்துறை வீதி கொடிகாமத்தில் அமைந்துள்ள தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவு சங்க வளாகத்தில் கடந்தசனிக்கிழமைநடைபெற்றது.





அந்தச் சங்க தலைவர் இ.அ. ஆனந்தராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மைவிருந்தினராக வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்கூட்டுறவுசங்கங்களின் பதிவாளருமான பொ.வாகீசன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவு உதவிஆணையாளர்செல்விபரினிஹஸ்ஸானா அப்துல் சமியூ, தென்மராட்சிப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலுவலர்சதீஸ்வரன்,மதிப்புறுவிருந்தினர்களாக யாழ்ப்பாணமாவட்டக்கூட்டுறவுச்செயலர் திருமதி வே.செல்வரத்தினம், சாவகச்சேரிப் பிரதேச சபை உபதவிசாளர் செ. மயூரன், கொடிகாமம் மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி ஆர்.ஜெயச்சந்திரா, கொடிகாமம் வர்த்தக வங்கி முகாமையாளர் திருமதி அனித்தா மதியூகன், கொடிகாமம் வணிக மன்றத் தலைவர் க. அருணாசலம்ஆகியோர்கலந்துகொண்டனர். நிகழ்வில் கூட்டுற வாளர்கள், சங்கப் பணியாளர்கள், அங்கத்தவர்கள், மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.
கொடிகாமம் பெற்றோல் நிரப்பு நிலையத்திலிருந்து சங்க அங்கத்தவர்கள் மற் றும் உறுப்பினர்கள் இணைந்து பவனியாக விருந்தினர்களை அழைத்து வந்தனர். கூட்டுறவுகொடிஏற்றப்பட்டுவிருந்தினர்களால் கூட்டுறவு தின பலூன்கள் பறக்க விடப்பட்டன.
கூட்டுறவு கீதம் இசைக்கப்பட்டு மங்கள விளக்கேற்றல் நிகழ்வுநடைபெற்றது.
சங்க முகாமையாளர் தேவகுமார் வரவேற்புரை நிகழ்த்தினார். இ.அ.ஆனந்தராசா தலைமையுரை நிகழ்த்தி னார். மிருசுவில் புனித நீக்கிலார் முன்பள்ளி மாணவர்களின் நடனம் நடைபெற்றது.
2016ஆம் ஆண்டு மந்துவில் க.பொ.த.சாதாரண பரீட்சையில் சித்தியடைந்து சாவகச்சேரி இந்து கல்லூரியில் க.பொ.த. உயர்தரம் கற்று சித்தியடைந்து பல்கலைக்கழகம் சென்ற க. சகிலன், வறுமையுள் திறமை நிதியத்தின் மூலம்பயன்பெற்றதனது அனுபவத்தைக் கூறினார்.
நீண்ட காலமாக கூட்டுறவுக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி ஓய்வுபெற்ற அதிபர் அ. திருநாவுக்கரசு முதன்மை விருந்தினரால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டார்.
கூட்டுறவாளர்கள் பணியாளர்கள் மதிப்பளிப்பும் இடம்பெற்றது. அதிகமாக 60 அங்கத்தவர்களை இணைத்த எழுதுமட்டுவாழ் கிளைமுகாமையாளர்திருமதிமணிமாறன் சிவநிதி, நடமாடும் சேவை மூலம் கிராமிய வங்கிகளின் செயற்பாடுகளில் கூட்டுறவு அரவணைப்பு கடன் வழங்கல் தொடர்பாக சிறந்த சேவை ஆற்றியமைக்காக சிவஞானம்குமுதினி ஆகியோர்மதிப்பளிக்கப்பட்டனர்.
2021ஆம் ஆண்டுக்கான வறுமையில் திறமை புலமைப் பரிசில் நிதியம் மூலம் வழங்கும்உதவித்திட்டத்துக்காக20மாணவர்கள் தெரிவுக் குழுவால் ஒவ்வொரு கிளைக்கும்ஒவ்வொருவர்என்றரீதியில்20 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு முதற்றொகுதி பணத்தை வைப்புச் செய்து கிராமிய அபிவிருத்தி வங்கி புத்தகம் வழங்கப்பட்டது. (த.159-9)



# தெரேசாள் மகளிர் கல்லூரியில் “ஸ்மார்ட் போட்” திறப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 23

யாழ்ப்பாணம் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் திறன் வகுப்பறைக்குரிய சிறப்புப் பலகை (ஸ்மார்ட் போட்) நேற்று திறந்து வைக்கப்பட்டது. கல்லூரி அதிபர் அருட்சகோதரி மரிய ஜீவந்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து நாடா வெட்டி திறந்துவைத்தார்.
சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் பிரதாபன், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உபதவிசாளர் கபிலன், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சிவநேசன், கோப்பாய் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர்அலுவலகர் கோபாலதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து இந்த திறன் பலகை வழங்கி வைக்கப்பட்டது.
முதன்மை விருந்தினருக்கு கல்லூரி சமூகத்தால் நினைவுச் சின்னம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. (ஐ-422)

# தொழில்முறைக் கல்விக்கு வட-கிழக்கில் ஊக்கமில்லை

## மட்டக்களப்பு மாநகர முதல்வர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜூலை 23

தொழில்முறைக் கல்வியை வழங்குவதற்கு இலங்கையில் பல நிறுவனங்கள் இருந்தாலும் வடக்கு -கிழக்கில் அவை தொடர்பில் கவனம் செலுத்துவது குறைவாகவே இருக்கின்றது என்று மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.

ஐ.வி.எல் தனியார் தொழிற்கல்வி நிறுவனத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்றது. இதன்போது நிகழ்வில் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
எமது பிரதேசத்தின் கல்வி நிலை மற்றும் மாணவர்கள், இளைஞர்களின் எதிர்காலம் மிகப் பெரிய கேள்விக்குறியில் இருக்கின்றது.
சாதாரண தரம் மற்றும் உயர்தர பெறுபேறுகளில் பெரும் வீழ்ச்சி நிலை காணப்படுகின்றது. உயர்தரம் முடித்து பல்கலைக்கழக அனுமதி என்பது சுமார் பத்து வீதத்தினருக்கே கிடைக்கின்றது. எனவே இவ்வாறான நிலைமையில் மாணவர்கள் தொழிற்துறை சார் கல்வியில் அதிக அக்கறை செலுத்த வேண்டும்.
தனியார் கல்வி முறை என்பது போட்டித்தன்மை கொண்டது. அதில் விருத்தி பெற வேண்டும். பொருளாதார அபிவிருத்தியில் பெரும் பங்களிப்புச் செலுத்துவனவாக சுற்றுலா மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகள் காணப்படுகின்றன. அவற்றினூடான கல்வி முறைகளை அணுகவேண்டும்.
தொழில்முறைக் கல்வியை வழங்கவென இலங்கையில் பல நிறு வனங்கள் இருந்தாலும் வடக்கு கிழக்கில் அவை தொடர்பில் கவனம் செலுத்துவது குறைவாகவே காணப்படுகின்றது. தமிழ் மாணவர்களும் இதற்கான முக்கியத்துவத்தை வழங்குவதில்லை. பெற்றோர்களும் இதற்கு ஊக்கம் அளிப்பதில்லை. பிள்ளைகளின் துறை சார்ந்த அனுபவத்தினூடான கல்விக்குப் பெற்றோர்கள் ஊக்கம் கொடுப்பதும் குறைவாகவே இருக்கின்றது.
அரச தொழில்வாய்ப்பு என்பது சுமார் இருபது வீதத்துக்கும் குறைவானவர்களுக்கே கிடைக்கின்றது. அவ்வாறு இருக்கின்ற பட்சத்தில் மிகுதி இருப்பவர்கள் ஏதோவொரு விதத்தில் தனியார் துறைகளினூடாகவே தொழில் வாய்ப்புக்களைப் பெற வேண்டும். அந்த வகையில் துறைசார் அனுபவம் கொண்ட தொழில்முறைக் கல்வியே அவர்களுக்கு அவசியம்-என்றார். (ஐ.105)



## பரிசளிப்பு நிகழ்வும் நூல் வெளியீடும்

கொடிகாமம், ஜூலை 23
மானிப்பாய் மகளிர் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு நிகழ்வும், நூல் வெளியீடும் கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்றன.
கல்லூரி அதிபர் திருமதி நர்மதா பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்துகொண்டார்.
ஆரம்ப நிகழ்வாக விருந்தினர்கள் மேலைத்தேய வாத்திய இசையோடு அழைத்துவரப்பட்டு, மங்கல விளக்கேற்றல், இறை வணக்கம், தேசியக் கொடியேற்றல், பாடசாலைக் கொடியேற்றல் என்பன இடம்பெற்றன.
தொடர்ந்து சீரமைக்கப்பட்ட சிறுவர் முற்றத்தை முதன்மை விருந்தினர் , திரைநீக்கம் செய்துவைத்தார்.
நாடாளுமன்ற உறுப்பினரால் ஒதுக்கீடு செய்யப்பட்ட கிராம எழுச்சித் திட்ட நிதியினூடாக இந்தச் சிறுவர் முற்றம் சீரமைக்கப்பட்டது.
தொடர்ந்து இளநங்கை பரிசளிப்பு மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது. முதற் பிரதியை கல்லூரியின் லண்டன் பழைய மாணவர் சங்கச் செயலாளர் எஸ்.தேவராஜ் பெற்றுக்கொண்டார். இதனையடுத்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன.
அதன் பின்னர் பரிசில்கள் வழங்கல் இடம்பெற்றது. மாணவியரின் பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.
நிகழ்வில் கல்லூரியின் உதவி, பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், அயற் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வித் துறை'சார் பெரியோர்கள், பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (ஐ-159)

## சபைக் கூட்டம்


கொடிகாமம், ஜூலை 23
யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குச் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-159)

## பழம்வீதி ரூ.9 மில். நிதியில் சீரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை23
யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட பழம் வீதி காப்பெற் வீதியாகச் சீரமைக்கப்படவுள்ளது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனின் 9 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் ஊடாக இந்த வீதி சீரமைக்கப்படவுள்ளது.
மாநகர சபையின் 3 ஆம் வட்டாரத்துக்கு உட்பட்ட பழம்வீதியைக் காப்பெற் வீதியாகச் சீரமைத்து தருமாறு வட்டார விகிதாசாரப் பட்டியல் உறுப்பினரிடம் பொது மக்கள் கோரிக்கை விடுத்தனர்.
குறித்த கோரிக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டதையடுத்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
இதன் பிரகாரம் நீண்ட காலமாகச் சீரமைப்பின்றிக் காணப்பட்ட குறித்த 650 மீற்றர் நீளம் கொண்ட வீதியானது சீரமைப்புச் செய்யும் நிலையில் பலாலி வீதிக்கு சமாந்தரமான பயன்பாட்டைக் கொண்டதாக அமையும்.
நல்லூர் உற்சவ காலத்தில் மிகவும் முக்கிய பாதையாகவும் 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்களின் நித்திய போக்குவரத்துப் பாதையாகவும் குறித்த வீதி காணப்படுகிறது. குறித்த வீதிக்கான ஆரம்பப் பணிகள் செப்ரெம்பர் மாதமே முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-105)

யாழ். போதனா மருத்துவமனையில்

## குவைத் செம்பிறை மீள்வாழ்வு சிகிச்சை நிலையம் திறப்பு



யாழ்ப்பாணம்,ஜூலை 23
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அமைக்கப்பட்ட குவைத் செம்பிறை மீள்வாழ்வு சிகிச்சை நிலையம் பொதுமக்களிடம் கையளிக்கப்படவுள்ளது.
இந்த நிகழ்வு நாளைமறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10மணிக்கு சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் மருத்துவர் ராஜிதசேனாரத்ன தலைமையில் நடைபெற உள்ளது.
அமைச்சர் ராஜித சேனாரத்னவுடன் இணைந்து குவைத் செம்பிறைச் சங்கத் தலைவர் மருத்துவர் ஹிலால் முசேட் அல் சேயர், இலங்கைக்கான குவைத் நாட்டுத் தூதர் கலாவ்பூ தாக்யர், சிங்கப்பூர் சுகாதார சேவை தலைமை நிறைவேற்று அதிகாரி , யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி ஆகியோர் மீள்வாழ்வு சிகிச்சை நிலையத்தைத் திறந்து வைக்கவுள்ளனர்.
இந்த மீள்வாழ்வு சிகிச்சை நிலையமானது சிங்கப்பூர் நாட்டிலுள்ள மருத்துவமனைகளுக்கு இணையானதாக நவீன உபகரணங்களுடன் அமைந்துள்ளது.
குவைத் நாட்டினது செம்பிறைச் சங்கத்தால் ரூபா 530 மில்லியன் நன்கொடை நிதியுதவியில் இந்த மீள்வாழ்வு சிகிச்சை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.
இந்த மீள்வாழ்வு சிகிச்சை நிலையத்தில் என்பு முறிவு, மூட்டுக்களில் ஏற்படும் பாதிப்பு மற்றும் நீண்டகாலமாக படுக்கையில் உள்ளவர்களுக்கான சிகிச்சைகள், இயன் மருத்துவர்களின் உடற்பயிற்சிகள், போர் மற்றும் விபத்துக்களால் கை, கால்களை இழந்தவர்களுக்கான செயற்கை அவயவங்கள் வடிவமைத்து வழங்கல், செயற்கை அவய வடிவமைப்பு நிபுணர்களின் சேவைகள், சிறப்பு தேவை உள்ளோருக்கான தொழில் வழிகாட்டு நிபுணர்களின் உடற்பயிற்சிகள், சிகிச்சைகள் என்பன வழங்கப்படவுள்ளன. (ஐ)



## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை 23
இந்த வருடம் தரம் 5 புலைமைப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இலவச பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நடைபெற்றது.
இந்த நிகழ்வு இளவாலை றோ.க.த ஆண்கள் பாடசாலையில் கடந்த சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் நடைபெற்றது. ஆசிரியர் கலாமோகன் வளவாளராகக் கலந்து கொண்டு கருத்தரங்கை நடத்தினார்.
இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'அரும்பு' கல்வி செயற்திட்டத்தின் கீழ் இந்தக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. இதில் இளவாலை மற்றும் அயற்கிராமங்களைச் சேர்ந்த சுமார் 150க்கும் அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். (ஐ-222)

## சிவசிதம்பரத்தின் 96ஆவது பிறந்த நாள் நிகழ்வுகள்

வடமராட்சி,ஜூலை 23
மறைந்த மு.சிவசிதம்பரத்தின் 96ஆவது பிறந்த நாள் நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை கரவெட்டியில் நடைபெற்றன.
மறைந்த மு.சிவசிதம்பரம் தமிழ்த் தலைவர்களில் ஒருவரும், நாடாளுமன்ற முன்னாள் உபசபாநாயகரும், உடுப்பிட்டி நல்லூர் தொகுதிகளின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமாவார்.
கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதேசத்தில் உள்ள ஆலயங்களில் சிறப்பு ஆத்மசாந்தி வழிபாடுகள் இடம்பெற்றன.
தொடர்ந்து முற்பகல் 9 மணியளவில் நெல்லியடி பேருந்து நிலையத்தில்




அமைந்துள்ள அன்னாரின் உருவச் சிலைக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.
நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், எம்.ஏ. சுமந்திரன், மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், பா.கஜதீபன், தர்மலிங்கம், சிவயோகன், சுகிர்தன், கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத் தலைவர் உபாலி பொன்னம்பலம், உபதலைவர் ராகவன், போசகர் செல்வரட்ணம் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கல்விச் சமூகத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-159)

# பனைகளை அழிப்பதில் உள்ள வேகம் அவற்றை நடுவதிலும் இருக்க வேண்டும்

## பனை அபிவிருத்தி சபைத் தலைவர் இராசேந்திரன் தெரிவிப்பு





*யாழ்ப்பாணம்,ஜூலை 23*

**பனை மரத்தை அழிக்கும்போது உள்ள வேகம் பனை மரத்தை நடுவதிலும் காட்ட வேண்டும். இவ்வாறு பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் என்.இராசேந்திரன் தெரிவித்தார்.**

வடக்கு மாகாணத்தின் பனை எழுச்சி வாரத்தின், பனை மான்மியம் 2019 எனும் தலைப்பிலான கண்காட்சியும் விற்பனை நிகழ்வு வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் ,பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பனை அபிவிருத்தி சபை ஆகியவற்றின் இணைதலோடு நல்லூர் சங்கிலியன் வளாகத்தில் நேற்று ஆரம்பமானது.

நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பனை என்பது எமது அடையாளம் ,வாழ்வாதாரம் என்றே கூற முடியும். அந்த அளவுக்கு பனைகள் எமது சொத்தாக காணப்படுகின்றன. ஆனால் இந்த பனையை அழிக்கும் போது இருக்கும் வேகம் அதனை நாட்டுவதில் இல்லை. காணிகளை விலைக்கு வாங்கி விட்டு பெரிய இயந்திரங்களை பயன்படுத்தி பனைகளை அழிக்கிறார்கள். அதற்கு பனை அபிவிருத்தி சபையிடமோ,பிரதேச செயலகத்திடமோ அனுமதி பெறுவது இல்லை. எமது கட்டாயமான தேவைக்கு பனை மரங்களை அளவாக வெட்டலாம். ஆனால் அதை போன்று பனை மரம் ஒன்றை நடுவதில் அக்கறை கொள்வதில்லை. பனை மரத்துக்கு தண்ணீர் ஊற்றி பசளை போட்டு பராமரிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே பனையை வெட்டுவதில் இருக்கும் வேகத்தை பனை மரம் நடுவதிலும் காட்ட வேண்டும்.



பனை மரத்தில் ஒருவர் ஏறினால்த் தான் அதன் சார்ந்த பயனை பெற முடியும். ஆனால் மரத்தில் ஏறுபவர்களின் எண்ணிக்கை தற்போது வெகுவாக குறைந்துள்ளது. போதிய வருமானம் இன்மை,சமூகம் சார்ந்த தொழிலாக பார்க்கபட்டமை ,வெளிநாட்டு வேலைகள் கிடைத்தமை போன்ற பல்வேறு காரணங்களினால் மரம் ஏறுபவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துவிட்டது.

மரம் ஏறும் ஒருவர் இரண்டு பேரை என்றாலும் பயிற்று விக்க வேண்டும். அப்போது தான் பனை சார்ந்த உற்பத்திகள் இன்னமும் முன்னேற்றம் அடையும். இவர்களுக்கும் என்ன வகையான உதவிகளை வழங்க முடியும் என்று நாம் பரீசீலனை செய்து வருகின்றோம் என்றார்.

நிகழ்வில் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இமானுவேல் ஆனோல்ட் தெரிவித்ததாவது:

பன்னாட்டு சந்தையில் எமது மண்ணின் பெருமையை கூறும் அளவுக்கு பனை சார் உற்பத்தி பொருள்கள் அமைந்துள்ளன. ஆனால் அதனை ஏற்றுமதி செய்தல் ,சந்தை படுத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு திடமான நிலை ஒன்று காணப்படவில்லை. எம்மிடம் பனை என்ற வளம் உள்ளது. அதனை சரியாக பயன் படுத்த முடியாமல் இருக்கின்றோம். தொற்றா நோய்களை ஏற்படுத்தாததும் ,சூழலுக்கு உக்கும் பொருள்களை வழங்க கூடியதாக இந்த பனம் பொருள்கள் உள்ளன. அவற்றை நாம் பயன்படுத்த வேண்டும். ஆகவே பனை சார்ந்த உற்பத்திகளை அதிகரிக்கவும் ,அதனை ஏற்றுமதி செய்து சந்தை படுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

நிகழ்வின் முதன்மை விருந்தினராக கூட்டுறவு ,மகளீர் விவகார அமைச்சின் செயலாளர் ஆர் வரதீஸ்வரன் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். பனம் சார் உற்பத்தி பொருள்களின் காட்சி கூடங்கள்,மாணவர்களின் ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. பனை சார்பான பாடல் அடங்கிய இறுவெட்டும் ,சஞ்சிகை வெளியீடும் இடம் பெற்றன.

அத்துடன் நிகழ்வுக்கு வருகை தந்தவர்களுக்கு பனை ஓலையில் கூழும் ,பனங்காய் பணியாரமும் வழங்கப்பட்டது. மேலும் .நிகழ்வில் அரச அதிகாரிகள்,கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள்,பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-7)



வட மாகாண ஆசிரியர் இடமாற்றம்;

## பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கு சிறப்புக்குழு

யாழ்ப்பாணம்,ஜூலை 23

வடக்கு மாகாணத்தில் ஆசிரியர் இடமாற்றத்தின் போது ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கு குழு ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

ஆளுநரின் ஊடக பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

வடக்கு மாகாணத்தில் ஆசிரியர்களின் இடமாற்றங்களின் போது ஏற்படும் கொள்கை ரீதியான பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், அதிபர் சேவைத் தரம் III இல் காணப்படும் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்தப் பிரச்சினைகள் குறித்து ஆராயும் பொருட்டு கல்வியமைச்சின் செயலாளரின் தலைமையில் மாகாணப் பணிப்பாளர் மற்றும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட குழுவொன்றை நியமிக்கவுள்ளதாக குறிப்பிட்ட ஆளுநர் , வடக்கு மாகாணத்தில் நிலவும் இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் சுமூகமான தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்கு எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டார். என்றுள்ளது. (ஐ-7)

## ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு

கொடிகாமம், ஜூலை 23

யாழ்ப்பாணம், விடத்தற்பளை பிரதேசத்தில் ஆரம்ப சுகாதார நிலையம்ஒன்றுகடந்தசனிக்கிழமைதிறந்துவைக்கப்பட்டது. விடத்தற்பளை சங்கக்கடைக்கு அருகாமையில் அமைக்கப்பட்ட நிலையம் பிற்பகல் 2 மணியளவில் கிராம அபிவிருத்தி சங்க தலைவரும் மருத்துவருமான வி.ஆறுமுகம் தலைமையில் திறந்துவைக்கப்பட்டது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், யாழ்ப்பாண மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.நித்தியானந்தா, தென்மராட்சி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வன், விடத்தற்பளை கிராம அலுவலர் திருமதி றஜிதா இராசதீபன் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-159)



# தபால் ஊழியர்கள் போராட்டம்






யாழ்ப்பாணம்,ஜூலை 23

சம்பளம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைளை முன்வைத்து தபால் ஊழியர்கள் நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் தபால் சேவைகள் தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த போராட்டம் முன்னெடுக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில் நாட்டின் பல பகுதிகளில் தபால் ஊழியர்கள் போராட்டம் நடத்தி வருகின்ற நிலையில் யாழ்ப்பாணம்,வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளிலும் அதற்கு ஆதரவு வழங்கும் வகையில் தபால் ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் மாவட்டங்களின் முதன்மை தபாலகம் உட்பட அனைத்துதபால்நிலையங்களும் நேற்று ஊழியர்கள் பிரசன்னமாகாமையினால் மூடப்பட்டுள்ளன. இந்த நிலையில் பல்வேறு தேவைகளின் பொருட்டு. தபால் நிலையத்துக்கு வருகை தந்த பொதுமக்கள் பஸ் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றதைக் காணக் கூடியதாக வுள்ளது. எனினும் சில முதன்மை அஞ்சல் அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களில் உள்ளக பணிகள், அவசர சேவைகள், பரீசாட்திகளுக்கான அனுமதி அட்டைகள், முதியோர் ஓய்வூதிய பணம் பெறும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றமையை காணக் கூடியதாகவுள்ளது. (ஐ-17)

## அனுமதி அட்டை வழங்கல்

சாவகச்சேரி, ஜூலை 23

யாழ்ப்பாணம், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இந்த வருடம் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

நாளை புதன்கிழமை முற்பகல் 1 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தமது பெற்றோருடன் பாடசாலைச் சீருடையில் வருகை தந்து பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் செ.பேரின்பநாதன் அறிவித்துள்ளார். (ஐ-9)

# போரின் பின்னர் வீழ்ந்த கல்வி தற்போது உயர்வடைந்துள்ளது

## முன்னாள் மாகாண உறுப்பினர் ரவிகரன் தெரிவிக்கிறார்

முல்லைத்தீவு, ஜூலை 23

போரின் பின்னர் குறிப்பிட்டளவு காலத்தில் கல்வியில் வெகுவான வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. அதன் பின்பு ஒரு மீட்சி பெற்றதைப் போல, எங்கள் மாணவர்களின் உயர்ச்சி படிப்படியாக மேலோங்கி வருகின்றது.

ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய திறமைகளைப் போதித்து மாணவர்களைக் கல்வியில் உயர்த்திக்கொண்டு வருகின்றனர். இதை யாரும் மறுக்க முடியாது.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு முள்ளியவளைப் பகுதியில் அமைந்துள்ள கதிர் கற்கை வளாகத்தின் புதிய கட்டடத் திறப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர்க் காலத்தில் பலத்த நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. போர்ச் சூழலுக்குள்ளும் மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளில் சிறந்து விளங்கினர். அத்துடன் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்குப் பெற்றோர்கள் என்றுமே துணையாக இருந்து அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும்.

போர் நடைபெற்றுக்கொண்டிருந்தநேரம் தனித்தனியே பிரிவுகள் உருவாக்கப்பட்டு மக்களுக்கான எழுச்சியுடன் சம்பந்தப்பட்ட வகையிலே, ஒவ்வொரு துறைகளாக உருவாக்கப் பட்டு, கல்விக்காக கல்விக் கழகம் உருவாக்கப்பட்டு பாடசாலை மாணவர்களுடைய கல்விக்கு, பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

எமது மாணவர்கள் தங்களுடைய கல்விச் செயற்பாட்டில் ஒழுங்கான வரவுகளைப் பேணி வந்தால், கல்வியில் ஒரு உயர்ந்த நிலையை அடைய முடியும். பிள்ளைகளுடைய கல்விச் செயற்பாடுகளுக்கு, பெற்றோர்கள் தங்களை முழுமையாக அர்ப்பணிக்கவேண்டும்.

ஏனெனில் இந்தக் கல்வியினூடாகத்தான் நாம் இழந்த இழப்பீடுகளை ஈடு செய்யமுடியும். பொதுவாக நாங்கள் அனைவரும் ஏதோ ஒரு விதத்தில் நொந்து நூலாகிப்போய் இருக்கின்றோம். கல்வியினூடாகத்தான் எமது சமூகத்தை, எங்களுடைய இனத்தை முன்னேற்றமுடியும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளை ஊக்குவித்து அர்ப்பணிப்போடு செயற்படவேண்டும் என்றார். (த-246)

# அரசியல் சாராது நினைவு கூருங்கள்

## போரின் சாட்சி கோரிக்கை



முல்லைத்தீவு, ஜூலை 23

தாயகத்தில் உள்ள அனைத்தும் உறவுகளும் அரசியல் சாராது போரில் உயிரிழந்த மக்களை நினைவுகூர வேண்டும் என்று போர்க்கால இறுதிச் சாட்சிகளில் ஒருவரும், அரச மருந்தாளராக இருந்தவருமான கனடாவில் வசிக்கும் கமலாம்பிகை கந்தசாமி தெரிவித்தார்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு சுனாமி நினைவாலயத்தில் 'வன்னிக்குறோஸ்' நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் செஞ்சோலைப்படுகொலை மற்றும் மந்துவில் படுகொலை தொடர்பான நினைவேந்தல் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கும்போது இவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எமது பிரதேசத்தில் போரில் உயிரிழந்த உறவுகளை நினைவிற்கொள்வதையிட்டு பெருமையடைகின்றேன். 'வன்னிக்குறோஸ்' தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பினால் செஞ்சோலை நினைவுத்தூபி கட்டப்பட்டுக் கொண்டிருப்பதையிட்டுப் பெருமையடைகின்றேன்.

எனினும் நினைவுத்தூபி அமைப்பதில் புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் இரு உறுப்பினர்கள் தடையாக இருக்கின்றமையையிட்டு கவலையடைகின்றேன்.

இவ்வாறான செயற்பாடுகள் இனிவரும் காலங்களில் இடம்பெறக்கூடாது. அனைத்து உறவுகளும் இணைந்து அரசியல் சாராது போரில் உயிரிழந்த மக்களின் நினைவுகளை மேற்கொள்ளவேண்டும். எமது ஆவல் தமிழினம் என்ற ஒன்றின்கீழ் அனைவரும் ஒன்று சேர்ந்து எல்லா விடயங்களிலும் பங்குபற்றவேண்டும் என்பதுதான் என்றார்.

அவர் மந்துவில் பகுதியில் அமையவுள்ள நினைவுத்தூபிக்கு என்று 20 ஆயிரம் ரூபா பணமும் வன்னிக் குறோஸ் அமைப்புக்கு 50 ஆயிரம் ரூபா பணமும் வழங்கினார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-ரி3)



# நானாட்டானில் ஆடிப்பிறப்பு

மன்னார், ஜூலை 23

நானாட்டான் பிரதேச ஆடிப்பிறப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் சிறப்பாக நடைபெற்றது. வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையில் இது நடைபெற்றது.

அறநெறிப் பாடசாலை மாணவர்கள், பொதுமக்களின் பங்குபற்றலுடன் எருவிட்டான் பிள்ளையார் கோவிலில் கூழ் காய்ச்சலும் பொதுநோக்கு மண்டபத்தில் நிகழ்வுகளும் நடைபெற்றன.

இதில் கிராம அலுவலர், கலாசார அபிவிருத்தி அலுவலர், எருவிட்டான் மாதர் சங்கத்தினர், அறநெறிப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் பலரும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வை நானாட்டான் பிரதேச கலாசார அலுவலர் ஜீவிதா நெறிப்படுத்தியிருந்தார். (த-213)



# 'ஊரகம் தோறும் உள்ளூராட்சி' கிளிநொச்சியில் நடமாடும் சேவை

## ஏனைய இடங்களிலும் நடத்தத் திட்டம்

கிளிநொச்சி, ஜூலை 23

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் 'ஊரகம் தோறும் உள்ளூராட்சி' எனும் நடமாடும் சேவை கிளிநொச்சி கணேசபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

சபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வு, பிரதேச சபையால் சேவை பெற்றுக்கொள்ளக்கூடிய 15 விடயங்களை உள்ளடக்கியதாக நடைபெற்றது.

பிரதேச சபையின் சேவைகளை மக்கள் மத்தியில் துரிதமாக வழங்கும் வகையிலும் சேவைப் பரவலாக்கத்தைக் கருத்திற்கொண்டும் பிரதேச சபையால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமையவும் முதலாவது நடமாடும் சேவையாக இது நடைபெற்றது.

வீதி அபிவிருத்தி, கழிவகற்றல், ஆயுள்வேத மருத்துவம், வர்த்தக நிலையங்களுக்கான அனுமதி வழங்கல், சுகாதார பரிசோதனை, ஆதனவரி தொடர்பான ஆலோசனைகள் உள்ளிட்ட பல விடயங்கள் இந்த நடமாடும் சேவை ஊடாக மக்களுக்கு வழங்கப்பட்டன. இத்தகைய நடமாடும் சேவைகளை சபையின் எல்லைக்குட்பட்ட ஏனைய பகுதிகளிலும் நடத்தவுள்ளதாக தவிசாளர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார். இந்த நடமாடும் சேவையில் தவிசாளர், செயலர், அலுவலர்கள், ஊழியர்கள் பலர் பங்குகொண்டிருந்தனர். (த-6)

# 8 வருடங்களின் பின்னர் புதிய நிர்வாக தெரிவு நடந்தது

கிளிநொச்சி, ஜூலை 23

8 வருடங்களின் பின்னர் மாங்குளம் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கப் பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு அமைய புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் பல்வேறு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டதால் மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்று மேற்கொள்ளப் பட்ட தொடர் நடவடிக்கைகளின் பிரகாரம் கடந்த சனிக்கிழமை ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் றமேஸ் தலைமையில் புதிய நிர்வாகத் தெரிவு நடந்தது.

அதன்படி, தலைவர் இ.அருளானந்தம், செயலர் செ.லவக்காந், பொருளாளர் யோ.கபிலன், உப தலைவர் அ.தேவதர்சன், உப செயலர் அ.தனராஜ் ஆகியோரும், உறுப்பினர்களாக வீ.மயூரன், கு.சச்சிதானந்தமூர்த்தி, தி.கிந்துஜன், சா.டார்வின்ராஜ், க.பரமசிவம், சி.சதீஸ்குமார், ச.சிவானந்தம், அ.தேவபாலன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (த-222)

# இறுதிப் போர் இழப்புக்கள் பற்றி பச்சிலைப்பள்ளி பி.சபை விவரம் திரட்டுகிறது

கிளிநொச்சி, ஜூலை 23

இறுதிப் போரில் ஏற்பட்ட இழப்புகள் தொடர்பான விவரங்களைத் திரட்டுவதற்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். இது பற்றி தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் மாதாந்த சபை அமர்வு சபையின் சபா மண்டபத்தில் தவிசாளர் சு.சுரேன் தலைமையில் கடந்த வாரம் நடைபெற்றது. தவிசாளர் தீர்மானம் ஒன்றை முன்வைத்து குறித்த விடயத்தைத் தெரிவித்தார். இறுதிப் போரில் எமது இனத்தில் பெருமளவு இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இது தொடர்பான சரியான தகவல்கள் தமிழ்த் தரப்பினரிடையே காணப்படவில்லை. இந்த விவரங்களைத் திரட்டுவதற்குக்கூட நாம் எவரும் இதுவரை முயற்சிக்கவில்லை. எனவே மக்கள் நமக்களித்த ஆணையின் பிரகாரம் எமது பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இறுதிப் போரின்போது ஏற்பட்ட உயிரிழப்பு மற்றும் ஏனைய இழப்புகள் தொடர்பான விவரங்களைத் திரட்டுவது எனவும் இதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார். சபையில் கருத்துத் தெரிவித்த அனைத்து உறுப்பினர்களும் அதனை ஏற்றுக் கொண்டு ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரிவித்தனர். (த-6)

# ஆடிச்செவ்வாய் சிறப்பு பூஜைகள்

வவுனியா, ஜூலை 23

வவுனியா சிறிநகர், சிறிதுர்க்கை அம்மன் ஆலயத்தில் ஆடிச்செவ்வாய் தினத்தை முன்னிட்டு ராகு கேது தோசநிவர்த்தி சிறப்பு பூஜைகள் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

அடியவர்களை குறித்த பூஜையில் கலந்துகொண்டு அருள் பெறுமாறு ஆலயபரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ-110)

பரீட்சைக் காலம் நிறைவுறும்வரை

# ஒலிபெருக்கி பாவனைக்கு கட்டுப்பாடு

## வவுனியா அந்தணர் ஒன்றியம் வேண்டுகோள்

வவுனியா, ஜூலை 23

பரீட்சைக் காலம் முடிவடையும் வரை ஆலயங்களில் ஒலிபெருக்கி சாதனங்களைக் குறைவான ஒலி அளவில் பயன்படுத்துமாறு வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் அனைத்து ஆலயத்தினரிடமும் கோரிக்கை விடுக்கின்றது.

இது தொடர்பாக வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றிய செயலர் மயூரசர்மா அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஈழத்தில் அமைந்துள்ள பெரும்பாலான ஆலயங்களில் தற்போது திருவிழாக்கள் நடைபெறுகின்றன. அவை அனைவரினதும் மனக்கிடக்கைகளையும் வெளிப்படுத்துபவனவாக அமைவது சிறப்பே. ஆலயங்கள் எப்போதும் எங்கள் மன அமைதிக்கும் நிம்மதிக்காகவும் வழிபாடுகளை இயற்றுகின்ற இடங்களாக இருக்கின்றன.

அவ்வாறான சிறப்புக்களை கொண்ட எமது ஆலய திருவிழாக்கள் ஒவ்வொன்றும் பாரம்பரியத்தையும் வரலாறுகளையும் எமக்குப் பறைசாற்றி நிற்கின்றன. இன்று மனமாற்றத்துக்குட்பட்ட பல மனிதர்களால் மக்கள் திசை திருப்பப்பட்டு அவர்களின் கலாசாரங்கள், மத நம்பிக்கைகள் சீரழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது ஒவ்வொரு மனிதராலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

அந்தவகையில் திருவிழாக் காலங்களான இந்தமாதம் மற்றும் அடுத்த மாதங்களில் மாணவர்கள் பரீட்சைகளுக்கு முகங்கொடுக்கின்ற காலப்பகுதிகளாக அமைந்துள்ளன. அதனால் குறிப்பிட்ட காலப்பகுதிகளில் எமது ஆலயச்சூழலில் ஒலிபெருக்கி சாதனங்களின் ஒலி அளவுகளைக் குறைத்து மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். கல்வி என்பது அனைவருக்கும் இன்றைய காலகட்டத்தில் இன்றியமையாத சொத்து. எனவே இந்தப் பரீட்சை காலப்பகுதியிலாவது ஒலிபெருக்கி சாதனங்களை முடிந்த வரை சத்தத்தைக் குறைத்து அவர்களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் செயற்படுவோம் என்று அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-110)

# 4 கோடி ரூபா நிதி கிடைத்தும் குளத்தை சீரமைக்க முடியா நிலை

## தடைபோடுகிறது வனவளத் திணைக்களம்

முல்லைத்தீவு ஜூலை 23

முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார் கட்டுப்பகுதியில் உள்ள நஞ்சுண்டான் குளத்தைச் சீரமைக்கவென்று நான்கு கோடி ரூபா ஒதுக்கப்பட்டும் இதுவரை சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு வனவளத்திணைக்களம் அனுமதி வழங்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குளத்தைச் சீரமைக்க வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் பரிந்துரைக்கு அமைவாகக் குறித்த நிதி ஒதுக்கப்பட்டது.

இது தொடர்பில் அவரிடம் கேட்டபோது, நஞ்சுண்டான் குளத்தைச் சீரமைக்க வனவளத்திணைக்களம் அனுமதி வழங்கியுள்ள நிலையில் அந்தக் குளத்தை அதிகாரிகள் சென்று பார்வையிட்டுள்ளார்கள். 40 ஆண்டுகளாகக் குறித்த குளம் சீரமைக்கப்படாத நிலையில் குளத்தின் அணைக் கட்டைக் கட்டுவதற்காக எத்தனை மரங்கள் வெட்டவேண்டும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

பத்து மரங்களுக்குள் ஒரு மரத்தை வெட்டுவதற்குத்தான் முல்லைத்தீவு மாவட்ட வனவளத்திணைக்களம் அனுமதி கொடுக்கக்கூடிய அதிகாரம் இருப்பதாகவும் கிளிநொச்சியில் உள்ள வனவளத்திணைக்களத்துக்கு 25 மரங்களுக்குள் ஒரு மரத்தை வெட்டுவதற்குத்தான் அனுமதி கொடுக்கும் அதிகாரம் உள்ளது என்றும் வனவளத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் குளத்தின் அணைக்கட்டைக் கட்டி அமைப்பதற்கு ஆயிரத்து 200 மரங்கள் வெட்டவேண்டியுள்ளன என்று கணக்கிடப்பட்டுள்ளது. 2ஆயிரத்து 400 மரக்கன்றுகள் அந்தப் பகுதியில் நடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதியை மாவட்ட வனவளத்திணைக்கள அதிகாரி மாவட்டச் செயலருக்கு அனுப்பி அதனை மத்திய வனவள அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதி கிடைக்க காலதமதமாகுமாக இருந்தால் நான்கு கோடி பணத்துக்கு மாற்றுத்திட்டம் ஏதாவது செய்ய வேண்டும். இது தொடர்பில் மாவட்டச் செயலருடன் கலந்துரையாடி முடிவெடுக்கப்படும் என்று சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார். (த-ரி3)



# சிறப்பாக நடைபெற்ற சவாரிப் போட்டி

கிளிநொச்சி,ஜூலை 23

மாட்டுவண்டி சாவாரியும், உழவு இயந்திர பெட்டி கொழுவும் போட்டியும் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி வட்டக்கச்சி சவாரி திடலில் முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்துகொண்டார். போட்டியில் 15 க்கு மேற்பட்ட உழவு இயந்திரங்களும், 80 க்கு மேற்பட்ட மாட்டு வண்டில் ஜோடிகளும் பங்குபற்றியிருந்தன. குறித்த போட்டி 5 பிரிவுகளாக இடம்பெற்றன. நிகழ்வில் பெருமளவானோர் கலந்துகொண்டு பார்வையிட்டதுடன், உற்சாகத்தையும் வழங்கியிருந்தனர்.

# சின்னக்குளத்தை சீரமைக்க மகாவலி தடை போடுகின்றது

## கமநல சேவைத் திணைக்கள அலுவலர் தெரிவிப்பு

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியில் அமைந்துள்ள, கமநலசேவைத் திணைக்களத்துக்குரிய சின்னக்குளத்தின் மறுசீரமைப்பு வேலைகளுக்கு மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை இடையூறாக காணப்படுகின்றது என்று முல்லைத்தீவு கமநல சேவைத் திணைக்கள அபிவிருத்தி அலுவலர் இ.சுகந்தன் தெரிவித்துள்ளார். அதனால் அந்த நிதி வேறு திட்டத்துக்கு மாற்றப்பட்டது என்றும் தெரிவித்தார்.

கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையின் இந்த ஆண்டுக்கான முதலாவது அபிவிருத்திஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் கடந்த 18ஆந் திகதி நடைபெற்றது.

குறித்த சின்னக்குளத்தின் மறுசீரமைப்புத் தொடர்பில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் போது கமநலசேவைத் திணைக்கள அலுவலர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த வருடம் குறித்த சின்னக்குளத்தின் சீரமைப்புக்கு 13.2 மில்லியன் ரூபா தேவை என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. தீர்மானிக்கப்பட்டதற்கிணங்க சீரமைப்புக்கான நிதி தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால், சின்னக்குளம் தமது கட்டுப்பாட்டில் இருப்பதாகத் தெரிவித்து, மகாவலி அபிவிருத்தி அதிகார சபை குளத்தின் சீரமைப்புவேலைகளை தொடங்குவதற்கு இடையூறு விளைவிக்கின்றது. எனவே இந்தக் குளத்தின் சீரமைப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதியை, வேறு குளத்தின் சீரமைப்புக்கு மாற்றிவிட்டோம் - என்றார். (த-246)

# முறையற்ற மண் அகழ்வை நிறுத்துமாறு பொலிஸ் நிலையத்தில் திரண்ட மக்கள்

கிளிநொச்சி, ஜூலை 23

கிளிநொச்சி பூநரி பகுதியில் மேற்கொள்ளப்படும் முறையற்ற மண்ணகழ்வை நிறுத்தக் கோரி மக்கள் பூநகரி பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் ஒன்றுகூடி முறைப்பாடு தெரிவித்தனர்.

கடந்த மூன்று நாள்களாக குறித்த பகுதியில் பிரதேச மக்கள் மண்ணகழ்வைத் தடுத்து நிறுத்துமாறு தெரிவித்து வந்த நிலையில் குறித்த பகுதிக்குச் சென்றிருந்த பொலிஸார் மண்ணகழ்வை நிறுத்துவதாகக் கூறியிருந்தனர்.



இந்த நிலையில் நேற்று முன்தினம் அங்கு ஒன்று கூடிய மக்கள் மண்ணகழ்வு நடவடிக்கையை நிறுத்துவதற்குச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரினர்.

அவர்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும் அங்கு சென்றிருந்தார். இதன்போது பொலிஸாருக்கும் பொதுமக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினருக்கும் இடையில் கலந்துரையாடலும் இடம்பெற்றது. குறித்த சம்பவம் தொடர்பில் நாளை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வழங்குத் தொடர்ந்து மண்ணகழ்வை நிறுத்து வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அதையடுத்து மக்கள் கலைந்துசென்றனர். (த-6)

# மரத்துடன் மோதி டிப்பர் விபத்து

மன்னார்,ஜூலை 23

மன்னார் இலுப்பைக்கடவை பகுதியில் பனை மரத்துடன் மோதி டிப்பர் ஒன்று விபத்திற்குள்ளானது. இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.


விபத்துக்குள்ளான டிப்பரின் முன்பகுதி பலத்த சேதமடைந்திருந்த போதும் அதிஷ்டவசமாக சாரதி சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சாரதியின் நித்திரை காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-213)

# அனுமதி அட்டை வழங்கல்

சாவகச்சேரி, ஜூலை 23

யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இந்த வருடம் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் இரண்டாம் முறையாக தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் இன்று செவ்வாய்க்கிழமைதொடக்கம் வழங்கப்படவுள்ளன. பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் பாடசாலைச் சீருடையில் தேசிய அடையாள அட்டையுடன் வருகை தந்து பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் ஞானசம்பந்தன் அறிவித்துள்ளார். (ஐ-9)



## மின்தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கிளிநொச்சி மாவட்டத்தில் கரியாலை நாகபடுவான், குமுழமுனை, கிருஸ்ணாநகர் ஆகிய இடங்களிலும், வவுனியா மாவட்டத்தில் கோவில்குளம் கிராமம், பம்பைமடு கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

**நாளை**

இதேவேளை நாளை புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் பூதர்மடம், கோப்பாய் சந்தி, மானிப்பாய் வீத,கைதடி வீதி, இருபாலை, இருபாலை பழைய வீதி, வட்டக்குளம், கட்டைப்பிராய், கல்வியங்காடு, இலங்கைநாயகி, ஆடியபாதம் வீதி, நாயன்மார் கட்டு, இராமலிங்கம் வீதி, முடமாவடிகிளிகடைச்சந்தி, ஜீ.பி.எஸ் வீதி, கோப்பாய் பொலிஸ், பாற்பண்ணை, திரு நெல்வேலி சந்தை, கலாசாலை வீதி, பலாலி வீதியின் ஒரு பகுதி தனங்களப்பு, மறவன்புலவு, அறுகுவெளி ஆகிய இடங்களிலும்வவுனியாமாவட்டத்தில் கோவில்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரையான பகுதிகளிலும் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

பௌத்த அத்துமீறல்களுக்காக

# பதவி துறக்கும் அளவுக்கு எம்.பிக்களுக்கு சூடு, சுரணை உண்டென்று கூறமுடியாது

### ஈழத்து மூத்த கவிஞர் சோ. ப. இப்படித் தெரிவிக்கிறார்



*யாழ்ப்பாணம், ஜூலை 24*

*கன்னியாப் பிரச்சினை, திருக்கேதீச்சர வளைவு, முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெறும் அத்துமீறல் போன்ற பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பதவி துறக்க வேண்டுமெனக் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்திருந்தார். அந்தளவுக்கு சூடு, சுரணையுள்ளவர்களாக எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருப்பார்களென்று எதிர்பார்க்க முடியாது.*

இவ்வாறு தெரிவித்திருக்கிறார், ஈழத்து மூத்த கவிஞரான சோ.ப என்றழைக்கப்படும் சோ.பத்மநாதன்.

பாடல்பெற்ற திருத்தலமான திருக்கேதீச்சர ஆலயத்துக்குச் செல்லும் பாதையில் அமைக்கப்படவிருந்த வரவேற்பு வளைவைத் தடுத்து நிறுத்தியமை தொடர்பாக ஆராய்வதற்காகவும், எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கானதுமான சிறப்புக் கூட்டமொன்று யாழ்ப்பாணம் நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள அகில இலங்கை இந்துமாமன்ற யாழ்ப்பாணப் பிராந்தியப் பணிமனையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது;

நடந்து முடிந்த விடயங்களில் என்னை மிகவும் வருத்துகின்ற விடயம் கன்னியாவில் நடந்த சம்பவம். இது எங்கே நடந்திருக்கிறது? தமிழர்களின் பெருந்தலைவரான இரா. சம்பந்தனின் தலைவாசலில். சம்பந்தன் நான் மதிக்கின்றதொரு தலைவர். ஆனால், அவர் தன்னுடைய வரலாற்றுக் கடமையைச் சரிவரச் செய்யவில்லை. போர்க் காலத்தில்த் தான் திருகோணமலையில் பௌத்த விகாரை பெரிதாகக் கட்டப்பட்டது.

நான் என்னுடைய 12, 13 வயதில் கன்னியா வெந்நீரூற்றுக்குச் சென்று நீராடி வந்திருக்கிறேன். போர்க்காலத்தில் போனபோது அங்கொரு படைமுகாமிருந்தது. அங்கே ரிக்கற் விற்பனை, அந்த ரிக்கற்றில் வருகிற பணம் பௌத்த விகாரைக்குப் போகுதாம். எவ்வளவு பெரிய அவமானமாகவிருந்தது. அவர்களுடன் ரிக்கற் வாங்கிக் கொண்டு நாங்கள் கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில் அமைந்துள்ள பிள்ளையார், சிவன் ஆலயங்களுக்குச் செல்ல வேண்டியிருந்தது. கல்முனை தமிழ் உப பிரதேச செயலகத்தைத் தரம் உயர்த்தக் கோரி அண்மையில் சிலர் உண்ணாவிரதமிருந்திருக்கிறார்கள். இதன்போது பௌத்த பிக்கு ஒருவரும் தமிழர்களுக்காக உண்ணாவிரதமிருந்திருக்கிறார். ஏன் சம்பந்தன் கன்னியா விவகாரத்தில் உண்ணாவிரதம் இருந்திருக்கக் கூடாது?

திருக்கேதீச்சரத்தில் உடைக்கப்பட்ட வளைவை மீண்டும் அமைப்பதற்குப் பிரதேச சபை அனுமதி வழங்கியிருந்தது. அதனைத் தடுத்தவர் அங்குள்ள பேராயர் உள்ளிட்ட மதத் தலைவர்கள். அங்குள்ள இரண்டொரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய சமயத்திலும், எங்களிலும் நோகாமல், தங்களுக்கு கிடைக்கப் போகும் வாக்குக்ளிலும் நோகாமல் நழுவிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் சைவ மக்களின் வாக்குகளையும் பெற்ற கத்தோலிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களாகவுள்ளனர்.

திருக்கேதீச்சர வளைவை உடைத்து அகற்றிய இடத்தில் கத்தோலிக்க மத குரு ஒருவரும் சீருடையில் நின்றுள்ளார். ஆனால், யாழ்ப்பாணத்துப் பேராயர் தெல்லிப்பழை துர்க்கா தேவி கோவில் வளாகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் திருக்கேதீச்சர வளைவு அகற்றப்பட்ட விடயத்தில் தனக்கு உடன்பாடில்லை. இது எனது மறைமாவட்டமுமில்லை. ஆனால், நான் இதற்கு ஆதரவாகவிருப்பேன் எனத் தெரிவித்துள்ளார். இவ்வாறான விடயங்களை நாங்கள் எங்களுக்கு அனுசரணையாக எடுத்துக் கொள்ளவேண்டும் - என்றார். (த-21)

யாழ்ப்பாணத்தில்

# "நாட்டுக்காக ஒன்றிணைவோம்" செயற்றிட்டம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 23
நாட்டுக்காகக ஒன்றிணைவோம் திட்டம் யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று தொடக் கம் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை செயற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வின் எண்ணக்கருவில் 'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' என்ற தேசிய திட்டத்துக்கு அமைவாக அனைத்து மாவட்டங்களிலும் பல செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் யாழ்ப்பாண மாவட்டத்துக் குட்பட்ட பகுதிகளில் பல்வேறு நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ஐ-9)

## கலைஞர்கள் தொடர்பான தகவல் சேகரிக்கும் கால எல்லை நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 23
தமிழர்கள் பாரம்பரிய மற்றும் நவீன கலைகள்- கலைஞர்களுக்கான அரச விருது விழா எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் வாரத்தில் இடம்பெறவுள்ளது. கலைஞர்கள் தொடர்பான தகவல் சேகரிப்பதற்கான கால எல்லை எதிர்வரும் 31ஆம் திகதி வரை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளதாக இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

தமிழர் கலைகளையும் பண்பாட்டையும் வளர்த்தெடுக்கவும் மரபு வழிக் கலை வடிவங்களைப் பேணிக்காக்கவும் நவீனத்துவம் சார் கலைகளை மென்மேலும் ஊக்குவிக்கும் முகமாகப் பல்துறைகளையும் உள்ளடக்கிக் கலைஞர்களுக்கு விருது வழங்கி மதிப்பளிக்கப்படவுள்ளது.

இதனையடுத்து கலைஞர்கள் மற்றும் அவர்களது துறைசார் அனுபவங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் அதற்கான கால எல்லை கடந்த 20 ஆம் திகதி என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தக் கால எல்லை தற்போது 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஐ)






## அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம்

வவுனியா, ஜூலை 23
அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி, அவர்களின் விடுதலையைத் துரிதப்படுத்துமாறு கோரி வவுனியாவில் நேற்று மதியம் கவனவீர்ப்புப் பேராட்டம் நடத்தப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் வவுனியா உறவுகள் வவுனியா மாவட்டச் செயலகம் முன்பாக நேற்று 884ஆவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதன் ஒரு கட்டமாகவே அரசியல் கைதிகளுக்காக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"நீண்டகாலமாகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை உடனே விடுதலை செய், அமெரிக்காவே! சிங்கள பௌத்த ஒடுக்குமுறை ஜனநாயகத்திலிருந்து (சிங்கள அதிகார ஜனநாயகத்திலிருந்து) தமிழர்களை விடுவிக்க உன் உதவி தேவை, எங்கள் உயிர் பிரிவதற்கு முன்பு எமது பிள்ளைகளை எங்களிடம் விடுவிக்கப்பட வேண்டம், தமிழ் அரசியல் கைதிகளுக்கான விடுதலை என்றால் அது மரணமா?" போன்ற வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு கதறி அழுது கண்ணீர்விட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். (த)

## இல்மனைற் அகழ்வுக்கு எதிரான போராட்டக்காரருடன் விக்கி சந்திப்பு

மட்டக்களப்பு, ஜூலை 23
வாகரை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கட்டுமுறிவு தொடக்கம் வெருகல் வரையான கடற்கரைப் பகுதியிலுள்ள இல்மனைற் கனிம வளம் நிறைந்த மணல் அகழ்வுக்கு எதிராக அந்தப் பகுதி மக்கள் தொடர் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இந்த நிலையில், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலர் நாயகமும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன். போராட் டக்காரர்களைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

கட்டுமுறிவு தொடக்கம் வெருகல் வரையான கடற்கரைப் பகுதியில் ஒரு நாளைக்கு 600 தொன் (150 பார ஊர்தி அளவு) மணல் வீதம் 30 வருடங்களுக்கு அகழ்ந்தெடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதாக காட்டப்படும் ஆவணங்கள் சட்டரீதியாக பெறப்பட்டிருக்க வில்லை. அது பற்றி அந்தப் பகுதி மக்களுக்குத் தெரியப்படுத்தவோ கருத்தறியவோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மக்களின் ஒப்புதல் பெறப்பட்டதாக இணைக்கப்பட்டிருக்கும் கையொப்ப பட்டியல்கூட போலியாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதனை நிரூபிக்கும் வகையில் குறித்த கையொப்ப பட்டியலில் இருப்பது தமது கையொப்பம் இல்லை என்று பலர் சத்தியக்கடதாசி மூலம் தந்துள்ளார்கள் என்று அந்தப் பிரதேச சமூக செயற்பாட்டாளர்கள் எடுத்துக்கூறியிருந்தனர்.

இந்த விடயம் குறித்து உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு தம்மையும் தமது பிரதேசத்தையும் பாதுகாக்குமாறு விக்னேஸ்வ ரனிடம் வாகரை கதிரவெளி மக்கள் வேண்டுகோள் விடுத்திருந்த னர். ஆவணங்களைப் பரிசீலித்து மேல் நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்திருந்தார். (த-ரி1)

# மக்களை இராணுவக் கெடுபிடிக்குள் வைத்திருக்கவே அரசு விரும்புகிறது

## கூட்டமைப்பின் சிறீதரன் எம்.பி. விசனம்

கிளிநொச்சி, ஜுலை 23

எமது மக்களைத் தொடர்ந்தும் இராணுவக்கெடுபிடிக்குள் வைத்திருக்கவே இலங்கையில் ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு அரசும் விரும்புகிறது. இந்த அரசும் அதையே கனகச்சிதமாகச் செய்கிறது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் குரும்பசிட்டி கிராம மக்களுடனான சந்திப்பு அங்கு அண்மையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது மக்களின் வாழ்க்கை போராட்டம் நிறைந்ததாகவே உள்ளது. எமது அடிப்படை அரசியல் உரிமைக்காகப் போராடிக் கொண்டு இருக்கிறோம். நில மீட்புக்காகப் போராடிக் கொண்டு இருக்கிறோம். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தொடர்ச்சியாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

இளையோர் வேலைவாய்ப்புக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தங்களின் வாழ்க்கைக்காகவே போராடிக் கொண்டிருக்கிறார்கள். அண்மையில்தான் இந்தப் பகுதி இராணுவத்தால் விடுவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அருகில் உள்ள கிராமங்களை இராணுவம் விடுவிக்காமல் தொடர்ந்தும் கையகப்படுத்தி வைத்துள்ளது. விவசாயம் செய்து எங்கள் வாழ்வியலை மேம்படுத்தக் கூடிய நிலங்களை எல்லாம் இராணுவம் கையகப்படுத்தி வைத்திருக்கிறது. நாங்கள் சுயமாக உழைத்து மேலெழும்பி விடாமல் தடுப்பதுதான் இவர்களின் நோக்கமா? என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

நிகழ்வில் பிரதேச சபையின் வட்டார உறுப்பினர் தங்கராசா, நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் லோகன், ஆலய நிர்வாகத்தினர், கிராம மாதர் அபிவிருத்தி சங்கங்களின் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-6)

# நாட்டினது பிரச்சினைகளை தீர்க்கவல்லவரே வேட்பாளர்

## சம்பிக்க தெரிவிப்பு



கொழும்பு, ஜுலை 23

நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்க வல்ல ஒருவரே வேட்பாளர் என்று தெரிவித்தார் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க.

காலி கோட்டையில் நேற்று முன்தினம் நடைபெற்ற காலி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொது வேட்பாளரைக் களமிறக்குவதற்கு முன்னர் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய பரந்த அரசியல் கூட்டணி அமைக்கப்பட்டு, அக்கூட்டணியின் அரசியல், பொருளாதார, சமூக வேலைத் திட்டங்கள் மற்றும் அதனை செயன்முறைப்படுத்துவதற்கான தலைமைத்துவக் குழு என்பவற்றை நாட்டுக்கு அறிமுகம் செய்ய வேண்டும். இந்த வேலைத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டதன் பின்னர் அதற்குப் பொருத்தமான பொது வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டும். நாட்டின் தலைவரைத் தீர்மானிப்பது அரசியல் கட்சிகளின் தலைவர் அல்லர். நாட்டிலுள்ள எந்தக் கட்சியிலும் சம்பந்தப்படாத 50 லட்சம் படித்த நடுத்தர சிந்தனையுள்ளவர்களே தமது தலைவரைத் தெரிவுசெய்ய வேண்டும். இதனால், ஒவ்வொரு கட்சிகளும் வேட்பாளர்களை முன்வைப்பதனை விடவும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய விடயம், இந்த 50 லட்சம் மக்களுக்குத் தேவையான செயற்திட்டத்தினையும், அதனைச் செயற்படுத்தும் தலைவர் யார் என்பதையும் தீர்மானிப்பதர்கும்- என்றார். (ம)

# மகிந்தவுக்கு உயர் விருது

கொழும்பு, ஜுலை 23

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஸவுக்கு இந்தியாவின் வேல்ட் ஐகன் விருதுவழங்கும்விழாவில் வைத்து நேற்றுமுன்தினம் பன்னாட்டு விருதொன்று வழங்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஸவின் தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நடைபேற்ற விழாவிலேயே இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் வல்லுநர்கள்10பேருக்கானவிருதுகளும் இந்த விழாவில் வழங்கப்பட்டன. இதன் போது, நாட்டில் நிலவிய30 வருடகாலப்போரை நிறைவு செய்தார் என்பதற்காக மகிந்தவுக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. (ம)

# பெரமுனவுடன் கூட்டணி சேர 15 கட்சிகள் தயார் நிலையில்

கொழும்பு, ஜுலை 23

சிறீலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் (பெரமுனவுடன்) கூட்டணி அமைப்பதற்கு15அரசியல்கட்சிகள்தயாராகவுள்ளன. எதிர்வரும் 26 ஆம் திகதி இந்த புதிய கூட்டணியில் அந்தக் கட்சிகள் கையொப்பமிடவுள்ளன என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறீலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் கூட்டணி அமைப்பதற்கு கட்சிகள், அமைப்புக்கள் அடங்கலாக 26 குழுக்கள் விருப்பம் தெரிவித்துள்ளன. இதில் 15 அரசியல் கட்சிகளும், கடந்த அரச தலைவர் தேர்தல் காலத்தில் இந்த அரசுக்கு ஆதரவு வழங்கிய கட்சிகளும் பொதுமக்கள் முன்னணியுடன் கூட்டணி அமைக்கவுள்ளன என்று தெரியவருகிறது.

கட்சியின் தலைமைத்துவம் எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுக் கூட்டத்தில் மகிந்த ராஜபக்ஸவிடம் கைமாறவுள்ளதாவும் தெரிவிக்கப்படுகின்றது. தற்பொழுது அந்தக் கட்சியின் தலைவராக பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் காணப்படுகின்றார்.

கட்சியின் தலைமைத்துவம் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர், அரச தலைவர் வேட்பாளர்யார்என்பதுகுறித்துமகிந்தவால் கட்சிக் கூட்டத்தில் அறிவிக்கப்படவுள்ளது. மகிந்தவால் அறிவிக்கப்படவுள்ள அரசதலைவர் வேட்பாளர் எதிர்வரும்12ஆம்திகதி அனுராதபுரஜயஸ்ரீமகாபோதிஉட்பட சமயஸ்தலங்களுக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபடவுள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)

# எவரை ஆதரிப்பதென இன்னும் முடிவில்லை

## இ.தொ.கா அறிவிப்பு

கொழும்பு, ஜுலை 23

நாட்டில் எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தல் உள்ளிட்ட அனைத்துத் தேர்தல்களிலும் எந்தக் கட்சியை ஆதரிப்பது என்று இன்னும் முடிவெடுக்கவில்லை என்று தெரிவித்தார் இ.தொ.காவின் உப செயலரும் முன்னாள் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டி.வி.சென்னன்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மைக்காலமாக தோட்டப் பகுதிகளுக்கு வரும் வெளிநபர்கள் தோட்டத் தொழிலாளர்களை சந்தித்து, கோத்தபாயவுக்கு வாக்களிக்கும்படி கோரிவருகின்றனர். மலையகத்தின் பிரபல தொழிற்சங்கமான இ.தொ.காவும் அவருக்கு ஆதரவு வழங்கியுள்ளது எனப் பரப்புரை செய்து வருகின்றனர். இது ஒரு தவறான பரப்புரையாகும். அவ்வாறு நாம் இதுவரை எந்த அறிவிப்பும் விடுக்கவில்லை. நாம் முன்வைத்துள்ள 30 அம்சக் கோரிக்கைகளை முன்வைப்பவர்களுக்கே எமது ஆதரவு வழங்கப்படும்.

அது தொடர்பான பேச்சுக்கள் நடத்தப்பட்டதும் நாமே எவருக்கு ஆதரவு என்பதை வெளிப்படையாக அறிவிப்போம் - என்றார். (ம)

# 4 ஆயிரத்து 387 சாரதிகள் இதுவரையில் கைதாகினர்

கொழும்பு, ஜுலை 23

மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களை கைது செய்யும் விதத்தில் பொலிஸார் முன்னெடுத்துள்ள சிறப்புச் சோதனை நடவடிக்கையின் போது 4 ஆயிரத்து 387 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

கடந்த 5ஆம் திகதி முதல் நேற்றுக் காலை 6 மணி வரையிலான காலப்பகுதியிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கை நாடு முழுவதும் ஒரு மாத காலத்துக்கு முன்னெடுக்கப்படும் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ம)

# குசூம் பீரிஸ் மறைந்தார்!

கொழும்பு, ஜுலை 23

மூத்த வானொலி அறிவிப்பாளரும், பாடலாசிரியரும் மற்றும் டப்பிங் கலைஞருமான குசூம் பீரிஸ் தனது 71ஆவது வயதில் நேற்றிரவு காலமானார்.

இவர் 'கேன் இவூரி' மற்றும் 'சிஹினாயகி ஓபா' போன்ற பாடல்களை எழுதிப் பிரபல்யமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

# துப்பாக்கி வைத்திருந்த இருவருக்கு மறியல்

கொழும்பு, ஜுலை 23

தானியங்கித் துப்பாக்கிகள் இரண்டு மற்றும் ஒரு தொகை ரவைகள் என்பன வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வைத்தியசாலைச் சிற்றூழியர் ஒருவரும் அவரது நண்பரும் எதிர்வரும் 29ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

காலி நீதிமன்ற பதில் நீதிபதி பீ.கே.எல்.பண்டார இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். உடுகம தெற்குப் பகுதியில் வசிக்கும் நிராஜ் அசங்க ஜயவர்தன எனும் பொடி சுத்தா என்பவரும், தொடந்துவவில் வசிக்கும் எரங்க லக்மால் திலகரத்ன ஆகிய சந்தேக நபர்கள் இருரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ம)

# ஐ.தே.க. கூட்டணி தொடர்பில் ஓகஸ்ட் 5ஆம் திகதி அறிவிப்பு

கொழும்பு, ஜுலை 23

ஐக்கிய தேசிய முன்னணியின் புதிய கூட்டணி தொடர்பில் எதிர்வரும் ஓகஸ்ட் 5 ஆம் திகதி நாட்டு மக்களுக்கு அறிமுகம் செய்யவுள்ளோம் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் வைத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டணி அமைப்பது தொடர்பிலான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன. கூட்டணியின் சின்னம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த அனைத்துத் தீர்மானங்கள் குறித்து எதிர்வரும் ஓகஸ்ட் 5ஆம் திகதி காலை 10 மணிக்கு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் வைத்து நாட்டு மக்களுக்கு அறிவிக்கவுள்ளோம். ஜனநாயக தேசிய முன்னணியாகவே இந்தக் கூட்டணி மக்களிடம் வருகின்றது - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# அகதிகள் 18 பேர் மீண்டும் நீர்கொழும்பில்

வவுனியா, ஜுலை 23

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் உள்ள வடமாகாண கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் தங்க வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டு அகதிகளில் 18 பேர் நீர்கொழும்புக்கு நேற்று முன்தினம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலையடுத்து நீர்கொழும்பில் தங்க வைக்கப்பட்டிருந்த ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அகதிகளில் ஒரு தொகுதியினர் இரண்டு கட்டங்களாக அழைத்துச் செல்லப்பட்டு வவுனியா பூந்தோட்டம் பகுதியில் உள்ள வடமாகாண கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

பிரதேச அரசியல்வாதிகள், பொது அமைப்புக்கள் எனப் பலரினதும் எதிர்ப்புக்கு மத்தியில் அவர்கள் இராணுவ பொலிஸ் பாதுகாப்புடன் தங்க வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 12 ஆண்களும் 4 பெண்களும் என 16 பேர் நேற்று மீண்டும் நீர்கொழுப்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (ம)

# அரச தலைவர் தேர்தலுக்கு முன் மாகாணத் தேர்தல் நடக்காது

## டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 23

அரச தலைவர் தேர்தல் இடம்பெறுவதற்கு முன்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது சாத்தியமற்றது. மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டுமாயின் அரசு உடனடியாக நாடாளுமன்றத்தில் எல்லை நிர்ணய மீளாய்வு அறிக்கையினையும், மாகாண சபை தேர்தல் திருத்தம் தொடர்பான பிரேரணையையும் சமர்பிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப் பெரும தெரிவித்தார்.



சிறீலங்கா பொதுமக்கள் முன்னணியின்தலைமைக்காரியாலயத்தில்நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் தேர்தல் இடம்பெறுவதற்கு முன்னர் மாகாண சபை தேர்தல் இடம்பெறாவிடின் தான் பதவி விலகுவதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளமை பொருத்தமற்றது. ஆணைக்குழுவின் தலைவர் பதவி விலகுவதால் மாத்திரம் பிரச்சினைகளுக்குத் தீர்வைக்காண முடியாது. மாறாக பிரச்சினைகள் மேலும் தீவிரமடையும்.

காலவரைறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகண சபை தேர்தலே முதலில் இடம்பெற வேண்டும். ஆனால் அரசியல் தேவைகளுக்காகவே மாகாண சபை தேர்தல் தேர்தல் திருத்த முறைமையினை காரணம்காட்டி பிற்போடப்பட்டது. இதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் சிறீலங்கா சுதந்திர கட்சி ஆகியனவும் பொறுப்புக்கூற வேண்டும் - என்றார். (ம)

# 50 ஆயிரம் தொன் நெல் கையிருப்பில்

## நெல் சந்தைப்படுத்தல் சபை தகவல்

கொழும்பு, ஜூலை 23

நெல்லை விற்பனை செய்வதற்கு ஆரம்பத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட போதிலும் தற்போதைய நிலைமைக்கு மத்தியில் அவற்றை மொத்தக் கையிருப்பாக வைத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டிருப்பதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் கஸ்தூரி அனுராதநாயக்க தெரிவித்துள்ளார்.

சம்பா மற்றும் நாட்டு நெல் இந்த மொத்தக் கையிருப்பில்அடங்கியுள்ளது. 50ஆயிரம் மெற்றிக்தொன் நெல் தற்போது களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சந்தையில் அரிசி விலையை அதிகரிப்பதற்கு தனியார்வர்த்தகர்கள்செயற்பட்டால், நுகர்வோருக்குநிவாரணம் வழங்கும் வகையில், இந்த நெல் சந்தைக்கு விநியோ கிக்கப்படும் என்றும் நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் கஸ்தூரி அனுராதநாயக்க மேலும் தெரிவித்தார். (ம)

# 16 ஆயிரம் பேருக்கு அரச வேலைவாய்ப்பு

## அமைச்சர் கபீர் தகவல்

கொழும்பு, ஜூலை 23



நாட்டிலுள்ள பட்டதாரிகள் 16 ஆயிரம் பேருக்கு இம் மாத இறுதியில் அரச துறைகளில் நியமனம் வழங்கப்படும் என அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

ஹட்டன் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் மொழி பேசும் பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளன. எதிர்வரும் மூன்றுமாதகாலப்பகுதியில் இளைஞர் யுவதி களுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க துரித நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# மகிந்த பக்கமிருந்து ஐ.தே.கவுக்கு பலர்!

## பிரதி அமைச்சர் அஜித் தகவல்

கொழும்பு, ஜூலை 23

மகிந்த ராஜபக்சவுடன் சேர்ந்து கொண்டுள்ள முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் சகலரும் புதிதாக உருவாக்கும் கூட்டணியுடன் இணைந்து கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று பிரதி அமைச்சர் அஜித் பீ.பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறீலங்கா பொதுமக்கள் முன்னணியின் உருவாக்கத்தினால், அதிருப்தியில் உள்ள வாக்குப் பலமுள்ள சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய கூட்டணியுடன் இணைந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

வெற்றிபெறும் கூட்டணியுடன் அணிசேர்வது என்பது யதார்த்தமானது. அந்த வகையில் ஐக்கிய தேசியக் கட்சியுடன்கூட்டணிஅமைக்கும் இந்த உறுப்பினர்கள் சகலருடனும் அரசதலைவர் தேர்தலை வெற்றி கொள்வது இலகுவானது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# பெரமுன – சுதந்திரக் கட்சி நாளைமறுதினம் மீண்டும் பேச்சு

புதிய அரசியல் கூட்டணி ஒன்றை அமைப்பது தொடர்பிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் சிறீலங்கா பொதுமக்கள் முன்னணி ஆகியவற்றுக்கு இடையிலான 7ஆம் கட்டப் பேச்சு நாளைமறுதினம் இடம்பெறவுள்ளது.

குறித்த கலந்துரையாடல் எதிர்க்கட்சி தலைவரின் காரியாலயத்தில் இடம்பெறும் என பொதுமக்கள் முன்னணியின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். இதுவரை நடைபெற்றுள்ள கலந்துரையாடல்களில் கொள்கையளவிலான 25 காரணிகள் தொடர்பில் இருதரப்பினரும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாக பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். (ம)

# பயங்கரவாதம் தொடர்பில் புதிய சட்டங்கள் தேவை!

## தலைமை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 23



இலங்கையில் பயங்கரவாதம் தொடர்பில் புதிய சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். பழைய சட்டங்களினால் நாட்டில் புதுவடிவ பயங்கரவாதத்துக்கு முகம் கொடுக்க முடியாது என தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

மாத்தறை சனத் ஜயசூரிய விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயேதலைமை அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சட்டம் என்பது அடிக்கடி மாற்றம்செய்யப்படக் கூடிய ஒன்றாகும். இங்கிலாந்தில் மாத்திரம் 2001 இற்கும் 2019 இற்கும் இடைப்பட்ட காலத்தில் பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டம் 15 தடவைகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவிலும் இவ்வாறு சட்டம் மாற்றப்பட்டுள்ளது. எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதத்தை ஒழித்தது போன்று. ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதத்தை' ஒழிக்க முடியாது. அதற்கு எமது நாட்டில் சட்டத்தை மாற்றம் செய்ய வேண்டும். சிலர் சட்டத்தை மாற்றக் கூடாது எனக் கருத்துத் தெரிவித்து வருகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# போராட்டத்தை வலியுறுத்திய நாள்தான் 83ஆம் ஆண்டு கறுப்பு ஜூலைத் தினம்

## சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு

மன்னார், ஜூலை 23

தமிழர்கள் தாங்களாகவே தனித்தேசம் கோரிப் போராட வேண்டும் என்பதை தமிழர்களுக்கு அடையாளப்படுத்திய நாள் சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்ட நாள்தான் இன்றைய கறுப்பு ஜூலை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

தமிழர்களுக்கு எதிராகச் சிங்களவர்களால் நடத்தப்பட்ட இனவெறித்தாக்குதலின் 36ஆவது ஆண்டு இன்று. இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கறுப்பு ஜூலையானது 1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதியிலிருந்து இரண்டு வாரங்கள் தொடர்ச்சியாக தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இன வெறித்தாக்குதலின் அடையாளம்.

1983ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் திகதி விடுதலைப்புலிகள் திரு நெல்வேலியில் நடத்திய மிகப்பெரிய வலிந்த தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அவர்களின் உடல்கள் கணத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டன. அதன்பின்னர் பௌத்த பிக்குகள் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டனர் என்றுகூறி பொய் வதந்திகளைப் பரப்பி அந்தப் பகுதியைச் சூழவும் குவிக்கப்பட்ட குண்டர்களால் தமிழர்களின் கடைகள் சூறையாடப்பட்டு தமிழர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்ட அனைவரும் கொல்லப்பட்ட நிகழ்வு நடந்தேறியது.

இவை அனைத்தும் இலங்கைப் பாதுகாப்புப் படையினரின் முன்பாகவே நடந்தேறின. இதில் மூவாயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலின் போது பொரளைச் சந்தியில் நிர்வாணப்படுத்தப்பட்டு ஒரு தமிழர் கொல்லப்படுவதற்கு முன் ஒரு சிங்கள புகைப்பட கலைஞரால் எடுக்கப்பட்ட புகைப்படம் வெளிவந்து உலகை உலுக்கியிருந்தது. எனவே தமிழர்களை ஆளும் தகுதியை அன்றே இந்த சிங்களவர்கள் இழந்து விட்டார்கள். தொடர்ந்து வெலிக்கடைச் சிறையில் முதலில் 36 தமிழ் அரசியல் கைதிகள் கொல்லப்பட்டனர். திட்டமிட்டு திறந்துவிடப்பட்ட சிங்கள கைதிகளாலும் அதே போல் சமையல் கூடங்கள் திறந்துவிடப்பட்டு இரும்பு, பொல்லுகள் போன்ற ஆயதங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டு தமிழ்அரசியல்கைதிகளாகப்பிடித்து வைத்திருந்த 54 தமிழ் அரசியல் கைதிகள் அடித்துக் கொல்லப்பட்டார்கள்.

அரச படைகள் அனைத்தையும் தங்களது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு தமிழர்களுக்கு எதிரான படுகொலைகளை நிறைவேற்றி இருந்தார்கள் என்பதுதான் உண்மை. 83 காலப்பகுதியில் பெரும் படுகொலைகள் நடந்த இந்த நாட்டில் தமிழர்களுக்கான உரிமைகள் அன்றே அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். அன்றிலிருந்து இன்று வரை அங்கீகரிக்கவில்லை என்பது கவலைக்குரியது.

இன்றைய காலகட்டத்தில் விடுதலைப் புலிகளைப்பின்னடைவுசெய்யவைத்த பின் பன்னாடுகள் தமிழர்களுக்கான அனைத்துத் தீர்வுகளையும் பெற்றுத் தருவதாகக் கூறியிருந்தன. ஆனால் இன்று அனைத்து நாடுகளும் பாராமுகம் காட்டுவது தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி. எனவே கடந்த காலங்களில் கற்றுக் கொண்ட பாடங்களை மீண்டும் அவர்கள் மீட்டுப்பார்க்கத் தயாராக இல்லை. தற்பொழுதுள்ள சிங்கள பேரினவாத அரசுகள் நாடாளுமன்றில் கொண்டுவரப்பட்ட அரசமைப்பில் தமிழர்களுக்கான உரிமைகளை ஏற்றுக் கொண்டு தமிழர்களின் வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகம் என்று ஏற்றுக்கொள்ளாத வரையிலும் இந்த நாட்டில் என்றுமே அமைதி நிலவப் போவதில்லை. தொடர்ந்தும் பெரும் அழிவுகளை இந்த நாடு சந்திக்கப்போகின்றது என்பதையே சிங்களவர்களின் நிகழ்ச்சி நிரல் காட்டி நிற்கின்றது.

எந்த சிங்கள தேசிய கட்சிகளும் இந்த நாட்டின் உண்மையான யதார்த்த நிலையைப் புரிந்து கொண்டு நாட்டில் உள்ள மக்களுக்கு நிம்மதி யான வாழ்வை மக்களுக்கு கொடுக்க பின்நின்று வருகின்றன.

இதே போல் சிங்கப்பூர் நாடு இலங்கையை விட தண்ணீர் மற்றும் ஒழுங்கில் பெரு வளர்ச்சியைக் கண்டிருக்கிறார்கள் என்றால் அவர்கள் இன மத பேதங்களின்றி ஒற்றுமையாக வாழ்கிறார்கள். அப்படி விட்டுக்கொடுப்பு நல்லிணக்க செயற்பாடுகளைச் செய்யும் மன நிலைஇலங்கைசிங்களவர்கள்இல்லை. ஆகவே ஒட்டுமொத்த இலங்கை நாட்டை ஆளும் தகுதி சிங்களவர்களுக்கு இல்லை. பௌத்தவாதங்களை வீசிக்கொண்டிருக்கும் 'இவர்களால் இந்த நாட்டில் எங்களைக் காப்பாற்ற முடியாது - என்றார். (கு-213)



# இலங்கையின் இருண்ட நாள் கறுப்பு ஜூலை

ஈழத் தமிழர்கள் எதிர்கொண்ட இன ஒடுக்குமுறைக்குள் முக்கியத்துவம் பெறுகின்ற நாள்களில் கறுப்பு ஜூலையும் ஒன்று. இலங்கையில் இனவாதத்தில் இருண்ட நாள்களாக 1983ஆம் ஆண்டின் ஜூலை மாதத்து கடைசி வாரநாள்கள் கருதப்படுகின்றன.
இதற்கு முன்னரும்கூட 1956, 1958, 1977 மற்றும் 1981 ஆகிய வருடங்களிலும் இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும் 1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடந்த வன்செயல்கள்தான் இவையாவற்றிலும் மிகக்கொடூர மான ஒன்றாகக் கருதப்படுகிறது.
இந்தச் சம்பவம் இடம்பெற்று தற்போது 36 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் கூட, இன்றும்கூட அதன் சுவடுகள் 1983ஆம் ஆண்டின் கறுப்பு ஜூலை என்ற அடைமொழியுடன் சகலரின் நினைவுகளிலும் பதிந்துள்ளன.

## ஜூலைக் கலவர ஆரம்பம்

36 வருடங்களுக்கு முன்னர், 1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி ஒரு சனிக்கிழமையன்று வடக்கில் வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில், அவருடைய பிரதித்தலைவர் செல்லக்கிளி அம்மானுடன் தமிழீழ விடுதலைப்புலிக ளால், இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக, யாழ்ப்பாணத்தின், திரு நெல்வேலியில் தபால்பெட்டி சந்தியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் லெப்-வாஸ் குணவர்த்தனவுடன் மேலும் 12 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.
இந்த சம்பவத்தின் எதிரொலியாக இலங்கை முழுவதிலும் தமிழர்களுக்கெதிரான வன்முறைகள் இனக்கலவரமாக வெடித்தன. இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் வெறியாட்டம் ஆடத்தொடங்கினர். பரவலாக 51பொது மக்கள் பல இடங்களிலுமாக இராணுவத்தினரின் வெறித்தனமான தாக்குதலில் சாவடைந்தனர்.

## இராணுவத்தினரின் இறுதிச்சடங்கால் ஊதிப் பெருப்பிக்கப்பட்டது கலவரம்

மேலும் எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதுபோல, இறந்த இராணுவ வீரர்களுக்கு பெரிய அளவிலான சாவுச் சடங்கு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டதுடன், அரச வாகனங்களில் பெருமளவிலான மக்கள் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்வதற்காக கொண்டு வரப்பட்டதுடன் நிலமை மிக மோசமாக மாறத் தொடங்கியது. பௌத்த மதகுருமாரின் உரைகளால் நிலமை மேலும் மோசமாகத் தொடங்கியது.
பொலிஸ்மா அதிபர் ருத்ரா ராஜசிங்கம் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களான ஏர்னி பெரேரா மற்றும் ஆர்.சுந்தரலிங்கம் ஆகியோருடன் கனத்தைக்குச் சென்றபோது, நிலமை கட்டுக்கடங்காமற்போவதை உணர்ந்தார். பொலிஸ்மா அதிபர் நேரடியாக அரசதலைவரின் இல்லத்திற்குச் சென்று ஞாயிறு இரவு ஊரடங்குச் சட்டம் நடை முறைப்ப டுத்தப்படவேண்டும் என கோரிக்கை விடுத்தபோதும், அவரது அந்தக் கோரிக்கை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

## எசல முழுநிலவு நாள்

ஞாயிறு மாலையானபோது நிலமை தமிழ் மக்களுக்கு எதிரான வன்செயலாக மாறத் தொடங்கியது. காடையர்கள் பொரளையை நோக்கியும் திம்பிரி கஸ்யாயவை நோக்கியும் நகரத் தொடங்கினர். தமிழர்களின் வீடுகளும், வியாபார நிலையங்களும் காடையர்களால் தாக்கப்பட்டு தீயிடப்பட்டன.
அன்று பௌர்ணமி நிலவு மேகங்களூடாக வரவில்லை. தமிழர்களின் வீடுகளும், வியாபார நிலையங்களும் சுவாலைவிட்டு எரிந்த தீயினால் வெளியான புகைக் கூட்டத்தினூடாகவே நிலவு மலர்ந்தது.
25ஆம் திகதி திங்கட்கிழமை தமிழர்களுக்கு எதிரான வன்முறை காட்டுத்தீபோல பரவத் தொடங்கியது. மலையகத் தமிழர்களின் தனிப்பெரும் தலைவரான சௌமியமூர்த்தி தொண்டமான், பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் "அந்த ஞாயிற்றுக்கிழமைக்குப் பின்னர் வந்த திங்களன்றுதான் இந்தப் படுகொலைகள் நிகழ்ந்துள்ளள் ளன" அதாவது "சண்டே சில், மண்டே கில்" என்பதன் விளக்கம், ஞாயிறு அன்று பௌத்தர்கள் விகாரைக்குச் சென்று மத வழிபாடுகளை (சில்) மேற்கொண்ட பின்னர் திங்களில் (கில்) கொலைகள் செய்தனர்" என விமர்சித்திருந்தார்.
பொலிஸ்மா அதிபர் ரூத்ரா ராஜசிங்கம் தொடர்ந்தும் ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்படி அரசதலைவர் ஜயவர்தனவை வற்புறுத்தியபோதிலும், திங்கள் பிற்பகலில் தான் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.
ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட போதிலும் வன்செயல்கள் 27ஆம் திகதி புதன்கிழமையும் தொடர்ந்தன. 28ஆம் திகதி, இந்திய தலைமை அமைச்சர் இந்திராகாந்தி தம்முடைய விசேட தூதுவராக இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் நரசிம்ம ராவை இலங்கைக்கு அனுப்பிவைத்திருந்தார். ஜூலை 30மற்றும் 31ஆம் திகதிகளில் வன்செயல்கள் படிப்படியாக குறை யத்தொடங்கின.



## அரசின் மழுப்பல்

முழுசிங்கள சமூகத்தின் மீதும் அரசதலைவரும் அவருடைய அரசும் பழிபோட்டுவிட்டுத் தாங்கள் குறை கூறப்படுவதைத் தவிர்த்துக் கொண்டுவிட்டனர். கறுப்பு ஜூலை 83 என்ற சம்பவத்துக்கான பொறுப்பு முழுமையாக சிங்கள மக்கள் மீது சுமத்தப்பட்டது.
ஒரு சிறு தொகையினரான சிங்கள இனவாதிகள் நாட்டுக்காகவும் தங்கள் இனத்துக்காகவும் செயற்படுவதாக கூறி ஆடிய வெறியாட்டத்தை பெரும்பாலான சிங்கள மக்கள் செய்வதறியாது அந்த வன்செயல்களை அச்சத்துடன் பார்த்துக்கொண்டிருந்தனர்.
சிங்கள காடையர்களுக்கு இந்த வன்செயல் ஒரு களியாட்டவிழா போன்றதாகவேயிருந்தது. குறிப்பிட்ட இந்தக் காடையர்குழு அந்தக் காலகட்டத்தில் ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பின்னணியுடன், அந்த உறுப்பினர்களது முழுமையான பக்கபலத்துடன் எந்த வித தண்டனையுமின்றி நடமாடியது.
குறிப்பிட்ட இந்த காடையர்கள் குழுவிடம் தமிழர்களின் இருப்பிடங்களும் அவர்களுக்குச் சொந்தமான வியாபார நிலையங்கள் போன்ற விபரங்களடங்கிய பட்டியல் இருந்தது. அத்து டன் சிங்கள மக்களுக்குச் சொந்தமான கட்டிடங்களில் இயங்கிய தமிழர்களின் வர்த்தக நிலையங்களில் அந்தக் கட்டிடங்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படுத்தப்படாமல் அங்குள்ள பொருள்கள் மட்டுமே அடித்து நொருக்கப்பட்டு தீவைக்கப்பட்டன.
ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சார்பான தொழிற்சங்கமான ஜாதிக சேவையாளர் சங்க உறுப்பினர்களின் தலைமையிலேயே இந்தக் காடையர்கள் இயங்கினர். அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் மாநகரசபை, நகரசபை உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் நெருங்கிய ஆதரவாளர்களும் இந்த வன்முறைகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர்.
இந்த வன்முறையாளர்களை கைது செய்ய வேண்டாமென ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல்வாதிகள் பலர பொலிசாருக்கு அறிவித்திருந்தனர்.

## காடையர்களும் குண்டர்களும்

அநேகமான சந்தர்ப்பங்களில் பெரும் அளவிலான காடையர்களும் குண்டர்களும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வாகனங்களில் அல்லது அரச நிறுவ னங்களது வாகனங்களிலுமே ஏற்றிச் செல்லப்பட்டார்கள். அது மட்டுமல்லாது உணவுப் பொதிகளும், மதுபானமும்கூட இந்தக் காடையர்களுக்கு குறைவின்றி வழங்கப்பட்டுள்ளன.
இந்த இனக்கலவரத்தின்போது கடும் இனவாதப் போக்குடைய அமைச்சர் சிரில் மத்தியூவும் அவருடைய அரசியல் கையாட்களும் நடந்து கொண்டவிதம் பற்றி சகலரும் அறிவார்கள். அன்று இந்த வன்செயலில் சம்பந்தப்பட்டவர்கள் இன்றும் கூட அரசியலில் முக்கிய புள்ளிகளாக திகழ்கிறார்கள்.
ஏற்கனவே குறிப்பிடப்பட்டதுபோல 1983 ஜூலைக் கலவரம் திடீரென உருவானதல்ல. அது திட்டமிடப்பட்ட படுகொலையாகும். திட்டமிடப்பட்ட படுகொலை எனக்கூறும் போது அது வன்செயலாக இருக்கலாம், காடையர்களின் தாக்குதலாக இருக்கலாம், அது அரசின் அனுசரணையுடன் அல்லது இராணுவத்தின் பின்புலத்துடன், ஒரு குறிப்பிட்ட இனத்தவர்கள் அல்லது மதத்தினருக்கு எதிரான நடவடிக்கைகளின்போது கொலை, கொள்ளை போன்ற வன்செயல்களுடன் அந்த குறிப்பிட்ட பகுதியினரின் வீடுகள், சொத்துக்கள், சமயத்தலங்கள் சகலவற்றையும் தாக்குவதுதான் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.
அது மட்டுமல்லாது 1983ஜூலை கலவரமானது வவுனியா, திருகோணமலை மற்றும் பேராதெனியா பல்கலைக்கழகம் போன்ற தமிழர்களும் சிங்களவர்களும் கலந்து வாழ்ந்த பகுதிகள் வரையில் விரிவடைந்தது. ஜே.ஆர் இது இயற்கையான ஒரு விடயம் என சிங்கள மக்கள் மேல் பழியை போட்டுவிட்டார்.
பாதிக்கப்பட்ட தமிழர்களையிட்டு கவலைப்படாமல் அரசதலைவர் பிரிவின வார்தத்தை தடை செய்யும் சட்டமொன்று நிறை வேற்றப்படும் - என்றார்.
1983ஆம் ஆண்டின் ஜூலை மாத வன்முறையில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதில் தவறுதலாக கொல்லப்பட்ட முஸ்லீம்க ளும் அடங்குவர். ஆயிரக்கணக்கானோர் காயமுற்றனர். காயப்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டவர்கள் அங்கு கொல்லப்பட்டனர். இந்த வன்முறைகள் காரணமாக இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர் மக்கள் இடம்பெயர்ந்தனர். ஒரு இலட்சத்து 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் தற்கால அகதிமுகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.
2ஆயிரத்து ஐந்நூறு வியாபாரத் தலங்கள், தொழிற்சாலைகள், பெட்டிக்கடைகள் என உடைத்து நொறுக்கப்பட்டன. அழிக்கவும் பட்டன. உடைத்து நொறுக்கி அழிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை கணிக்கப்படவில்லை.
பெரிய அளவிலான இழப்பீடுகள் கொலைகள், உயிரிழப்புக்கள், இடப்பெயர்வுகள், மறுக்கப்பட்ட உரிமைகள் இவற்றினால் பாதிக்கப்பட்ட இலங்கை மற்றும் இந்தியத் தமிழர்களின் வாழ்க்கையில் ஜூலை மாதம் என்பது ஒரு துக்க தினமாகவே என்றும் நினைவில் நிற்கும்.
சகல இலங்கையர்களும் 1983 ஜூலை மாத சம்பவத்தை ஒரு பைத்தியகார நிகழ்வாக எண்ணி மறந்து, நல்ல மனிதாபிமான எதிர்காலத்தை எதிர்பார்க்கிறார்கள். ஆயினும் ஒரு நிலையான சுதந்திர வாழ்வுக்கு நிரந்தரப் பாதுகாப்புத் தேவை. அடிக்கடி ஞாபகத்திற்கு வரும் 1983ஆம் ஆண்டு ஜூலை மாத பயங்கர நிலமை, மீண்டும் உருவாகாமற் தடுப்பது அவசியமாகிறது.

# விக்கிக்கு எதிரான வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 5ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஜூலை 23
வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் பா.டெனீஸ்வரனை அமைச்சுப் பதவியில் நீக்கியமை செல்லாது எனப் பிறப்பித்த இடைக்காலத் தடை உத்தரவின் இறுதித் தீர்ப்பு எதிர்வரும் 5ஆம் திகதி மேன் முறையீட்டு நீதிமன்றில் வழங்கப்படவுள்ளது.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் பா.டெனீஸ்வரனை முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பதவி நீக்கியதுடன், அமைச்சரவையும் மாற்றம் செய்திருந்தார். அவ்வாறு தன்னை இடை நிறுத்தியமை சட்டவிரோதமானது என உத்தரவிடக்கோரி டெனீஸ்வரன் மேன் முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். மேன்முறையீட்டு நீதிமன்றம் டெனீஸ்வரனே தொடர்ந்தும் சட்டபூர்வ அமைச்சர் எனவும் அவரை நீக்கியமை செல்லாது எனவும் உத்தரவிட்டதுடன், பதவி நீக்கத்துக்கு இடைக்காலத்தடை உத்தரவு பிறப்பித்திருந்த நிலையில் வழக்கு தொடர்ந்தும் இடம் பெற்றது.

இந்தவழக்குவிசாரணைகள் யாவும் நிறைவுற்று இரு தரப்பின் இறுதிச் சமர்ப்பணங்களும் நிறைவுற்ற நிலையில் நேற்று இறுதித் தீர்ப்புக்குத் திகதியிடப்பட்டது. இந்த வழக்கின் இறுதி தீர்ப்பு எதிர்வரும் ஓகஸ்ட் மாதல் 5ஆம் திகதி இடம்பெறும் என நீதியரசர்களான மகிந்த சமயவர்த்தன மற்றும்பிரியந்தபெனான்டோ ஆகியோர் அறிவித்துள்ளனர். (எ-105)

## கன்னியா..

அந்த மனு திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தலைமையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சட்டத்தரணிகளின் சமர்ப்பணங்களைத் தொடர்ந்து, திருகோணமலை மேல்நீதிமன்றம் நான்கு இடைக்காலக் கட்டளைகளை வழங்கியுள்ளது.

பிக்குகள் அனுமதிச்சீட்டு விற்றுப் பணம் பெற முடியாது என்றும், இந்துக்கள் சுதந்திரமாகச் சென்று சமயக் கடமைகளை நிறைவேற்ற முடியும் என்றும் மேல் நீதிமன்று கட்டளை வழங்கியதுடன், ஆலயத்தை அதன் தர்மகர்த்தா சபையே தொடர்ந்து நிர்வகிக்க வேண்டும் என்றும், மாரியம்மன் ஆலயம் மற்றும் அதற்குச் சொந்தமான ஏனையவழிபாட்டிடங்களைச் சீரமைப்புச் செய்வதை எவரும் தடுக்கக்கூடாது என்றும் நீதிமன்று தனது கட்டளையில் தெரிவித்துள்ளது.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணி உதயகுமார் பிரஷாந்தினியின் அறிவுறுத்தலின்படி அரச தலைவர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையானார். இது தொடர்பாக சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது:

நாங்கள் கேட்டுக்கொண்ட இடைக்காலத் தடையுத்தரவு ஐந்தில் நான்கை நீதிமன்றம் வழங்கியுள்ளது. இதில் ஒரு இடைக்காலத் தடையுத்தரவு பௌத்தர்களால் இடிக்கப்பட்ட கன்னியா பிள்ளையார் ஆலயத்தை மீளக் கட்டுவதை எவரும் தடுக்கக் கூடாது என்று கேட்டிருந்தோம். ஆனால் நீதிமன்றம் இணங்கவில்லை. அது சம்பந்தமாக தொல்பொருள் திணைக்களம் அரசிதழ் அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது. இந்த வழக்கின் இடையே அல்லது வழக்கின் இறுதியில் இது தொடர்பாக இரு தரப்பினரையும் விசாரித்து தீர்ப்பு வழங்கப்படும் என்று மன்று கூறியுள்ளது.

மிக அவசரமான ஏனைய நான்கு விடயங்களுக்கும் நீதிமன்றத்தால் இடைக்காலத் தடையுத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டளைகளை நீதிமன்றப் பதிவாளர் ஊடாக அனுப்புகின்ற அறிவித்தலையும் எதிர் மனுதாரர் இருவருக்கும் அனுப்பி அவர்கள் இருவரையும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 29ஆம்திகதிநீதிமன்றத்தில்முன்னிலையாக வேண்டும் என்று அழைப்பாணையும் அனுப்பப்பட்டுள்ளது.

அவசரமாக இன்னுமொரு கோரிக்கையையும் நீதிமன்றில் முன்வைத்தோம். இந்தக் கன்னியா வெந்நீரூற்றில்தான் இறந்த தங்களுடைய மூதாதைகளுக்கான பிதிர்க் கடன்களை இந்து சமயத்தவர் செய்வது வழக்கம். அதிவும் சிறப்பாக ஆடி ஆமாவாசையன்று அதை அனைவரும் மேற்கொள்வது வழக்கம். எதிர்வரும் 31ஆம் திகதி ஆடி அமாவாசை தினம் ஆதலால் இந்துப் பக்தர்கள் அங்கு செல்வதைச் சிலர் தடுப்பார்கள் என்று சுட்டிக்காட்டியிருந்தோம். அப்படித் தடுக்கக் கூடாது என்ற தடையுத்தரவு தற்போது'கிடைக்கப் பெற்றுள்ளது. எனவே, எந்தத் தடையும் இல்லாது இந்துக்கள் ஆடி அமாவாசை தினத்தில் தங்களது கிரியைகளை மேற்கொள்ள முடியும்" என்றார். (எ-22)

## 3 இளைஞர்கள்...

தெரிவித்தனர். அவர்களில் இருவர் சாவகச்சேரியைச் சேர்ந்தவர் என்றும், மற்றையவர் சுதுமலையைச் சேர்ந்தவர் என்றும் தெரிவித்த பொலிஸார் சுதுமலையைச் சேர்ந்தவர் மானிப்பாய் பொலிஸாரிடம் சரணடைந்தார் என்றும் தெரிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மானிப்பாயில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்த நிலையில் அவருடன் வந்தவர்கள் என்று கூறப்படும் குழுவினர் தப்பிச் சென்றிருந்தனர். இது தொடர்பாக விசாரணைகள் நடந்துவரும் நிலையில் அதன் தொடர்ச்சியாகவே நேற்று 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, சுதுமலைப் பகுதியில் இருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-106,26)

## உரிய...

டிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

நாட்டில் அடுத்தவரும் தேர்தல்கள் தொடர்பாக தேர்தல்கள் செயலகம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் செய்தியாளர் சந்திப்பு ராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல்கள் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போதே தேர்தல்கள் ஆணையாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அடுத்த அரச தலைவர் தேர்தலை எதிர்வரும் நவம்பர் மாதம் 9 ஆம் திகதிக்கும் டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதிம் இடையே நடத்தியே ஆகவேண்டும். நவம்பர் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை என்பதால் அன்று தேர்தலை நடத்த முடியாது. டிசெம்பர் 8 ஆம் திகதியும் ஞாயிற்றுக்கிழமை என்பதால் அன்றும் இந்தத் தேர்தலை நடத்த முடியாது.

அதேபோன்று நவம்பர் 11, 12, 13, 14 ஆம் திகதிகளிலும் தேர்தலை நடத்த முடியாது. 14 ஆம் திகதி பௌர்ணமி தினம் என்பதால் தான் இந்தச் சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஏனெனில் விகாரைகளும் வாக்குச்சாவடிகளாக பயன்படுத்தப்படும் என்பதால், பௌர்னமி தின வழிபாடுகளுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது நாம் வாக்கெடுப்பை அங்கு மேற்கொள்ள முடியாது.

நவம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கும், டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதிக்கும் இடையே தேர்தலை நடத்துவதற்கான செயற்பாடுகளில் நாம் தற்போது ஈடுபட்டுள்ளோம்.

இதற்குள் எந்த தினத்தில் தேர்தலை நடத்தவும், நாம் தயார் என்பதை அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் மற்றும் சபாநாயகர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய அனைத்துத் தரப்பினருக்கும் இந்தவேளையில் அறிவித்துக்கொள்கிறேன். டிசெம்பர் 7 ஆம் திகதி அரச தலைவர் தேர்தல் நடைபெறும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்தியாவில் வைத்துக் குறிப்பிட்டிருந்தார். எனவே தேர்தல் உரிய நேரத்தில் நடந்தே ஆகும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம்.

ஆனால் அரச தலைவர் தேர்தலுக்கான திகதியை அரச தலைவரால் மட்டுமே மாற்றியமைக்க முடியும். அதுவும் முன்கூட்டி தேர்தலை நடத்த முடியுமே தவிர ஒருபோதும் பிற்போட முடியாது.

அரச தலைவர் எம்முடனான சந்திப்பின் போது, தேர்தல் உரிய காலத்தில் நடைபெறும் என்பதையே கூறியிருந்தார். ஒருவேளை உலகம் அழிந்தால் மட்டும்தான் இந்தத் தேர்தல் நடைபெறாது போகுமே தவிர வேறு எந்தவொரு காரணத்துக்காகவும் தேர்தல் பிற்போடப்பட மாட்டாது. என்றார். (எ)

## ஹேமசிறி...

பர் பூஜித் ஜயசுந்தர ஆகியோர் நேற்று கொழும்புதலைமை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையாகினர்.

இவர்கள் இருவருக்கும் எதிராகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத் தினரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு, கொழும்பு தலைமை நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. முஸ்லிம் பயங்கரவாதக் குழுவின் ஊடாக ஏப்ரல் 21ஆம் திகதி நாட்டின் சில பகுதிகளில் தாக்குதல் நடத்தக்கூடும் என புலனாய்வுத் தகவல் கிடைத்தும், தாக்குதலைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காது கடமையை மீறியமை தொடர்பாகவே இவர்கள் இருவருக்கும் எதிராகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

வழக்கின் முதலாவது சந்தேகநபரான ஹேமசிறி பெர்னாண்டோவிடம் கடந்த 15 ஆம் திகதி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் வாக்குமூலம் பெற்றுக் கொண்டனர் என்று சட்டமா அதிபர் சார்பில் மன்றில் முன்னிலையான பிரதி சொலிஸிஸ்டர் ஜெனரல் திலீப பீரிஸ் குறிப்பிட்டார். இரண்டாவது சந்தேகநபரான பூஜித் ஜயசுந்தரவிடம் கடந்த 18, 19 ஆம் திகதிகளில் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளப்பட்டது என்றும், மேலதிக விசாரணைகளுக்கான இன்று (நேற்று) குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாக வேண்டும் என்று அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் பிரதி சொலிஷிஸ்டர் ஜெனரல் குறிப்பிட்டுள்ளார்.

பூஜித் ஜயசுந்தரவிடம் இன்று (நேற்று) வாக்குமூலம் பெற்றப்பட்டதன் பின்னர் அது தொடர்பாக மேலதிக விசாரணைகளை நடத்தி, முன்னேற்ற அறிக்கையை மன்றுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதி சொலிஷிஸ்டர் ஜெனரல் திலீப பீரிஸ் நேற்று மன்றில் அறிவித்தார்.

வழக்கின் பிரதிவாதிகளுக்கு கடந்த 9ஆம் திகதி நீதிமன்றத்தால் வழக்கப்பட்ட பிணை தொடர்பில்சட்டமாஅதிபர்திணைக்களத்தினூடாக ஊடக அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது என்றும், அந்த அறிக்கை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் பூஜித் ஜயசுந்தரவின் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி டில்ஷான் ஜயசூரிய கோரிக்கை விடுத்துள்ளார்.

அதன்போது, தகவல் அறியும் உரிமை சட்டம் நடைமுறையில் காணப்படுவதால், ஏதேனும் தகவல் தொடர்பாக விண்ணப்பிக்கும் போது, நிறுவனத் தலைவரின் அனுமதியுடன் அதை வழங்குவதற்கான உரிமை காணப்படுகின்றது என்று சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான பிரதி சொலிஸிஸ்டர் ஜெனரல் குறிப்பிட்டுள்ளார். விசாரணைகளை அடுத்து, இந்த வழக்கு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 3ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (எ)

## மைத்திரி...

நாட்டில் நடைமுறையில் இருக்கும் அவசர காலச் சட்டத்தை, இனியும் நீடிக்கப்போவதில்லை என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். கடந்த 8ஆம் திகதி முஸ்லிம் அரசியல் தலைவர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். கடந்த மே மாதம் வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்திருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, நாட்டின் பாதுகாப்பு நிலமைகள் வழமைக்குத் திரும்பியுள்ளன என்றும், இனிமேல் அவசரகாலச் சட்டத்தை நீடிக்க வேண்டிய தேவை இல்லை என்று கூறியிருந்தார். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தொடர்ச்சியாக கூறி வருகின்றபோதும், ஒவ்வொரு மாதமும் அவசர காலச் சட்டம் நீடிக்கப்பட்டு வருகின்றது.

நேற்று அவசர காலச் சட்டத்தை ஒரு மாதம் நீடிக்கும் சிறப்பு அரசிதழ் அறிவிப்பு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் வெளியிடப்பட்டுள்ளது.

பொதுப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2ஆவது பிரிவின் கீழ் அவசர காலச் சட்டம் நீடிக்கப்பட்டுள்ளது. (எ)

## கல்முனைச்...

டோம் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று நேரில் தெரிவித்தனர் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

அவர்களின் கோரிக்கைகள் தொடர்பாக ஒரு வாரத்துக்குள் தீர்வு பெற்றுத் தரப்படும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அரசிடம் முன்வைத்துள்ள கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளை மீளப் பொறுப்பேற்பதில்லை என்று நேற்றுமுன்தினம் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்ற சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. இந்த விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திப்பதற்கும் இதன் போது இணக்கம் காணப்பட்டது.

சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் தலைமையிலான முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசியின் வீட்டில் ஒன்றுகூடினார்கள். தலைமை அமைச்சரிடம் பேசவேண்டிய விடயங்கள் தொடர்பாக அதில் ஆராயப்பட்டன. கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம், முஸ்லிம்களின் பாதுகாப்பு விடயங்கள், உயிர்த்த ஞாயிறு தாக்குதலையடுத்துக் கைதுசெய்யப்பட்டுள்ள அப்பாவிகளில் மீதமுள்ளவர்களை விடுதலை செய்தல், வாழைச்சேனை பிரதேச சபை எல்லை விவகாரம், தோப்பூர் உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தல் உள்ளிட்ட பல விடயங்கள் அதில் கலந்துரையாடப்பட்டன. முக்கியமாகக் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பாக அங்கு சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பின் பின்னர் பிற்பகல் 3.30 மணியளவில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை அலரி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.

ஏற்கனவே கலந்துரையாடப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் தலைமை அமைச்சரிடம் எடுத்துக் கூறியுள்ளனர். கல்முனை வடக்கு பிரதேச செயலகம் விவகாரம் உட்படப் பல விடயங்களில் முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது. எனவே, கல்முனை வடக்கு பிரதேச செயலக நிர்வாகப் பிரச்சினை உட்பட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று ரவூப் ஹக்கீம் தலைமை அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

முன்னாள் முஸ்லிம் அமைச்சர்கள் இன்று செவ்வாய்க்கிழமை அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்க வேண்டும் என்றும், முன்வைக்கப்பட்டுள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் இன்னும் ஒரு வாரத்துக்குள் தீர்வு வழங்கப்படும் என்றும் தலைமை அமைச்சர் இதன்போது தெரிவித்துள்ளார்.

வாயால் கூறப்படுவதுபோல பிரச்சினைகள் தீர்க்கப்படுவதில்லை. இதற்குத் தீர்க்கமான உறுதியான முடிவுகளை எட்டும்வரை அமைச்சுகளை மீளப் பொறுப்பேற்பதில்லை எனவும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களது உறுதியான நிலைப்பாட்டை தலைமை அமைச்சரிடம் கூறியுள்ளனர். பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் காட்டிய தீவிரத்தன்மையைப் புரிந்துகொண்ட தலைமை அமைச்சர், நேற்றிரவே முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து தீர்க்கமானதொரு முடிவை எடுக்க வேண்டும் என்று உள்ளக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் வஜிர அபயவர்தனவுக்கு பணிப்புரை விடுத்தார். (எ-22)

# ஹொங்கொங் போராட்டத்தை பொறுத்துக்கொள்ள முடியாது

*சீனா அதிரடிப் பேச்சு*

பீஜிங்.ஜூலை 23
ஹொங்கொங்கில் நடைபெறும் போராட்டங்களைப் பொறுத்துக்கொள்ள முடியாது என்று சீனா அதிரடியாகத் தெரிவித்தது. ஹொங்கொங் போராட்டம் குறித்தும் அங்கு அரச அலுவலகங்கள் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுவது குறித்தும் சீனா தனது கண்டனத்தைப் பதிவு செய்தது. 'சில போராட்டக்காரர்களால் நாட்டின் அடிப்படைக் கொள்கை பாதிக்கப்பட்டுள்ளது. இதைப் பொறுத்துக்கொள்ள முடியாது' என்று தெரிவித்துள்ளார் சீனாவின் அயலுறவுக் கொள்கைச் செய்தித் தொடர்பாளர்.

பிரித்தானியாவின் காலணியாதிக்கத்திலிருந்து விடுபட்டதிலிருந்து தன்னாட்சிப் பிரதேசமாக இருந்துவரும் ஹொங்கொங்கில் சீனாவின் ஆதிக்கம் ஆரம்பமாவதைக் கண்டித்து அங்கு போராட்டம் நீடித்து வருகிறது. தற்சமயம் போராட்டக்காரர்களை இனம் தெரியாத குழு ஒன்று தாக்கியிருக்கிறது. இந்த நிலையில். இந்த விவகாரத்தில் மூக்கைநுழைக்காமல்இதுவரைஅமைதியாகஇருந்துவந்த சீனத்தரப்பிலிருந்துஇவ்வாறுஅதிரடிக்கருத்துவெளியிடப்பட்டிருக்கிறது.




# சிரியாவில் வான் தாக்குதல் மக்கள்பலர்கொன்றுகுவிப்பு

டமாஸ்கஸ்.ஜூலை 23
சிரியாவில் ஆயுததாரிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடந்த வான்வழித் தாக்குதலில் 23 பேர் சாவடைந்தனர். பலர் காயமடைந்தனர். சிரியாவின் வடகிழக்கில் ஆயுததாரிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளில் சிரிய அரசபடைகள்இந்தத்தாக்குதலை நடத்தின. ஆனால், இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் பலர் பொதுமக்கள் என்றுபன்னாட்டுப்போர்க் கண்காணிப்புக்குழுகூறியது. 30க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்த இந்தத் தாக்குதல்கள் தொடர்ந்து அந்தப் பகுதிகளில் நடந்து வருவதாகவும் கண்காணிப்புக் குழு மேலும்கூறியது.

**பின்னணி**
சிரியாவின் அதிபர் ஆசாத்துக்கும், ஐ.எஸ்.ஐ.எஸ் ஆயுததாரிகளுக்கும் இடையே கடந்த ஆறு ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. ஆசாத்துக்கு ரஷ்யா ஆதரவு அளிக்கிறது. ஆயுததாரிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சிரியாவின் பல்வேறு பகுதிகள் அரச படைகளால் மீட்கப்பட்டு விட்டன. சிரியாவின்வடகிழக்குப்பகுதியான இட்லிப் மாகாணம் ஆயுததாரிகளின் வசம் உள்ளது. இந்தப்போர்காரணமாகப்பல ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக அண்டை நாடுகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

## ஹொங்கொங் விவகாரம்

# முகமூடிக் கும்பல் அட்டகாசம் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல்




ஹொங்கொங்.ஜூலை 23
சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங்கொங்கில் வெள்ளை நிற மேலாடை மற்றும் முகமூடி அணிந்த கும்பல்ஒன்றுபோராட்டக்காரர்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தியது.
ஹொங்காங்கில் யுவான் லாங் மாவட்டத்தில்உள்ளதொடருந்துநிலையத்தில் இந்தச்சம்பவம்நடந்தத. போராட்டக்காரர்களை நோக்கிக் கையிலிருந்த ஆயுதங்களால் அந்தக் குழு சரமாரியாகத் தாக்கியது. இதில் போராட்டக்காரர்களில் 40க்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர். அதில் ஒருவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. போராட்டக்காரர்களைத் தாக்கியவர்கள் யார் என்றுஇதுவரைதெரியவில்லைஎன்று போராட்டக்காரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு பொலிஸார் விரைந்துவந்துஅந்தக்கும்பல்நடத்திய தாக்குதலைத்தடுக்கவில்லைஎன்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹொங்கொங்கில்பேரணிநடத்தியபோராட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசிக் கலைத்தனர். இதில் பலர் காயமடைந்தனர். இந்தநிலையிலேயேஇந்தத்தாக்குதல் நடந்துள்ளது.

**பின்னணி**
பிரிட்டனின் காலனி ஆதிக்கத்தில் இருந்த ஹொங்கொங் 1997ஆம் ஆண்டுசீனாவின்நிர்வாகப்பகுதிகளில் ஒன்றானது. சீனாவின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்தாலும். ஹொங்கொங் நாட்டுக்கெனத் தனியான பண அலகு. சட்டம். அரசமைப்புஎல்லாம்உள்ளன. இந்த நிலையில், குற்றவாளிகளைச் சீனாவுக்குப் பரிமாற்றம் செய்வதற்கான சட்டத் திருத்தத் தீர்மானம் ஒன்றைக்ஹொங்காங்நிர்வாகம்கடந்தசில நாள்களுக்கு முன்னர் கொண்டு வந்தது.
அந்தத் தீர்மானத்துக்குக் ஹொங்கொங்எதிர்க்கட்சியினரும்பொதுமக்களும்எதிர்ப்புத்தெரிவித்துப்போராட்டத்தில்இறங்கினர். அதனால்அந்தத்தீர்மானத்தை நிறுத்தி வைப்பதாக ஹொங்கொங் நிர்வாகத் தலைவர் கேரி லேம் அறிவித்தார்.
ஆனால். குறித்த தீர்மானத்தை முழுமையாக இல்லாதாக்குமாறு கோரி ஹொங்கொங்கில் சீனாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் பல்வேறு இடங்களில் போராட்டம் நடக்கிறது.

# பாலஸ்தீனர்களின்வீடுகளை இடித்தழிக்கிறது இஸ்ரேல்!

ஜெருசலேம்.ஜூலை 23
கிழக்கு ஜெருசலேமுக்கு அருகிலுள்ள பகுதிகளில் கட்டப்பட்ட பாலஸ்தீனர்களின் வீடுகளை இஸ்ரேல் இடித்தழித்தது. இஸ்ரேலால்ஆக்கிரமிப்புச்செய்யப்பட்ட அந்தப்பகுதிகளில்பாலஸ்தீனர்கள் வீடுகள்கட்டியுள்ளதாகஇஸ்ரேல்குற்றச்சாட்டிஇருந்தது. ஆனால்தமதுபகுதியில் தான்அந்தவீடுகள்கட்டப்பட்டிருப்பதாகப் பாலஸ்தீனத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக இஸ்ரேல் நீதிமன்றம் இஸ்ரேலுக்கு ஆதரவாகத் தீர்ப்பு அளித்தது. அதைத்தொடர்ந்துஇரவோடு இரவாகஅங்குள்ளவீடுகளைஇஸ்ரேல் இடித்தது. இதன்காரணமாகஅங்குள்ளவர்கள் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்தனர்.

**பின்னணி**
ஜெருசலமைஇஸ்ரேலின்தலைநகரமாக அமெரிக்கா அறிவித்ததைத் தொடர்ந்துபாலஸ்தீனம்-இஸ்ரேல் இடையேமோதல்அதிகரித்துவருகிறது. காசா எல்லையோரத்தில் ஆயிரக்கணக்கான பாலஸ்தீனர்கள் இஸ்ரேலை எதிர்த்துப் பேரணியாகச் சென்று வருகின்றனர். இதில் ஏராளமான பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர் . இது தொடர்பான விசாரணைக்குஐக்கியநாடுகள்சபைஅழைப்பு



விடுத்திருந்தது. 1967 ஆம் ஆண்டு நடந்த போரில் இஸ்ரேல் கிழக்கு ஜெருசலேம் மற்றும் தற்போது வீடுகள் அழிக்கப்பட்ட பகுதியைக் கைபற்றியது.

# எங்கள் வான் பயணத்துக்கு இடையூறளிக்கிறது வெனிசுலா

*குற்றஞ்சாட்டுகிறது அமெரிக்கா*



வோஷிங்டன். ஜூலை 23
தங்களின் வானூர்திப் பயணத்துக்கு இடையூறு அளித்ததாக வெனிசுலா மீது குற்றம் சாட்டியுள்ளது அமெரிக்க இராணுவம். கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்காவின் 'ஈ.பி.3 ஏரிஸ்' என்ற வானூர்தி பன்னாட்டு வான்பரப்பில் பறந்து கொண்டிருந்தபோது வெனிசுலாவின்போர்வானூர்தி, அமெரிக்கவானூர்திக்கு ஆபத்து விளைவிக்கும் விதமாகப் பறந்து அதன் பயணத்துக்கு இடையூறு செய்ததாக அமெரிக்க இராணுவ உயர் அதிகாரி தெரிவித்தார்.
வெனிசுலாவின் போர் வானூர்தி தங்களின் வானூர்திக்கு மிக அருகில் அச்சுறுத்தும் விதமாகவெகுநேரமாகப்பறந்தாகவும். ஆயினும் தங்கள் வானூர்திக்கோ அல்லது அதன் பணியாளர்களுக்கோ எதுவித பாதிப்பும் ஏற்படவில்லைஎனவும்அவர்மேலும்தெரிவித்தார். தங்கள்வானூர்திஎங்கு, எதற்காப்பயணித்தது என்பதையோ. இந்தச்சம்பவம்எந்தஇடத்தில் இடம்பெற்றது போன்ற விவரங்களையோ குறித்தஇராணுவஅதிகாரிவெளியிடவில்லை.
இந்தச் சம்பவம் தொடர்பாக வெனிசுலா அரசு குறிப்பிடுகையில், அமெரிக்காவின் வேவு வானூர்த்தி ஒன்று கராகஸ் நகர வானூர்தித்தளமான மைகுவைட்டியாவின் வான் பரப்பிலே பறந்தது.
அதுஎங்கள்வானூர்திகளுக்குஇடைஞ்சலாக. அச்சுறுத்தலாக இருந்தமையால் எங்களின் போர் வானூர்திகளில் இரண்டு, அந்த அமெரிக்கா வானூர்தியின் பயணத்தை இடைமறித்து அந்த வானூர்தியை வெனிசுலாவின் வான்பரப்பைவிட்டுவெளியேற்றின-என்றது.


# வைகோவைக்கட்டியணைத்து சுப்பிரமணியன்சுவாமிவாழ்த்து!

## இந்திய நாடாளுமன்றில் சம்பவம்

மாநிலங்களவைஉறுப்பினராகத்தெரிவுசெய்யப்பட்டம.தி.மு.காவின்பொதுச்செயலர்வைகோவைநாடாளுமன்றில்சந்தித்தார் சுப்பிரமணியன் சுவாமி. 23 ஆண்டுகளுக்குப்பின்னர் மாநிலங்களவை உறுப்பினராக நாடாளுமன்றத்தில் காலடி எடுத்து வைத்த வைகோவை வரவேற்ற சுப்பிரமணியன் சுவாமி அவரைக் கட்டி அணைத்து நலம் விசாரித்தார். சிரித்தபடியே அவருக்குப் பதிலளித்த வைகோ, பதிலுக்கு சுப்பிரமணியன்சுவாமியிடம் நலம்விசாரித்தார். புலிகளுக்குச் சார்பாகவும், இந்திய அரசுக்கு எதிராகவும் பேசி வருகின்ற வைகோவை, அதற்கு எதிரான அரசியல் நிலைப்பாட்டிலுள்ள சுப்ரமணியன் சுவாமி 2 நாள்களுக்கு முன்னர் கடுமையாக விமர்சித்திருந்ததுடன் நன்னெறிக் குழு மூலம் வைகோவின் தெரிவைநீக்குவதற்குவாய்ப்புள்ளதாஎனஆராயுமாறுஇந்தியத் துணை அதிபரைக் கேட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.







# விண்ணில் பாய்ந்தது சந்திரயான்2

புதுடெல்லி,ஜூலை 23
நிலவுப்பயணத்தின்இரண்டாவது திட்டமான இந்தியாவின் சந்திரயான்2 விண்கலம் நேற்றைய தினம் விண்ணில் ஏவப்பட்டது. இந்தியாவின் ஸ்ரீஹரிக்கோட்டா வில் உள்ள சதீஷ் தவான் வின்வெளி மையத்தில் உள்ள ஏவு தளத்தில்இருந்துஇந்தவிண்கலத்தைச் சுமந்துகொண்டு ஜி.எஸ்.எல்.வி. மார்க்111 ரொக்கெட்விண்ணில்பாய்ந்தது. கடந்த வாரம் ஏவப்படுவதாக இருந்து கடைசி நேரத்தில் நிறுத்தப்பட்டது இந்த விண்கலம். 2008ஆம் ஆண்டு இந்தியா தனது முதல்நிலவுப்பயணத்திட்டமான சந்திரயான்1 ஐ விண்ணில் ஏவியது. இந்த விண்கலம் நிலவில் தரையிறங்கவில்லை. நிலவைச் சுற்றிவந்து நிலவில் தண்ணீர் இருக்கிறதா என்பது பற்றிஆராய்ச்சிநடத்தியது. 150மில்லியன் டொலர் செலவில் தயாரிக்கப்பட்டுள்ளதற்போதையசந்திரயான்2இன் திட்டம் நிலவில் தண்ணீர் மற்றும் தாதுப்பொருள்கள்இருப்பதுபற்றியும், 'நிலவு'நடுக்கம்தொடர்பாகவும்ஆய்வுகள்செய்வதாகும். இந்தச்சந்திரயான் விண்கலத்தின் மூன்று பாகங்களில் ஒன்று செப்ரெம்பர் மாதம் 6 அல்லது 7ஆம் திகதியளவில் நிலவில் தரையிறங்கும் என்று எதிர்வுகூறப்படுகிறது.

## போர்த்துக்கலில் காட்டுத்தீ பெருமளவில் தீயணைப்பு முயற்சி!

லிஸ்பொன், ஜூலை 23
பேர்த்துக்கலில் பல இடங்களில் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது. இதனால் பலர் தங்களின் வீடுகளை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது.
தீயணைப்புப்பணிகளில்நூற்றுக்கணக்கான தீயணைப்புப்பணியாளர்கள்ஈடுபட்டுவருகின்றனர். போர்த்துக்கலின் மத்திய பகுதியில் உள்ளகாஸ்டெலோபிரான்கோஎன்றுஅழைக்கப்படும் மலைப் பிரதேசத்தில் மூன்று இடங்களில்இந்தத்தீஏற்பட்டுள்ளது. உலங்குவானூர்திகளும், வானூர்திகளும் இணைந்து இந்தத் தீயை அணைக்கும்பணியில்பெருமெடுப்பில் ஈடுபட்டுள்ளன. இந்தத் தீ காரணமாகப் பொது மக்களில்ஒருவரும்,தீயணைப்புப்பணியாளர்களில் 7பேரும் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தற்போது இரண்டு இடங்களில் இந்தத் தீ கட்டுக்குள் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதிக வெப்பநிலையேஇந்தக்காட்டுத்தீ ஏற்பட்டமைக்குக் காரணம் என்று கூறப்படுவதோடு, போர்த்துக்கல்லின் மத்திய மற்றும் தெற்குப் பகுதியில் தீ ஏற்படலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

# தந்த வேட்டை உச்சம்!



ஆபிரிக்க நாடுகளில் விலங்குகளைவேட்டையாடும் சம்பவங்கள் அதிகம் நடைபெறுகின்றன. அந்த வகையில் போட்ஸ்வானாவில் யானை ஒன்று தந்தத்துக்காகத்தலைவெட்டப்பட்டுக்கொலைசெய்யப்பட்டுள்ளது. இந்தக் காட்சியைஒளிப்படக் கலைஞர் ஒருவர் பதிவு செய்து வெளிப்படுத்தினார். வறண்ட காட்டின் நடுவே யானை ஒன்று தலை வெட்டப்பட்டுப் படுத்திருக்கும் காட்சியை அவர்வெளியிட்ட ஒளிப்படம்சித்திரிக்கிறது. போட்ஸ்வானாவில்வனவிலங்குகளைவேட்டையாடுவதற்கானதடைஅண்மையில் நீக்கப்பட்டது. தடைக்குமுன்னர்போட்ஸ்வானாவில்கடந்தஓராண்டில் நூற்றுக்கும் மேலான யானைகள் கொல்லப்பட்டன.
தற்போது அங்கு யானைகள் கொல்லப்படுவது அதிகரித்திருக்கிறது. இதற்குஎதிராகஉலகெங்கிலுமுள்ளசூழலியலாளர்கள், விலங்கியலாளர்கள் தமது கண்டனத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.



## இன்றைய நாள்

**மேடம்:** தாயின் அன்பும் ஆசியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு எளிதில் நிறைவேறும். உபரி வருமானம் கிடைக்கும். சுபசெய்தி வந்து சேரும். பெண்கள் புத்தாடை, ஆபரணம் வாங்குவர்.

**இடபம்:** நண்பரின் ஆதரவு எதிர்பார்த்தபடி கிடைக்கும். பலரும் வியக்கும் வகையில் தொழிலில் வளர்ச்சி உருவாகும். உபரி வருமானத்தை சேமிப்பீர்கள். பெண்கள் விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வர்.

**மிதுனம்:** மனதில் புதிய நம்பிக்கை மேலோங்கும். உற்சாகமுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில் வளர்ச்சி பெற நவீன மாற்றம் செய்வீர்கள். சேமிப்பு பணம் திடீர் செலவால் கரையும்.

**கடகம்:** மனதில் சஞ்சலம் ஏற்பட்டு மறையும். எதிலும் கவனமுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவுகளை தவிர்க்கவும்.

**சிம்மம்:** மனதில் பக்தி எண்ணம் அதிகரிக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை உயர்வால்லாபம்கூடும். தாயின் தேவையை அறிந்து பூர்த்தி செய்வீர்கள்.

**கன்னி:** திட்டமிட்ட பணிகளை ஆர்வமுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**துலாம்:** அக்கம்பக்கத்தவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தை பாதுகாப்பது நல்லது. சராசரி அளவில் பணவரவு கிடைக்கும். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும். நண்பரால் உதவி கிடைக்கும்..

**விருச்சிகம்:** திட்டமிட்ட செயலை மறக்கும் சூழ்நிலை ஏற்படலாம். குடும்பத்தினர் உதவிகரமாக செயல்படுவர். சகதொழில் சார்ந்தவரிடம் தேவையற்ற விவாதம் செய்ய வேண்டாம்.

**தனுசு:** மனதில் இருந்த குழப்பம் மறையும். வாழ்வில் வளர்ச்சி பெற கிடைத்தவாய்ப்பைபயன்படுத்துவீர்கள். தொழில் வியாபாரம் செழிக்க கூடுதலாக பணிபுரிவீர்கள்.

**மகரம்:** எதிலும் சுயமாக முடிவெடுப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி அதிகரிக்கும். மிதமான பணவரவு கிடைக்கும். சீரான ஓய்வு உடல்நலத்தை பாதுகாக்கும்.

**கும்பம்:** உழைப்பின் மீதான நம்பிக்கை வளரும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும்.

**மீனம்:** முக்கிய பணியை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழ்நிலை உருவாகி தொந்தரவு தரலாம். லாபம் சுமாராக இருக்கும். பெண்கள் தாய் வீட்டாரின் உதவியைக் கேட்டுப் பெறுவர்.

### பளுதூக்கும் போட்டியில்

# வடக்கு மாகாண பாடசாலை மாணவர்கள் பதக்க வேட்டை



ஜஸ்வரியா டனுசன் பஜினா சானியா திவானுஜன்
டிலுசா மகிழினி டினுசா மாதினி ஜெனிஸ்ரலா

யாழ்ப்பாணம், ஜூலை 23
இலங்கை பாடசாலை பளுதூக்கும் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான பளுதூக்கும் போட்டியில் வடக்கு மாகாண பாடசாலை மாணவர்கள் பதக்கங்களை வென்றனர்.

கேகாலை இராஜகிரிய டிப்பிட்டிய மகா வித்தியாயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பெண்களுக்கான பளுதூக்கும் போட்டியில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மாணவி ஜெ. பஜீனா 18 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் 64 கிலோ எடைப் பிரிவில் மொத்தமாக 107 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார். குருநகர் சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரி மாணவி எஸ்.ஐஸ்வரியா 18 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் 87 கிலோ எடைப் பிரிவில் மொத்தமாக 87 கிலோ பளுவைத் தூக்கி தங்கம் வென்றார். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி எ.சானியா 16 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் 71 கிலோ எடைப்பிரிவில் மொத்தமாக 92 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார். இளவாலை சென்.ஹென்றியரசர் கல்லூரி மாணவன் ஜே.டனுசன் 16 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் 73 கிலோ எடைப் பிரிவில் மொத்தமாக 110 கிலோ பளுவைத் தூக்கி தங்கம் வென்றார். இளவாலை கன்னியர்மடத்தைப் பிரதிநிதித்துவம் செய்த மாணவிகளான ஜே. டிலுசா 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் 81 கிலோ எடைப் பிரிவில் மொத்தமாக 103 கிலோ பளுவையும், 16 வயதுக்குட்பட்ட 40 கிலோ எடைப் பிரிவில் எம். மகிழினி 81 கிலோ பளுவையும் தூக்கி தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தனர். அத்தோடு அதே பாடசாலையைச் சேர்ந்த 18 வயதுக்குட்பட்ட 81 கிலோ எடைப் பிரிவில் எம்.டினுஷா 68 கிலோ பளுவையும், 55 கிலோ எடைப் பிரிவில் ஜெ.ஜெனிஸ்ரலா 70 கிலோ பளுவையும், 64 கிலோ எடைப் பிரிவில் எம். மாதினி 63 கிலோ பளுவையும் தூக்கி வெள்ளிப் பதக்கத்தை சுவீகரித்தனர். மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய மாணவன் எஸ்.திவானுசன் 18 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் 102 கிலோ எடைப் பிரிவில் மொத்தமாக 102 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றார். (23, 422)



## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 23
யாழ். கால் பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. மாலை 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் எவறெஸ்ட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்செழு வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியை எதிர்த்து சென். மைக்கல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

## குருநகர் பாடும்மீன் இறுதிக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 23
யாழ். கால் பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் எவ்.ஏ கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழ்க அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவற்குழி அன்னை விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்கு முன்னேறியது. குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணி சார்பில் தினேஷ் குமார், சாந்தன், கீதன் ஆகியோர் தலா ஓர் கோலைப் பதிவு செய்தனர்.





# சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி கிண்ணத்தைச் சுவீகரித்தது

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் கால்பந்தாட்ட பயிற்றுநர் அமரர் ரி.பி.பத்மநாதன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்ப்பாண மாவட்டத்தில் கால்பந்தாட்டத்தில் முன்னணியில் திகழும் அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி மோதியது. இதில் முதற்பாதி ஆட்டநேர முடிவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி கல்லூரி 2:1 என்ற கோல் கணக்கில் முன்னியிலிருந்தது.

நெல்லியடி மத்திய கல்லூரி அணி சார்பில் தவராஜ் 1 கோலையும், சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சார்பில் பவிராஜ், டார்வின் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் போட்டனர்.

இரண்டாம் பாதி ஆட்ட முடிவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பதிவு செய்தனர். நெல்லியடி மத்திய கல்லூரி அணி சார்பில் றொபின்சனும், சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சார்பில் சாம் ஒரு கோலையும் பதிவு செய்தனர்.

ஆட்ட நேர முடிவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது.



தொடராட்டநாயகன் தவராஜ்




ஆட்டநாயகன் பவிராஜ்

ஆட்ட நாயனாக சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர் பவிராஜ் தெரிவு செய்யப்பட்டார். தொடராட்ட நாயனாக நெல்லியடி மத்திய கல்லூரி அணி வீரர் தவராஜ் தெரிவானார்.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதியது. இதில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தை பிடித்தது. (23)

## பிரசாந்தினிக்கு 4ஆம் இடம்



31ஆவது தேசிய விளையாட்டுவிழாவின் இளைஞர் கழகங்களுக்கு இடையிலான இருபாலருக்குமான தேசிய மட்ட கரம் போட்டி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை கொழும்பு கரம் சம்மேளன உள்ள கரங்கில் இடம்பெற்றது.

இதில் பெண்களுக்கான கரம் போட்டியில் ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தை பிரதிநிதித்துப்படுத்தி பங்குபற்றிய பிரசாந்தினி 4ஆம் இடத்தை பெற்றார். (23)

## மூத்த வீரர்கள் வேணுமென்றே சொப்பினர்

### குல்தின் நைப் குற்றச்சாட்டு

நடைபெற்றுமுடிவடைந்த உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி ஒரு போட்டியில்கூட வெற்றி பெறாது படுதோல்வியடைந்து ஏமாற்றத்துடன் வெளியேறியது. இதனால் அந்த அணியில் பல்வேறு மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன. அதில் அணித்தலைவர் குல்தின் நைப் பதவியிலிருந்து நீக்கப்பட்டு ரசித் கான் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த நிலையில் உலகக் கிண்ணத் தொடரில் மூத்த வீரர்கள் வேண்டுமென்றே மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர் என்று குல்தின் நைப் குற்றம் சாட்டினார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்,

உலகக் கிண்ணப் போட்டியில் நாங்கள் அதிகளவில் மூத்த வீரர்களைச் சார்ந்துதான் இருந்தோம். ஆனால், அவர்கள் வேண்டுமென்றே சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. அணி தோல்வியடைந்த பின்னர் சோகத்தை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக சிரித்துக் கொண்டிருந்தனர். பந்து வீசுங்கள் என்று அவர்களிடம் நான் கூறும் போதும் கூட, அவர்கள் என்னை பார்க்கவில்லை - என்றார்.

---

## யமகுச்சி சம்பியன்

இந்தோனேசிய பூப்பந்தாட்டத் தொடரில் கிண்ணம் வென்றார் ஜப்பான் வீராங்கனை யமகுச்சி.

இந்தோனேசிய பூப்பந்தாட்டத் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.


ஜப்பான் வீராங்கனை யமகுச்சியை எதிர்த்து இந்திய வீராங்கனை பி.வி.சிந்து மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. 21:15, 21:16 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றார் யமகுச்சி. (ம)






### உலகக் கிண்ண வலைப்பந்தாட்டத்தில்

# நியூசிலாந்து திரில் வெற்றி




உலகக் கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டியில் 11 முறை சம்பியனான ஆஸ்திரேலிய அணியை வீழ்த்தி நியூசிலாந்து அணி ஐந்தாவது முறையாகவும் சம்பியனாகியது.

16 நாடுகள் பங்குபற்றும் உலகக் கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டி இங்கிலாந்தில் ஆரம்பமானது.

இதில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் நியூசிலாந்து - ஆஸ்திரேலிய அணிகள் மோதின. விறுவிறுப்பான ஆட்டத்தில் 52:51 என்ற கணக்கில் நியூசிலாந்து அணி ஆஸ்திரேலிய அணியை வீழ்த்தி திரில் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது.

இதேவேளை, 'பிளேஆப்' போட்டியில் தென்னாப்பிரிக்காவை எதிர்த்து இங்கிலாந்து 58:42 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றது.

## நான் தவறு செய்துவிட்டேன் அதற்காக வருந்த மாட்டேன்

### குமார் தர்மசேன தெரிவிப்பு



நடைபெற்று முடிவடைந்த உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் நியூசிலாந்து வீரர் குப்தில் வீசிய ஓவர் த்ரோவுக்கு 6 ஓட்டங்களை வழங்கி தவறு செய்துவிட்டேன். ஆனால் அந்த தவறுக்கு ஒருபோதும் நான் வருத்தம் தெரிவிக்கமாட்டேன் என்று இலங்கை நடுவர் தர்மசேன தெரிவித்தார்.

உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் இங்கிலாந்து- நியூசிலாந்து அணிகள் மோதின. இரு அணிகளும் சமநிலையில் ஓட்டங்களைப் பெற்றதால் சுப்பர் பந்துப்பரிமாற்ற முறை கடைப்பிடிக்கப்பட்டது. அதிலும் இரு அணிகளும் சமநிலையில் இருக்க அதிக பவுண்டரிகள் பெற்ற அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. இதில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்று தனது வரலாற்று வெற்றியைப் பதிவு செய்தது.

இந்தப்போட்டியின் இறுதிப்பந்துப் பரிமாற்றத்தில் வெற்றிக்கு 15 ஓட்டங்கள் இங்கிலாந்துக்கு தேவைப்பட்டது. இந்தப் பந்துப்பரிமாற்றத்தின் 4ஆவது பந்தில் ஸ்டோக்ஸ் 2 ஓட்டங்கள் ஓட முயற்சிக்கும்போது, குப்தில் பந்தைப் பிடித்து இலக்குக் காப்பாளரிடம் எறிந்தார். ஆனால், அது ஸ்ரோக்ஸின் துடுப்பு மட்டையில் பட்டு த்ரோவாக பவுண்டரி சென்றதால், இங்கிலாந்து அணிக்கு 6 ஓட்டங்கள் கிடைத்தது. இந்த பந்துப்பரிமாற்றத்தின் த்ரோதான் ஆட்டத்தின் திருப்பு முனையாக அமைந்தது. ஆனால் த்ரோ செய்யும் போது ஸ்டோக்ஸ் 2ஆவது ஓட்டத்தை முழுமையாக ஓடி முடிக்காத காரணத்தால், 5 ஓட்டங்கள் மட்டுமே நடுவர் வழங்கி இருக்க வேண்டும். ஆனால், 6 ஓட்டங்களை நடுவர் தர்மசேன வழங்கினார். இதனால், இறுதியில் ஆட்டம் சமநிலையில் முடியும் நிலை ஏற்பட்டது.

இதில் நடுவர் தர்மசேன வழங்கிய 6 ஓட்டங்கள் சமூக வலைதளங்களில் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. முன்னாள் வீரர்கள் பலரும், முன்னாள் நடுவர்களும் விமர்சித்திருந்தனர்.

இந்தச் சூழலில் நடுவர் தர்மசேன தெரிவித்தாவது:

தொலைக்காட்சி ரீப்ளேயில் காட்சிகளை பார்த்துக்கொண்டு அனைத்துக்கும் கருத்துக்கள் சொல்வது சிலருக்கு எளிதானதாகத்தான் இருக்கும். உலகக் கிண்ணப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் நியூசிலாந்து வீரர் குப்தில் த்ரோவுக்கு இங்கிலாந்து அணிக்கு 6 ஓட்டங்கள் வழங்கிய எனது முடிவு தவறானதுதான் என்பதை நான் தொலைக்காட்சி ரீப்ளேவை பார்த்தபோதுதான் தெரிந்து கொண்டேன்.

ஆனால், மைதானத்தில் நான் நடுவர் பணி செய்யும்போது, என்னால் அதனைப் பார்க்க முடியாது, எந்த வசதியும் எனக்கு இல்லையே. நான் தவறு செய்துவிட்டேன் இல்லை எனச் சொல்லவில்லை, ஆனால், அந்த தவறுக்காக நான் வருத்தப்படமாட்டேன். ஏனென்றால், நான் அந்த நேரத்தில் அளித்த முடிவுக்கு, பன்னாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை என்னை அழைத்துப் பாராட்டியது. அதுமட்டுமல்லாமல் அதுபோன்ற சிக்கலான நேரத்தில் மூன்றாவது நடுவரை அழைத்து பேசி முடிவு எடுக்க வேண்டும் என எந்தவிதமான பன்னாட்டு கிரிக்கெட் விதி முறையிலும் இல்லை. நான் களத்தில் இருந்த மற்றைய நடுவருடன் பேசினேன், என்னுடைய உரையாடலை அனைத்து நடுவர்களும் கேட்டார்கள். அப்போது தொலைக்காட்சி ரீப்ளேயை பார்த்து சொல்ல முடியாத நிலையில், ஸ்டோக்ஸ் 2ஆவது ஓட்டத்தை முழுமை செய்து விட்டார் என்று நினைத்துதான் 6 ஓட்டங்களை வழங்கினோம் - என்றார்.

---


# யுவான்டஸை வீழ்த்தி டோட்டன்ஹாம் அபாரம்

பன்னாட்டு சம்பியன்ஸ் கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் டோட்டன்ஹாம் அணி 3: 2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் யுவான்டஸ் - டோட்டன்ஹாம் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. முதல் பாதி ஆட்டத்தின் 30ஆவது நிமிடத்தில் டோட்டன்ஹாம் அணி வீரர் எரிக் லமேலா கோல் ஒன்றைப் போட முதல் பாதி ஆட்டத்தில் டோட்டன்ஹாம் 1:0 என முன்னிலையிலிருந்தது.

இரண்டாம் பாதி நேர ஆட்டம் ஆரம்பித்ததும் யுவான்டஸ் வீரர்கள் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ஆட்டத்தின் 56ஆவது நிமிடத்தில் ஹிகுயைனும், அடுத்த 4ஆவது நிமிடத்தில் கிறிஸ்டியானோ ரொனால்டோவும் கோல் அடிக்க யுவன்டாஸ் அணி 2:1என்ற கணக்கில் முன்னிலையிலிருந்தது. ஆனால் அந்த எண்ணிக்கை நீடிக்கவில்லை. மீண்டும் 65ஆவது நிமிடத்தில் டோட்டன்ஹாம் அணியின் லூகாஸ் மவுரா ஒரு கோலைப் போட 2:2 என சமநிலை அடைந்தது.

அதன்பின் இரு அணிகளும் முட்டி மோதிக் கொண்டு விளையாட ஆரம்பித்தனர். சுமார் 25 நிமிடங்கள் வரையில் இரு அணிகளாலும் எந்தவொரு கோலையும் பெற முடியவில்லை. 90 நிமிடங்கள் முடிந்த பின்னர் ஆட்ட நிறுத்தத்தை கணக்கிட்டு 4 நிமிடங்கள் கூடுதலாக வழங்கப்பட்டது. 3ஆவது நிமிடத்தில் டோட்டன்ஹாம் ஹாரி கேன் பாதி தூரத்துக்கு அப்பால் இருந்து அடித்த பந்து கோலாக மாறியது. இதனால் டோட்டன்ஹாம் அணி 3:2 என்ற கணக்கில் அபார வெற்றி பெற்றது.



ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1588 சீட்டிழுப்பு திகதி 22.07.2019
வெற்றி இலக்கங்கள் 20 33 58 70 ஆங்கில எழுத்து G
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ.34, 517, 264/=

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1009
சீட்டிழுப்பு திகதி 2019.07.21 ஞாயிற்றுக்கிழமை
W 34 52 58 62
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
சதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 3212 திகதி: 2019.07.22 திங்கட்கிழமை
SATURDAY FORTUNE நீலம்
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து 33 50 62 72 H
போனஸ் இலக்கம் 45
அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட் 52,609,570/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 677
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.07.22
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 72,242,525/-
வெற்றி இலக்கங்கள் 16 42 54 67 ஆங்கில எழுத்து L
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

Spoken English
அடிப்படையிலிருந்து ஆங்கிலத்தைப் பேசிப் பழக
3 மாத பயிற்சிப் பட்டறை (240hrs)
மிகக் குறைந்த கட்டணம்
6000/=

English Trainer Training (Teacher Training) Diploma
ஆங்கிலத்தை அடிப்படையிலிருந்து முழுமையாகக் கற்று ஆங்கிலத்தைக் கற்க விரும்புபவர்களுக்கு
▾ 4 மாத கற்கைநெறி (320hrs) ▾ மிகக் குறைந்த கட்டணம்
12,000/=

IELTS
Academic & General Training
Band - Above 6.5
▾ 3 Months (240 hrs)
Course Fees - 20,000/=
ஆரம்பம்:- 25.07.2019 வியாழன் - 8.30 am to 12.30 pm (Weekdays)
27.07.2019 சனி - 8.30 am to 12.30 pm (Weekends)
ELAS
Sir Pon Ramanathan Road, Thirunelvely, Jaffna.(பல்கலை எதிரில்)
076 697 3040/ 076 223 5678/ 021 221 2410

ஐரோப்பியக் கழகங்களுக்குஇடையிலான 2019 - 2020 பருவகாலம் ஆரம்பித்துள்ள நிலையில், இந்தத் தொடரில் அதிகளவு சாதிக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்தி தனது ஜெர்சியின் ஒளிப்படத்தை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்துள்ளார் அந்த அணியின் தலைவர் சேர்ஜியோ ராமோஸ். (ம)



துரித தபால்கள் பொதிகள் சேவை
DHL மூலம் அனுப்பப்படும் பொதிகள் 3 வேலை நாள்களில் ஒப்படைக்கப்படும்
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S Road, Jaffna
கிளை: திருநெல்வேலி, நெல்லியடி
077 755 4528

கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 471 சீட்டிழுப்பு திகதி: 2019.07.21
வர்ணம்: பச்சை ஞாயிற்றுக்கிழமை
J 07 14 53 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 132,058,943/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

சிறுநீரகம் உடன் தேவை
வவுனியாவிலுள்ள 46 வயதுடைய நபர் ஒருவருக்கு அவசரமாக $0^+$ பொசிட்டிவ் வகை சிறுநீரகம் உடன் தேவை.
வழங்க விரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
076 268 1747, 077 612 5054, 024 222 5572

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.



www.ambafrancelk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

# ஓய்வை அறிவித்தார் மலிங்க

இலங்கை அணியின் வேகப் பந்து வீச்சாளர் லசித் மலிங்க பங்களாதேஷ் அணியுடனான முதலாவது ஒரு நாள் போட்டியுடன் பன்னாட்டு ஒருநாள் கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வுபெறவுள்ளதாக அறிவித்துள்ளார். பங்களாதேஷ் அணி இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. இந்தப் போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

லசித் மலிங்க எதிர்வரும் 2020ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் இடம்பெறவுள்ள பன்னாட்டு ரி-20 உலகக் கிண்ணத் தொடர் வரை விளையாடவுள்ளதாக ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இதேவேளை, லசித் மலிங்க பங்களாதேஷ் அணியுடனான இந்தத் தொடருடன் ஒரு நாள் கிரிக்கெட் குறித்த ஓய்வு தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. ஏனெனில் அவர் ஆஸ்திரேலியாவில் குடியுரிமை பெற்றுள்ளதாகவும், அங்கு சென்று குடும்பத்துடன் குடியேறவுள்ளார் என்றும், அண்மையில் செய்திகள் பரவியிருந்தன. இந்த நிலையிலேயே நேற்று மலிங்க ஒருநாள் தொடர் ஓய்வு குறித்து உத்தியோகபூர்வமாக காணொளிப் பதிவொன்றினூடாக அறிவித்தார்.

மேலும் அந்தக் காணொளிப் பதிவில் 26ஆம் திகதி தான் விளையாடும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியை கண்டுகளிக்க இயலுமானால் ஆர்.பிரேமதாச மைதானத்துக்கு வருமாறும் ரசிகர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



வாடகைக்குக் கொடுக்கப்படும்
இல.113, பலாலி வீதியில் அமைந்துள்ள
சிறிய கடை
வாடகைக்குக்கொடுக்கப்படும்.
அலுவலகத் தேவைகளிற்கும் பயன்படுத்தலாம்
077 925 2370

## மரண அறிவித்தல்

குப்பிழான்

### திருமதி நேசராணி கணேசலிங்கம்



குப்பிழானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நேசராணி கணேசலிங்கம் நேற்று (22.07.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் ஞானமுத்து தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான நாகமணி சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் கணேசலிங்கத்தின் (ஓய்வுநிலை பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ்.பல்கலைக்கழகம்) பாசமிகு மனைவியும் அருளரசன், அருள்பிரியன் (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ்.பல்கலைக்கழகம்) அருள்மைந்தன் ஆகியோரின் அன்புத்தாயாரும் பிரியங்காவின் அன்பு மாமியும் புஷ்பராணி (பிரான்ஸ்), இந்திராணி (பிரான்ஸ்), ஜெயராணி (லண்டன்), பத்மராணி, சக்திதாசன் (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் சிவமலர், கமலாதேவி, சிவயோகநாதன் (பிரதேசசபை வலி.தெற்கு), நஞ்சகுமார், அருணகிரிநாதர், பிரகலா காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், சுத்தானந்தன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் உலகநாதன், இன்பம் தம்பதிகளின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (25.07.2019) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிழான் காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 848 2195 தகவல்: நா.கணேசலிங்கம் (கணவர்)

## மரண அறிவித்தல்

### பாலசிங்கம் இராஜேந்திரகுமார் (பொபி)



தோற்றம் 30.09.1945 மறைவு 20.07.2019

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் இராஜேந்திரகுமார் (பொபி) 20.07.2019 சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - தவமணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அருளானந்தம் - மகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற புனிதவதனியின் அன்புக் கணவரும், டினேஸ்குமார் (உரிமையாளர் - Smart Touch Mobile's), நொய்லின் (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலேந்திரகுமார், மகேந்திரகுமார் (சனா), செல்வேந்திரகுமார், சௌந்தரகுமார், இராஜ்குமார் (ராஜன்), றொபேந்திரகுமார் (றொபின்), சூரியகுமார் (சூரியன்), பத்மினி, தவக்குமார், ரஞ்சினி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் டிலோன், ராதா ஆகியோரின் மாமனாரும், ஜொஸ்லின், ஜோன், அக்ஷிகா, டிஷான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை 25.07.2019 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பண்டத்தரிப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

077 370 0662

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.